தி. சு. அவினாசிலிங்கம்

திருக்கேதார யாத்திரை



திருக்கேதார பத்ரிகாசிரம யாத்திரை

தி. சு. அவினாசிலிங்கம்

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்
கோயமுத்தூர் ஜில்லா


முதற் பதிப்பு: அக்டோபர் 1941
இரண்டாம் பதிப்பு: அக்டோபர் 1943
மூன்றாம் பதிப்பு: டிசம்பர் 1945
நான்காம் பதிப்பு: ஜூன் 1948

விலை ரூ. 1—4—0

வெளியிடுவோர்:

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய

வெளியீட்டுப்பகுதி
ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயம் போஸ்ட்,
கோயமுத்தூர் ஜில்லா.



யமுனோத்ரி
கங்கோத்ரி
உத்தரகாசி
டெஹ்ரி
சமஸ்தானம்
டெஹ்ரி
ராமபான
கௌரிகுண்டம்
கேதார்நாத்
திரிபுகநாராயணம்
குப்தகாசி
உகிமடம்
துங்கநாத்
மண்டல்
சட்டி
அகஸ்தியமுனி
பத்ரிநாத்
ஹநுமான்
சட்டி
பாண்டுகேஷ்வர்.
ஜோஷி மடம்
நிதி
குலாப்கோடி
பிபில்கோடி
சாமோலி
நந்தப்பிரயாகை
கர்ணப்பிரயாகை
ருத்ரப்பிரயாகை
அலக்நந்த கங்கா
ஸ்ரீநகர்
ஹரிஷிகேஷ்
தேவப்
பிரயாகை
ஹரித்வார்
கஹர்வால்
ஜில்லா
பிண்டாரி
தோவி
கங்கா
கருட்
ராணிகேத்
அல்மோரா
அல்மோரா
ஜில்லா.
காத்கோடம்

அடியேனை ஆட்கொண்டருளிய

ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின்

சிஷ்யர்

ஸ்ரீமத் சிவானந்த சுவாமிகள்

திருவடிகளுக்குச் சமர்ப்பிக்கப்பெற்றது

நான்காம் பதிப்பின் முகவுரை

இப் புத்தகம் நான்காம் பதிப்பாக வெளி வருகிறது. தமிழ் மக்களுக்குப் பழங் காலத்திலிருந்து இமயத்தின் பாலும், அதன் உச்சியிலிருக்கும் க்ஷேத்திரங்களின்பாலும் ஒரு கவர்ச்சி இருந்து வந்திருக்கிறது. அக்கவர்ச்சியும் அவர்களுக்கு இயல்பாகவுள்ள தெய்வ பக்தியுமே இப் புதிய பதிப்பிற்கு முக்கிய காரணமாகும்.

நான் இந்த யாத்திரையின்போது பெற்ற இன்பம் மிக உயர்வானது. இப்புத்தகத்தைப் படித்த பலர் இதனல் தூண்டப் பெற்று இமய யாத்திரை சென்று திரும்பி யிருக்கிறார்கள் என்பதும், அவர்களுக்கு இச்சிறு நூல் மிகவும் உதவியாக இருந்ததென்பதும் எனக்குப் பெரிதும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

இப்பதிப்பை அழகாகக் கொண்டு வர உதவிய சென்னை கமர்ஷியல் அச்சுக்கூடத்தாருக்கும், இது சம்பந்தமான காரியங்கள் அனைத்தையும் செய்ய உதவிய எனது வித்யாலய சகோதரர் திரு. ம. ப. பெரியசாமித் தூரனுக்கும் என் மனமார்ந்த அன்பு உரியது.

சென்னை
25—6—48

தி. சு. அவினாசிலிங்கம்

முன்னுரை

தமிழ் நாடும் தமிழ்மக்களும் முன்னேற வேண்டும். இன்று நம் தாய்மொழியில் பல விஷயங்களைப் பற்றிப் புத்தகங்களே இல்லாமை ஒரு பெருங் குறைபாக இருக்கின்றது. தமிழ் இலக்கியம் தொன்மையும் உயர்வும் வாய்ந்ததென்றாலும், தமிழன் தனது அறிவைப் பல்வேறு துறைகளிலும் விருத்திசெய்து கொள்வதற்கு ஏதுவான நூல்கள் தமிழில் கிடையா. பழையதும் புதியதுமான எல்லாச் சாஸ்திரங்களையும் கற்றுக்கொள்ளத் தமிழில நூல்கள் இயற்றினால், அது, தமிழும் தமிழ்மக்களும் தழைத்தோங்கச் செய்யவல்ல ஓர் அரும்பணியாகும்.

வித்யாலயம் குருகுல முறையில் பிள்ளைகளுக்குப் பயிற்சி யளிப்பதன்மூலம் நன்றான சேவையைத் தமிழ் நாட்டிற்குச் செய்துகொண்டு வருகிறது. அதனோடு இப் பணியாலும் இயன்ற அளவு சேவைசெய்ப விரும்பி நிற்கின்றது. எல்லோரும் சுலபமாக அறிந்து கொள்ளும்படியான எளிய நடையில் விஞ்ஞானம், வைத்தியம், பொருளாதாரம் முதலிய சாஸ்திரங்களிலும், புதிய இலக்கியத் துறைகளிலும் பிறபாஷைகளிலுள்ள அரிய நூல்களை மொழிபெயர்த்தும் புத்தகங்கள் வெளியிடவேண்டியது அவசியமாக இருக்கிறது.

தமிழ் எழுத்தாளர்களும், பொதுமக்களும் இம் முயற்சிக்கு ஆதரவளித்து எங்களுக்கு ஊக்கமளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவ்வரிய சேவையைச் செய்வதற்குத் திருப்பூர் பிரபல பஞ்சு வியாபாரிகளான ஸ்ரீ கே. ஆர். ஈஸ்வரமூர்த்திக் கவுண்டர் அவர்களும், ஸ்ரீ பெருமாள் செட்டியார் அவர்களும் ஐயாயிரம் ரூபாயும், கோவை ஸ்ரீ டி. ஏ. இராமலிங்கம் செட்டியார் அவர்கள் ஆயிரம் ரூபாயும் அன்புடன் உதவியிருக்கிறார்கள். அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நூலே, தமிழன்னைக்கு நாங்கள் செய்யும் அர்ச்சனையின் முதல் மலராகும். இதைத் தொடர்ந்து பல துறைகளிலும் நூல்கள் வெளிவரும். தமிழ்த்தாய் சகல கலைகளிலும் மேன்மையெய்தி, தமிழ் மக்கள் எல்லாத் துறைகளிலும் சிறந்த அறிவு பெற்று விளங்க வேண்டுமென்பதே எங்கள் பிரார்த்தனை.

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்
விஜயதசமி, 1941

தி. சு. அவினாசிலிங்கம்,
நா. ம. ரா. சுப்பராமன்,
காரியதரிசிகள்

முகவுரை

கேதார் பத்ரி யாத்திரை போய்வந்து சுமார் மூன்று வருஷங்களாகின்றன. இந்த யாத்திரையைப்பற்றி ஆனந்த விகடனிலும், ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயத்திலும் சுருக்கமாய்ச் சில வியாசங்கள் எழுதியிருந்தேன். திருச்சி வானொலி நிலையத்திலும் இதைப்பற்றிப் பேசும்படி கேட்டிருந்தார்கள். இவ்வெழுத்துக்களும், பேச்சுக்களும் நண்பர்கள் மனதில் இதைப்பற்றி உற்சாகம் உண்டாக்கின. இந்த யாத்திரையைப்பற்றி விரிவாக எழுதிப் பிரசுரம் செய்வது, அங்குச் செல்ல விரும்பும் தமிழ்ச் சகோதரர்களுக்கு உதவியாக இருக்குமென அவர்கள் கருதினர்கள். சத்தியாக்கிரக இயக்கத்தின் காரணமாய்ச் சிறைக்கு வந்தது, இதற்கு வேண்டிய அவகாசம் அளித்தது.

இதைப் படித்துப் பார்த்துப் பிழைகளைத் திருத்தி உதவிய நண்பர்கள் சர்தார் வேதரத்னம், ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி, ஸ்ரீ கு. சு. பெரியசாமி முதலியவர்களுக்கு என் வந்தனம் உரியதாகும்.

இந்நூலை அழகாக அச்சிட எல்லா விதங்களிலும் அன்புடன் உதவி செய்த சக்தி பிரஸ் லிமிடெட் நிர்வாகிகளுக்கும் எங்கள் அன்பு உரியதாகும்.


திருச்சிச் சிறை
24-2-'41

தி. சு. அவினாசிலிங்கம்.

உள்ளுறை



விஷ்ணு பிரயாகைக் கருகி



கேதார் நாத்
(வெண்மையா யிருப்பது உறைபனி)



அலகநந்தா கரையில் பத்ரிநாத்



சதபந்த் போகும் வழியில் உறைபனி மூடிய மலைத் தொடர்களின் காட்சி. இந்த ஆறு மாலை ஐந்து மணிக்கு உறைந்து விடும்.



தண்டி சாது



க. யாத்திரைக்கு ஏற்பாடுகள்

திருக்கேதாரம், பத்ரிகாசிரமம்—இவ்விரு க்ஷேத்திரங்களும் ஹிமாலய மலை யுச்சியில் இருக்கின்றன. திருக்கேதாரத்தைக் கேதார் அல்லது கேதார்நாத் என்றும், பத்ரிகாசிரமத்தை பத்ரி, பத்ரிநாத் அல்லது பத்ரிநாராயண் என்றும் சொல்வதுண்டு. இவை இந்தியாவின் வடகோடியிலே சதா உறைபனி மூடிய சிகரங்களின் மத்தியில் இருக்கின்றன. ஹிமாலயமென்றுலே பலவிதமான எண்ணங்கள் நம் மனதில் தோன்றுகின்றன: உலகிலுள்ள சிகரங்கள் அனைத்திலும் உயர்ந்த மலைச் சிகரங்கள்; அவற்றைப்போலவே சாதனையிலும் தூய்மையிலும் உயர்ந்த சாதுக்கள்; பல புனித க்ஷேத்திரங்கள்—இவை நிறைந்தனவா யிருக்கின்றன. ஸ்தூலத்தில் உயர்ந்திருப்பது போன்றே மிக உயர்ந்த எண்ணங்களுக்கும் அது உறைவிடமா யிருக்கிறது. புண்ணிய தீர்த்தங்களெனக் கருதப்படும் மகத்தான ஆறுகள்—கங்கை, யமுனை, சிந்து, பிரமபுத்திரா முதலியன—ஹிமாலயத்தின் உச்சியில் உற்பத்தியாகி, நம் நாடு செழிக்கப் பல திக்குகளிலும் ஓடி, நாட்டை அழகு செய்கின்றன. மனிதவர்க்கத்திற்கே பேரின்பமூட்டும் உயர்ந்த கருத்துக்களும் அங்கே உற்பத்தியாகிப் பல்வேறு காலங்களிலும் உலகை உயிர்ப்பித்திருக்கின்றன. இத்தகைய புனிதம் நிறைந்த இவ்விமாலய க்ஷேத்திரங்களைத் தரிசிக்கவேண்டுமென்ற அவா கொஞ்சகாலமாகவே என் மனதிலிருந்து வந்தது. 1937-ஆம்

வருஷம் செப்டம்பர் மாதம் நடந்த இந்திய சட்டசபைக் கூட்டத்திற்குப் பிறகு, எனக்கு இதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

கேதார், பத்ரி யாத்திரைக்கு இரண்டு பருவங்கள் உண்டு. அங்கே கோயில்கள் வேனிற்கால ஆரம்பமான மே மாதத்தில் திறக்கப்படுகின்றன; அக்டோபர் கடைசியில் மூடப்படுகின்றன. சாதாரணமாக, இந்த யாத்திரையில் ஈடுபடுகிறவர்கள் மே மாதத்திலேயே ஹரித்துவாரத்திலிருந்து புறப்பட்டுச் செல்வார்கள். இவர்கள் ஜூலை மாதம் இரண்டாம் வாரத்திற்குள் திரும்பி வந்துவிட வேண்டும். ஏனெனில், அது சமயம் மழை ஆரம்பித்துவிடும். மழைக் காலத்தில் யாத்திரையை நடத்துவது கடினம். சாதாரணமாக, செப்டம்பர் இரண்டாம் வாரத்திற்குள் மழை நின்று, யாத்திரையின் இரண்டாம் பருவம் ஆரம்பிக்கும். இந்தப் பருவத்தில் யாத்திரிகர்கள் அதிகமிரார்; எனவே, இப்பருவத்தில் சாவகாசமாக யாத்திரை செய்யலாம். முதற் பருவத்தில் யாத்திரிகர்கள் அதிகமாதலால், போகும் வழியிலுள்ள சுகாதார நிலைமை மோசமாகவேயிருக்கும். இரண்டாம் பருவத்தில் இச்சங்கடம் அதிகமாயிராது. ஆனல் முதற் பருவத்தில் * **பாபா காளி கம்பளிவாலா** அவர்களின் சத்திரங்கள் திறந்திருக்கும். அவற்றின்மூலம் சாதுக்களுக்கு உணவும், மற்றவர்களுக்கு வேறு சில சௌகரியங்களும் கிடைக்கும். இரண்டாம் பருவத்தின்போது இச்சத்திரங்கள் மூடப்பட்டிருக்குமாகையால் இவ்வசதிகள் கிடைக்கமாட்டா. நாங்கள் இரண்டாம் பருவத்திலே சென்றோம்.

சாதாரணமாக, தென்னிந்தியாவிலிருந்து செல்லும் யாத்திரிகர்கள் ஹரித்துவாரத்திலிருந்து புறப்படுவார்கள். ஆனல், நாங்கள் அல்மோராவிலிருந்து புறப்பட்டோம்.

* இவரைப் பற்றிய விவரங்கள் 17-ஆம் பக்கம் காண்க.

தென்னட்டில் உதகமண்டலம் மாதிரி, ஹிமாலயத்தில் அல்மோரா தேகாரோக்கியத்திற்கு ஒரு நல்ல இடம். காத்கோடம்வரை ரயிலில் சென்று, அதற்குமேல் அல்மோராவுக்கு மோட்டாரில் செல்லவேண்டும். காத்கோடம், மலையடிவாரத்தில் ஒரு சிறிய ஊர். அங்கிருந்து அல்மோரா சுமார் எண்பது மைல். அல்மோரா பல ஹிமாலய யாத்திரைகளுக்கு ஆரம்ப ஸ்தாபனமாக இருக்கிறது. கைலாய யாத்திரைக்குப் புறப்படுகிறவர்கள் சாதாரணமாக இங்கிருந்துதான் புறப்படுகிறார்கள். கேதார், பத்ரி, கங்கோத்ரி, யமுனோத்ரி செல்லும் யாத்திரிகர்களும் இங்கிருந்து புறப்படுவதுண்டு. யாத்திரைக்குச் செல்பவர்கள் அதற்காக வேண்டிய சாமான்களைத் தாங்கள் புறப்படுமிடத்திலிருந்தே தயார் செய்துகொள்ள வேண்டியது அவசியம்.

நம் ஊரில் நாம் ரயிலிலும், பஸ்ஸிலும் ஏறிப்போவது வழக்கம். இச் சௌகரியமில்லாத இடங்களில் குதிரை வண்டிகள் அல்லது மாட்டு வண்டிகளாவது கிடைக்கும். ஹிமாலய யாத்திரைகளில் இவ் வாகன வசதிகள் கிடையா. அங்குப் பாதைகள் மலைச்சரிவுகளில் வெட்டிவிடப்பட்டவை; கப்பிரோடுகள் அல்ல; தவிர, குறுகலாகவும், சில சமயங்களில் மிகச் செங்குத்தாகவும் இருக்கும். எனவே பஸ், மோட்டார் அல்லது எந்த வண்டியும் இவற்றில் போகமுடியாது. சாதாரணமாய்ப் பெரும்பாலோர் நடந்தே செல்வார்கள். நடக்கமுடியாதவர்கள் குதிரையின்மேல் செல்லலாம். இக் குதிரைச் சவாரிக்கு, முன் பழக்கம் வேண்டிய அவசியம் இல்லை. அதிக வேகமாய்ப் போகுமென்று அஞ்சவும் வேண்டாம். 'மாதம் காதவழி' என்பது இவற்றிற்குப் பொருந்தும். இவற்றை எவ்வளவு துரிதப்படுத்தினலும் மணிக்கு மூன்று அல்லது நான்கு மைல்களுக்குமேல் போகா. குதிரைமீது ஏறமுடியாதவர்கள் கனம் குறைந்தவர்களானல் கண்டி வைத்துக்கொள்ளலாம். கண்டியென்பது ஒரு கூடை. அதை ஒருவன்

முதுகில் சுமந்து செல்வான். பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்து கொள்வதுபோல், அதில் உட்கார்ந்துகொள்ளலாம். கனம் அதிகமாயிருப்பவர்கள் **தண்டி** வைத்துக்கொள்ளவேண்டும். அதுவும் ஒரு சாய்வு நாற்காலி போலவேயிருக்கும். அதை நான்கு பேர் தூக்கிக்கொண்டு போவார்கள். அதிகத் தூரம் போகவேண்டுமென்றால், மத்தியில் மாற்றிக்கொள்வதற்கு இன்னும் இரண்டு பேர் வேண்டும். ஆசாமி கனமாயிருந்தால் எட்டுப் பேர்களும் வேண்டியிருக்கும். தண்டி வைப்பது, எல்லாவற்றிலும் செலவு அதிகம். அதற்கடுத்தபடி கண்டியும், குதிரையும். சாமான்களைக் குதிரை அல்லது ஆள் மூலந்தான் கொண்டு போகவேண்டும். யாத்திரைக்கு முன் இவற்றையெல்லாம் தயார் செய்துகொள்ளவேண்டும். நாங்கள் முழுவதும் நடந்தே சென்றோம்.

சாமான் கொண்டுபோவதில் சில விஷயங்கள் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். சாமான் எவ்வளவு குறைவாய்க் கொண்டுபோகமுடியுமோ, அவ்வளவு நல்லது. இரண்டு ராத்தல் எடையுள்ள சாமானுக்குக் கூலி சராசரி ஒரு ரூபாயாகிறது. சட்டை, பனியன், வேட்டி, துண்டு—இவை ஒவ்வொன்றிலும் மூன்று இருந்தால் போதுமானது. அன்றாடம் அவற்றைத் துவைத்து உடுத்திக்கொள்ளலாம். கம்பளிச் சட்டைகளும், கம்பளிகளும் போதுமான அளவு கொண்டுபோகவேண்டும். மிதியடியுடன், மேல்ஜோடும் பூட்சும் இருக்கவேண்டும். வெயில் அதிகமா யிருக்கும் கீழ்ப் பிரதேசங்களில் செருப்பு சௌகரியமாயிருக்கும். ஆனால், குளிர் மிகுந்த பிரதேசங்களில் பூட்சும், மேல்ஜோடும் மிக அவசியம். வழியில் பல இடங்களில் பால் தயிர் கிடைக்கா. அந்தச் சமயங்களில் உதவியாக இருக்கும்பொருட்டுப் புட்டிப்பால் ஒன்றிரண்டு டின்கள் கொண்டுபோவது நல்லது. கொஞ்சம் ஊறுகாயும் எடுத்துச் சென்றால் குளிருக்கு ருசியாக இருக்கும்.

நாம் சாமான் வாங்கும் கடைகளிலேயே சமையல் பாத்தி ரங்கள் கிடைக்கும். எனினும், கனம் அதிகமில்லாத இலே சான அலுமினியப் பாத்திரங்களில் அவசியமானவற்றை மட்டும் கொண்டு போவது நல்லது. மண்ணெண்ணெய், வழி முழுவதும் சாதாரணமாய்க் கிடைக்கிறது. அரிகன் விளக்குகள் ஒன்றிரண்டு கொண்டு போக வேண்டும். அடுப்பு வசதியில்லாத இடங்களில் பயன்படுவதற்கென *மண்ணெண்ணெய் அடுப்பு ஒன்றும் கொண்டு போனால் பிரயோஜனமா யிருக்கும்.

இவையெல்லாவற்றிற்குமேல், ‡வெப்பம் காக்கும் குப்பி ஒன்று மிக அவசியம். மேடுகளில் நடந்து பெரு மூச்சு விடும் போதும், அதிகமாய்க் களைத்துப் போகும் போதும், சுடச்சுட டீ அல்லது காப்பி அருந்தினால் சிரம பரிகாரமாக இருக்கும். இவ்வளவு நடை நடப்பதற்கு அது மிக அவசியம். ஒரு விஷயம் இங்கேயே சொல்லிவிட வேண்டும். ஹிமாலயத்தில் ஆற்று நீரை அருந்தவே கூடாது. எல்லா நீரையும் காய்ச்சி அருந்துவதே மேல். அது முடியாத சமயத்திலும் ஆற்று நீரை அருந்தாமல் ஊற்று நீரைத் தான் அருந்த வேண்டும். வழி முழுவதும் ஆற்றோரத்திலேயே போகிறது. சில சமயங்களில், அதுவும் வெயில் கடுமையா யிருக்கும் போது, அந்தக் குளிர்ந்த ஆற்று நீரை அருந்துவது ஆனந்தமாக இருக்கும். ஹிமா லயத்தில் தோன்றும் நதிகள் முழுதும் பனிக்கட்டி உருகி வரும் ஜலத்தைக் கொண்டவை. நம் உடம்பும் வயிறும் இந்த நீரின் விறுவிறுப்பைத் தாங்கும் பழக்கமில்லாதவை. ஆகவே, இத்தண்ணீர் வயிற்றின் ஜீரண சக்தியைக் கெடுப்பதுடன், சில சமயங்களில் வயிற்றுப் போக்கையும் இரத்த பேதியையும் உண்டாக்கும். ஆதலால், காப்பி, டீ சாப்பிடாத நண்பர்களும், பால் அல்லது வெந்நீர் சாப்பிடு

---

* Stove. ‡ Thermos flask.

வதற்கு உதவியாக, வெப்பம் காக்கும் குப்பி ஒன்று வைத்துக் கொள்ளுவது நல்லது. இவற்றோடு, சளி, இருமல் காய்ச்சலுக்குச் சில மருந்துகள் கொண்டு போவது நமக்கும் மற்றவர்களுக்கும் உதவியாக விருக்கும். ஒரு குடையும், தடியும் இன்றியமையாத பொருள்கள். பார்க்கும் காட்சிகளையும் சந்திக்கும் நண்பர்களையும் படம் பிடிக்க விரும்புவோர், ஒரு படம் பிடிக்கும் காமிராவையும் அதற்கு வேண்டிய பிலிம்களையும், எடுத்துக் கொள்ள வேண்டும்.

சாமான்களை எடுத்துக் கொள்வதற்கு இரண்டு கூலி யாட்களையும், சமையல் செய்வதற்கு ஒரு *பஹாடிப் பையனையும் நாங்கள் அழைத்துக் கொண்டு சென்றோம். சமையற்காரனை அழைத்துச் செல்வதைப் பற்றித் தமிழ் நாட்டு நண்பர்களுக்கு ஓர் எச்சரிக்கை செய்ய வேண்டும். ரசம் குழம்புக்கு ஆசைப்பட்டு நம் ஊரிலிருந்து சமையற் காரனை அழைத்து வந்தால் அது ஆபத்தாக முடியும். அனுதினமும், சாதாரணமாக, 10, 15 மைல்கள், சில சமயங்களில் இருபது மைல் கூட, நடக்கவேண்டி யிருக்கும். நம் ஊரிலிருப்பவர்களுக்கு இப்படி நடந்து பழக்கமில்லாததால், நடந்து வந்த பிறகு வேலை செய்வது கடினம். தவிர, மேலே போகப் போகக் குளிர் அதிகம். அங்குத் தண்ணீரைத் தொடுவதே சிரமமா யிருக்கும். பழக்க மில்லாதவர்கள் அந்நீரில் முழுகினல் நோய்க்கு இடமுண்டாகலாம். நோய் வந்தால் நம்மை அவன் கவனிப்பது போய், நாம் அவனைக் கவனிக்க வேண்டி வரும். ஆதலால் ஒரு பஹாடியை அழைத்துப் போவதே நல்லது. பஹாடிகள் சாதாரணமாக நம்பிக்கை யுள்ளவர்கள்; யாத்திரை ஆரம்பிக்கும் இடங்களாகிய ஹரித்துவாரம், அல்மோரா முதலிய இடங்களில் சாதாரணமாய்க் கிடைப்பார்கள்.

---

* பஹாடி என்றால் மலைப்பிரதேசத்தவன் என்று பொருள்.

நம் யாத்திரை இன்பகரமாகவும் வெற்றிகரமாகவும் நடக்கவேண்டுமானல் இவை யனைத்திற்கு மேலும் ஒன்று அவசியம். வழிமுழுதும் நன்ருய்த் தெரிந்த, நம்பிக்கை யுள்ள நல்ல வழிகாட்டி ஒருவர் அத்தியாவசியம். யாத்திரிகர்கள் சாதாரணமாய்ப் *பண்டாக்கள் உதவியைக் கொண்டு யாத்திரையை நடத்துவது வழக்கம். ஒரு நல்ல வழிகாட்டி யிருந்தால் நமக்கு வரும் சிரமங்களில் பாதியை அவர் சுதாரித்துக் கொள்ளுவார். இந்த விஷயத்தில் நான் பெரும் பாக்கியம் செய்தவன் என்று தான் சொல்லவேண்டும். என்னுடன் சேர்ந்து யாத்திரைக்குப் புறப்பட்டவர்கள் இருவர். அவ்விருவருள் ஒருவர் சுவாமி ஞானனந்தர். ஞான் மகராஜ் என்றே நாங்கள் அவரை அன்புடன் அழைப்போம். அவர் காசி ஸ்ரீ ராமகிருஷ்ண ஆசிரமத்திலிருப்பவர். ஹிமாலய யாத்திரையில் நிபுணர். சுமார் நான்கு முறை கைலாய யாத்திரை சென்று வந்திருக்கிருர். ஐந்து தடவை கேதார் பத்ரி தரிசித்தவர். இந்த யாத்திரைகளைப் பற்றி அவருக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை எனச் சொல்லலாம். தாய் போன்ற அன்புடையவர். எங்களை அழைத்துச் செல்ல அத்தகைய ஒருவர் இருந்ததால் தான், யாத்திரையை வெகு ஆனந்தமாக முடிக்க இயன்றது. மற்றவர் சுவாமி ருத்ரானந்தர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்; பல வருஷங்கள் சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்திலிருந்து சேவை செய்தவர். இப்பொழுது பிஜித் தீவில் நம் மக்களுக்குத் தொண்டாற்றி வருகிருர்.

இம்மாதிரி நீண்டவையும், கடினமானவையுமான யாத்திரைகளில் செல்லும் போது நம்முடன் வருபவர்கள் மனமொத்தவர்களாக இருக்க வேண்டும். யாத்திரையின் போது நமக்குக் கிடைக்கும் வசதிகள் மிகக் குறைவு. இவ்வசதிக் குறைவுகளால் மனம் தளராமலிருக்க வேண்டும்.

---

* வட இந்தியாவில் பிராமணர்கள் இப்பெயரால் வழங்கப் படுகின்றனர்.

பல வாரங்கள் கூடவே நெருங்கிப் பழகவேண்டி யிருப்ப தால், ஒருவருக்கொருவர் அன்புடன் பழகக்கூடியவர்களா யும் சகிப்புத் தன்மை யுள்ளவர்களாயும் இருத்தல் அவசி யம். கூட்டமும் கூடியவரை அதிகமா யில்லாம லிருப்பது உசிதம். எங்கள் யாத்திரை இவ்வளவு இன்பகரமாக முடிந்ததற்குக் காரணம் என்னுடன் வந்த சுவாமிகள் இருவருமே என்று சொன்னல் அது மிகையாகாது.

உ. காளி கம்பளிவாலாவின் அற்புத சரிதம்

1937-ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் 13-ஆம் தேதி சிம்லாவி லிருந்து புறப்பட்டேன். 14-ஆம் தேதி இரவு அல்மோரா வந்து சேர்ந்தேன். ஞான்மகராஜ்முன்ன மேயே ஏற்பாடுகள் அனைத்தும் செய்திருந்தார். எனவே 15-ஆம் தேதி காலையே அல்மோராவிலிருந்து புறப்பட்டோம். கருட் வரை பஸ் செல்லுகிறது. அது அல் மோராவிலிருந்து 42 மைல். அங்கிருந்து நடை ஆரம்ப மாகிறது. கருட் சேர்ந்த அன்று மாலையே 3½ மைல் நடந்து ஒரு சிறு கிராமத்தில் தங்கினோம். அங்கு ஓர் ஆற்றோரத்தில் ஒரு சிறு கடை. ஒவ்வொரு கடையிலும் பிரயாணிகள் தங்குவதற்கு இடம் இருக்கும். கடையில் சாமான் வாங்கினால்—அரிசி, பருப்பு, கோதுமை மாவு, காய் கறி, பால் முதலியன வாங்கவேண்டி யிருக்கும்—சமைப்பதற்குப் பாத்திரங்களும், தங்குவதற்கு இடமும் இலவசமாக அளிக்கப்படும். போகிற வழிமுழுதும் இப் படித்தான்.

அடுத்த நாள் ஒரு பெரிய ஏற்றம் ஏறி இறங்கினோம். இறங்கினதும், பிண்டாரிகங்காவைச் சந்திக்கிறோம். மேட்டி லிருந்தே பிண்டாரிகங்கா அழகாகக் காட்சி தரு கிறாள். நல்ல நீல சாமள வர்ணம். ஹிமாலயத்தில் நாங்கள் சந்தித்த நதிகளில் இதுதான் முதலாவது. ஹிமாலயத்தில் எல்லா நதிகளும் கங்கைகள்தான்; எல்லா மலையுச்சிகளும் கைலாயம். மலைமேலிருந்து பார்க்கும்போது மலைகளின் மத்தியில் கம்பீரமாகத் தோன்றுகிறாள் பிண்டாரிகங்கா. அருகில் வர வரப் பேரிரைச்சல் போட்டுப் பல பெரிய பாறைகளையும் உருட்டிக்கொண்டு வெகு வேகமாய்ச் செல்வதைப் பார்க்கிறோம். இரவில் எல்லாச் சப்தங்களும்

அடங்கி யிருக்கும் போதும், இந்த ஒலி மாத்திரம் ஓங்காரம் போல் சதா ஒலித்துக்கொண்டே யிருக்கும்.

இதிலிருந்து சாலை முழுவதும் நதிக்கரை ஓரமாகத்தானிருக்கிறது. நதி பல பாறைகளை உடைத்துக் கொண்டும் உருட்டிக் கொண்டும், இரைச்ச லிட்டுக் கொண்டும் செல்வது சில சமயங்களில் பயங்கரமாயிருக்கும். சில சமயங்களில் இரு பக்கமும், விவசாயம் செய்யப்படும் பயிர் நிலங்களின் மத்தியிலும், சில சமயங்களில் அடர்த்தியான காடுகளின் மத்தியிலும் செல்லுகிறது. கோதுமை, உருளைக் கிழங்கு முதலியன ஆங்காங்குச் சாகுபடி செய்யப்படுகின்றன. கிராமங்களும், குடி வளப்பமும் வழியில் அதிகம் காணப்படவில்லை. வழி நெடுக இயற்கை யன்னை தன் அழகை வித விதமாய்க் காட்டி நமக்கு இன்ப மூட்டுகிறுள்.

இரண்டாம் நாள் பதினைந்து மைல் நடந்து, மாலையில் தொாலி சேர்ந்து, அன்றிரவு அங்குத் தங்கினேம். அடுத்த தினமும் பிண்டாரிகங்காவின் கரை யோரத்திலேயே சென்றேம். அந்தி வானம் இருண்டு வருகிற சமயத்தில், நதியோரத்தில், ஒரு காட்டின் மத்தியிலிருந்த ஒரு குடிசைக் கருகில் போய்ச் சேர்ந்தோம். அக் குடிசையில்தான் இரவைக் கழிக்கவேண்டி இருந்தது. ஆனல், குடிசை ஆற்றுக்கு அக்கரையி லிருந்தது. ஆற்றைக் கடக்க விந்தையான ஒரு கயிறுப் பாலம் அமைக்கப்பட்டிருந்தது. கீழே ஒரு கயிறு, அதிலிருந்து இடுப்புயரத்தில் இரண்டு கயிறுகள் இரு புறத்திலும் கட்டப்பட்டிருந்தன. கயிறுதலால் ஸ்திரமாக நிற்காமல் ஆடிற்று. ஆதலால், ஜாக்கிரதையாகவே அதன் மேல் செல்ல வேண்டும். மூட்டை முடிச்சுகள் சுமந்து போகிறவர்களும் இதன் மூலந்தான் செல்லவேண்டும். ஆறு அவ்விடத்தில் அகலமாயும் ஆழமாயு மிருந்தது. கீழே பார்த்துக் கொண்டு ஆற்றைக் கடக்கும் சமயம் என் மனதில் விசித்திரமான

தோர் உணர்ச்சி யுண்டாயிற்று. பாலமே வேகமாக் நகருவது போல் தோன்றிற்று. கொஞ்சம் மிரண்டு நிமிர்ந்து பார்த்தேன். அப்பொழுது விஷயம் தெரிந்தது. கீழே ஆறு வேகமாக ஓடுவதைப் பார்த்து அந்த உணர்ச்சி உண்டாகியது. பாலத்தைக் கடந்து அக்கரையிலிருந்த குடிசைக்குச் சென்ருேம். பக்கத்தில் கிராமங்கள் ஏதும் இல்லாமையால் கையில் கொண்டுபோயிருந்த சாமான்களைக் கொண்டு பதார்த்தங்கள் சில செய்து, அன்றிரவு உணவை முடித்துக் கொண்டோம்.

அடுத்த நாள் மாலை *கர்ணப்பிரயாகையை அடைந்தோம். இங்குத்தான் பிண்டாரிகங்கா அலகநந்தாவுடன் சங்கமமாகிறது. இதுவரை அல்மோரா ஜில்லாவி லிருக்கிருேம்; கர்ணப்பிரயாகை வந்ததும், கஹர்வால் ஜில்லாவில் நுழைந்து விடுகிருேம். இந்த ஜில்லாவில்தான் பிரசித்தி பெற்ற கேதார், பத்ரி க்ஷேத்திரங்கள் இரண்டும் இருக்கின்றன. கர்ணப் பிரயாகை இந்த ஜில்லாவில் ஒரு முக்கியமான ஊர். பத்ரி செல்லும் ரஸ்தாவில் காணப்படும் பெரிய ஊர்களில் இது ஒன்று. இங்கு, பாபா காளி கம்பளிவாலா அவர்களின் சத்திர மிருக்கிறது. அன்றிரவு அதில் தங்கினேம்.

பாபா காளி கம்பளிவாலா அவர்களுடைய சரித்திரம் அற்புதமானது. சுமார் ஐப்பது வருஷங்களுக்குமுன் அவர் இருந்தார். அவர் செய்திருக்கும் அருஞ் சேவைகள் என்றும் மறக்க முடியாதவை. அவர் தோன்றியதற்குமுன், கேதார் பத்ரி யாத்திரை இப்பொழுதிருப்பதை விடப் பன்மடங்கு கடினமாயிருந்தது. நல்ல ரஸ்தாக்களே அப்பொழுது கிடையா. நதிகளைக் கடக்கப் பாலங்களும் இல்லை. வழியில் தங்குவதற்கு விடுதிகளும் வசதிகளும் இல்லை. பல மைல் வரைக்கும் ஒருவரையும் காண முடி

* இரண்டு நதிகள் சங்கமம் ஆகும் இடத்திற்குப் பிரயாகையென்று பெயர்.

யாது. குளிர் தாங்க முடியாதவர்கள் அதில் அல்லல்பட்டு மடிய வேண்டியது தான். நோயாளிகளுக்கு வழியில் எச் சௌகரியங்களும் கிடைக்கா. யாத்திரிகர்களில் பலர் யாத் திரையின்போது அளவற்ற துன்பத்திற்கு ஆளாவதை பாபா பார்த்தார். அவரது அன்பு நிறைந்த மனம் இவற் றைக் காணச் சகிக்க வில்லை. எப்படியாவது இக் கஷ்டங் களை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று தீர்மானம் செய்து கொண்டார்.

காளி யென்பது அவர் பெயர். கம்பளிவாலா என் பது அவருக்கு வந்த காரணப் பெயர். அவர் சதா ஒரு கம்பளிதான் அணிந்து கொண்டிருப்பார். எவ்வளவு குளிர் அதிகமானலும், சுற்றிலும் உறைபனி விழுந்து தண்ணீர் உறைந்த போதிலும், அந்த ஒரு கம்பளி தான். மற்றக் காலங்களிலும் அதே கம்பளி தான். ஆதலால் கம்பளிவாலா என்று மக்கள் அவரை அழைத்தார்கள். பாபா என்பதற்குப் பிதா என்பது பொருள். தந்தை யனைய அன்பு கொண்டு அவர் மக்களைப் பேணியதால், மக்களும் அவரை மிக்க அன்புடன் பாபாஜியென்று அழைத்தார்கள். இப் பெயர் அவருக்கு இன்னும் வழங்கி வருகிறது. அவர் ஒரு சாது. ரிஷிகேசத்திலிருந்து பத்ரிநாத் வரை சுமார் நூற்றெண்பது மைல்கள்; ரிஷிகேசத்திலிருந்து கேதார் நாத் நூற்றைம்பது மைல். இவ் வழி முழுதும் யாத்திரிகர் தங்குவதற்குச் சத்திரங்கள் கட்டி, அவற்றில் யாத்திரைக்கு வரும் சாதுக்களுக்கு அன்னமும், அனைவ ருக்கும் வைத்திய சிகிச்சையும் அளிக்க வேண்டுமென்பது அவர் அவா. இவற்றைச் செய்து முடிக்கப் பல லக்ஷக் கணக்கான ரூபாயல்லவா வேண்டும்? அவர் கையில் இவ் வளவு பணம் ஏது? அசாத்தியமான காரியம்போல் அது தோன்றிற்று.

ஆனல் அவருக்கு மலைப்புத் தோன்றவில்லை; ஆண் டவன்பால் அளவற்ற நம்பிக்கையும், அக்காரியத்தை எப்

படியும் முடித்தே தீரவேண்டு மென்ற திடச்சித்தமும் அவரிடம் இருந்தன. தீவிர முயற்சியால் செய்து முடிக்க முடியாத காரியம் ஒன்றில்லையென அவர் நம்பினர். கல்கத்தா இந்தியாவிலேயே பெரிய தனவந்தர்கள் இருக்கு மிடமென்று பெயர் பெற்ற தல்லவா? அங்கே சென்று ஹெளரா பாலத்தினருகில் ஒரு காலில் நின்று தவம் செய்ய ஆரம்பித்தார். தாம் கோரிய எண்ணம் நிறைவேறுவதற்கு வேண்டிய சாமக் கிரியைகள் கிடைக்கும் வரை "இப்படியே பட்டினி கிடப்பேன்" என்று பிரதிக்ஞை செய்து கொண்டார். முதலில், மக்கள் அவரைப் பயித்தியக்காரர் என்று ஏளனம் செய்தார்கள். ஆனல் நாள் போகப் போக, அவர் தூய்மையும், தன்னலமற்ற தன்மையும், தியாக புத்தியும் எல்லோர் மனதிலும் பதிந்தன. மார்வாடி வியாபாரிகள் பலர் சேர்ந்து அவருக்கு உதவி செய்ய முன்வந்தார்கள். அவர்கள் உதவியைக் கொண்டு சத்திரங்கள் கட்ட ஆரம்பித்தார். ரிஷிகேசத்தி லிருந்து கேதார்நாத் பத்ரிநாத் வரை, எல்லா முக்கியமான இடங்களிலும் அவர் கட்டிய சத்திரங்களை இப்பொழுது பார்க்கலாம். யாத்திரைச் சமயங்களில் சுமார் இருபது, இருபத்தைந்து ஆயிரம் சாதுக்களுக்கு இச் சத்திரங்களில் உணவளிக்கப் படுகிறது. இவை சுமார் 45 இடங்களில் இருப்பனவாகச் சொல்லுகிருர்கள். சுமார் 30, 40 லக்ஷம் ரூபாய் வரை வசூல் செய்து கட்டிடங்கள் கட்டியதுடன், அன்னதானம் சரியாக நடந்து வர ஒரு நிதியும் ஏற்பாடு செய்தார். அவர் கட்டிய சத்திரங்கள் வருஷந்தோறும் யாத்திரிகர்கள் அனைவருக்கும் பேருதவியாக இருந்து வருகின்றன.

௩. கர்ணப்பிரயாகை, ருத்ரப்பிரயாகை, குப்தகாசி

கர்ணப்பிரயாகையிலிருந்து சுமார் 18 மைல் தெற்கே ருத்ரப்பிரயாகை இருக்கிறது. கர்ணப் பிரயாகை யாத்ரா மார்க்கத்தின் மத்தியிலிருக்கிறது. இனிமேல், பாதை முழுதும் ஆற்றின் கரையோரமாகவே செல்லுகிறது. புனித கங்கையன்னையின் பலவிதமான தோற்றங்களை நாம் பார்த்துக் கொண்டே போகிறோம். சில சமயங்களில் இன்பமும், குளிர்ச்சியும் பொருந்திய வடிவத்தினளாய் அவள் தோன்றுகிறாள்; வேறு சில சமயங்களில் உக்கிராவேசம் கொண்டவள்போல் அடித்து மோதித் தூள் கிளப்புகிறாள். சில இடங்களில் நம் காலோரத்தில் அமைதியாக ஓடுகிறாள்; வேறு சில இடங்களில் வெகு ஆழத்தில் ஆரவாரஞ் செய்துகொண்டு புரண்டு செல்லுகிறாள். ஆனால், முட்டமுடிய அவள் துணையிலேயே யாத்திரை முழுதும் நடத்துகிறோம். ருத்ரப்பிரயாகை வரை அலகநந்தகங்காவின் கரையோரத்திலேயே கீழ் நோக்கிச் செல்லுகிறோம். ருத்ரப்பிரயாகையில் அலகநந்தா மந்தாகினியுடன் சங்கமம் ஆகிறது. மந்தாகினியைத் தொடர்ந்து சென்றால் கேதார்நாத் போய்ச் சேருகிறோம்.

வழிநெடுகப் பல இடங்களில் நிலம் பண்படுத்தப்பட்டுப் பயிர்த்தொழில் நடப்பதைப் பார்க்கிறோம். பூமி அவ்வளவு செழிப்பானதென்று சொல்லமுடியாது. ஆனால் மக்கள் உறுதியானவர்களே தென்படுகிறார்கள். இந்தியச் சேனையில் கஹார்வால் ரெஜிமென்ட் என்று ஒருபகுதியிருப்பதைப் பலர் அறிந்திருக்கலாம். அவர்கள் உறுதியை அனுசரித்தே இவ்விதம் எற்பாடு செய்யப்பட்டிருக்கிறது

போலும்! இம் மக்களின் வாழ்க்கை ஒரு பகுதி பயிர்த் தொழிலேயே ஆதாரமாகக் கொண்டது; இருந்த போதிலும், பெரும்பகுதி யாத்திரிகர்களைக் கொண்டு நடக்கிறதென்றே சொல்ல வேண்டும். பெரும் பாரத்தையும் அவர்கள் சுலபமாய்த் தூக்கிச் செல்லுகிறார்கள். சாமான்கள் எடுத்துச் செல்வதையும், கண்டி தண்டி முதலியவற்றை எடுத்துச் செல்வதையும் பலர் தங்கள் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். வழிநெடுகக் காணப்படும் சிறுசிறு கடைகளும் பலருக்குத் தொழில் கொடுக்கின்றன.

சாதாரணமாக இங்கே கோதுமை பயிர் செய்யப் படுகிறதென்று முன்னே குறிப்பிட்டிருக்கிறேன். இங்கு அனைவரும் கோதுமையை மாவாக்கிச் சப்பாத்தியாகச் செய்து உண்கிறார்கள். கோதுமையை மாவாக அரைக்க அவர்கள் செய்திருக்கும் அற்புதமான யந்திரம் இங்குக் குறிப்பிடற்பாலது. இஃது ஆற்று நீரின் உதவியால் ஓட்டப்படுகிறது. ஓடையிலிருந்து வாய்க்கால் வெட்டி தண்ணீரைத் தொட்டி மாதிரி ஓர் இடத்தில் விடுகிறார்கள். அங்கிருந்து அந்நீரை 10, 15 அடி கீழே விழும்படி செய்திருக்கிறார்கள். தண்ணீர் விழும் இடத்தில் ஒரு சக்கரம் வைக்கப்பட்டிருக்கிறது. தண்ணீர் விழுந்தால் அதன் வேகத்தில் அச்சக்கரம் சுழலுகிறது. அச்சக்கரத்தின் இருசு, மேலிருக்கும் ஒரு கல் வழியாகச் சென்று, மேற்கல்லுடன் பிணைக்கப் பட்டிருக்கிறது. எனவே, கீழே சக்கரம் நீரின் சக்தியால் சுழன்றால் மேற்கல்லும் சுழல்கிறது. அதன் மேல் கோதுமையைப் போட்டால், அஃது இரண்டு கற்களுக்கு மத்தியில் சேர்ந்து மாவாக அரைபடுகிறது. யந்திரத்திற்கு வேலையில்லாத சமயங்களில் வாய்க்காலில் தண்ணீர் வராமல் தடுத்து விடுகிறார்கள். இந்த யந்திரம் ஹிமாலயத்தில் பல நூற்றுக்கணக்கான வருஷங்களாக இருந்து வருவதாய்ச் சொல்லப்படுகிறது. ஹிமாலயத்தின் பல பாகங்களிலும் இவற்றைக் காண்கிறோம்.

அல்மோராவிலிருந்து கீழே வந்து கொண்டே யிருக்கிறோம். அல்மோராவின் உயரம் சமுத்திர மட்டத்திற்கு மேல் சுமார் 5700 அடி. ருத்ரப்பிரயாகை சுமார் 2000 அல்லது 2500 அடி உயரந்தான் இருக்கும். மத்தியானத்தில் வெயில் கடுமையாகவேயிருக்கிறது. ஹிமாலயத்தில்உயரம் குறைவான பிரதேசங்களில், பகல் வேளையில் சூரிய வெப்பம் கடுமையா யிருந்த போதிலும், இரவில் குளிர் அதிகமாகவே இருக்கிறது. அதற்குக் காரணம் சுற்றிலும் உறைபனி மூடிய மலைச் சிகரங்கள் இருக்கின்றமை போலும். ருத்ரப்பிரயாகையில் அலகநந்தாவும் மந்தாகினியும் சங்கமமாகும் காட்சி வெகு அழகாயிருக்கிறது. சுவர்போல் உயர்ந்து நிமிர்ந்து நிற்கும் மலைப் பாறைகளுக்கு மத்தியில் ஒரு குறுகிய இடத்தில், அவை புரண்டோடி வந்து, இரு மேகங்கள் முட்டிச் சதா இடி இடித்துக் கொண்டிருக்கிற மாதிரி ருத்ர வேகத்துடன் மோதுகின்றன. அதன் காரணமாகவே அவ்விடத்திற்கு ருத்ரப்பிரயாகை என்ற பெயர் வந்தது போலும். அவ்வாற்றின் வேகத்தில் அகப்பட்டவர் கதி அதோகதிதான். ஆதலால் ஜாக்கிரதையாகவே குளிக்க வேண்டும். இந்நீர்ப்பெருக்குகள் மோதுகின்றமையால் உண்டாகும் நீர்ப் புகையும், துளிகளும் பார்க்கப் பார்க்க ஆனந்தமா யிருந்தன.

சங்கமமாகும் இடத்திலிருந்து படிக்கட்டுகள் கட்டிவிட்டிருக்கிறார்கள். அவை உயரவிருக்கும் ஒரு சிவன் கோயிலுக்குச் செல்கின்றன. நாங்கள் சென்றபோது அக் கோயிலில் சச்சிதானந்த சரஸ்வதி என்றொரு சாது இருந்து கொண்டிருந்தார். அவர் பிறவியிலேயே அந்தகர். ஆனால், அவர் ஒரு பிரசித்தி பெற்ற சமஸ்கிருத வித்வான் என்று சொன்னார்கள். அவர் ஒரு பெரிய சமஸ்கிருதப் பள்ளி வைத்துப் பொது ஜனங்களுடைய ஆதரவைப் பெற்று நடத்தி வருகிறார்; தவிர நோயால் வருந்தும் யாத்திரிகர்களுக்கு உதவும் பொருட்டு இரண்டு ஆஸ்பத்திரி

களையும் ஏற்படுத்தி நடத்திவர முயற்சி செய்துகொண்டிருந்தார். இரு கண்களும் இல்லாத அவர் செய்து வந்த சேவை ஆச்சரியமாகயிருந்தது.

ஹரித்துவாரத்திலிருந்து வரும் பாதை இங்கு வந்து சேருகிறது. ஹரித்துவாரத்திலிருந்து தேவப்பிரயாகை வரை, சென்ற சில வருஷங்களாகப் பஸ் ஓடுகிறது. தேவப்பிரயாகை யாத்திரா மார்க்கத்தில் ஒரு முக்கியமான ஊர். இது பெரியாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப் பெற்றது. அலகநந்தா பாகீரதி கங்காவுடன் தேவப்பிரயாகையில் சங்கமமாகிறது. சங்கமத்தின் காட்சி வெகு அழகு. உத்தரகாசி, கங்கோத்திரி, யமுனோத்ரி முதலிய இடங்களுக்குப் போகிறவர்களுக்கு இங்கு வழி பிரிகிறது. அவர்கள் பாகிரதியைத் தொடர்ந்து செல்ல வேண்டும். கேதார் பத்ரி செல்ல விரும்புகிறவர்கள் அலகநந்தாவைத் தொடர்ந்து செல்லுவார்கள். தேவப்பிரயாகையிலிருந்து கேதார் பத்ரி மார்க்கத்தில் அடுத்த முக்கியமான ஊர் ஸ்ரீநகர். இது தேவப்பிரயாகையிலிருந்து சுமார் 20 மைல் தொலைவிலுள்ளது. இந்த ஸ்ரீநகர் வேறு, காஷ்மீரத்தின் தலைநகராகிய ஸ்ரீநகர் வேறு. இது பிரிட்டிஷ் இந்தியாவில், ஐக்கிய மாகாணத்தில், கஹர்வால் ஜில்லாவிலிருக்கிறது. இதற்கு மேல் சுமார் 18 மைலில் ருத்ரப்பிரயாகை யிருக்கிறது.

ருத்ரப்பிரயாகையில், கேதார்நாத் போவதற்கும் பத்ரிநாத் போவதற்கும் வழி பிரிகிறது. கேதார்நாத் போகிறவர்கள் மந்தாகினியைத் தொடர்ந்து செல்லுவார்கள். பத்ரிநாத் மாத்திரம் செல்ல விரும்புகிறவர்கள் அலகநந்தாவைத் தொடர்ந்து, கர்ணப்பிரயாகை, நந்தப்பிரயாகை, சாமோலி முதலிய இடங்கள் மார்க்கமாய்ச் செல்லுவார்கள். நாங்கள் முதலில் கேதார்நாத் செல்ல நினைத்திருந்த படியால், மந்தாகினி கங்கையைத் தொடர்ந்து மேலே சென்றோம்.

ருத்ரப்பிரயாகையி லிருந்து பதினொரு மைல் தூரத்தில் அகஸ்திய முனி யென்ற ஸ்தலம் இருக்கிறது. அகஸ்திய முனிவர் அங்குத் தவம் செய்தார் என்பது அவ்விடத்திய ஐதிகம். அங்கு அவருக்கு ஒரு கோயிலும் கட்டப்பட்டிருக்கிறது. அகஸ்திய முனி யிருக்குமிடம் மற்ற இடங்களைப்போல் அதிகமான மேடு பள்ளம் இல்லாமல் கொஞ்ச தூரத்திற்கு நல்ல சமமாயிருக்கிறது. அங்கு, சாலையின் இருபுறத்திலும் மரங்கள் வைத்துப் பயிர் செய்யப் பட்டிருக்கின்றன. நிலப்பரப்பு சமமாயிருப்பதை அனுசரித்து அகஸ்தியமுனிக் கருகில் கோசார் என்ற இடத்தில் ஆகாய விமானங்கள் இறங்கவும் புறப்படவும் இயல்கிறமாதிரி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதிகம் நடக்க இயலாதவர்கள், பணம் செலவு செய்ய முடியுமானால், அது வரை ஆகாய விமானத்தில் செல்லலாம். சில வருடங்களுக்குமுன், யாத்திரைக் காலங்களில், அங்கு ஆகாய விமானங்களின் போக்கு வரத்து நடந்து கொண்டிருந்தது. ஆனால் அவ்வளவு கட்டணம் கொடுக்கக்கூடிய சக்தியுள்ளவர்கள் போதுமான பேர் இல்லாமையால், அது இப்பொழுது நின்று விட்டது. இன்றும், தனி விமானங்களை வாடகைக்கு அமர்த்திச் செல்லுகிறவர்கள் அதுவரை ஆகாயத்தில் செல்ல முடியும்.

குப்தகாசி அகஸ்தியமுனியிலிருந்து சுமார் பதின் மூன்று மைல் தூரத்திலிருக்கிறது. மலையில் உயரமாகச் சென்று கொண்டே யிருக்கிறோம். அழகான இயற்கைக் காட்சிகள் பலவற்றைப் பார்த்துக் கொண்டே செல்லுகிறோம். குப்தகாசிக்கு அருகில்தான் ஒரு பெரிய மேடு இருக்கிறது. அதுவரை மேடு அதிகம் இல்லாததால், வழியில் சிரமம் அதிகமில்லை. வெயிலும் அதிகமில்லாமல் மிதமாயிருப்பதால் நடப்பது அவ்வளவு சிரமமாயில்லை. ஆற்று நீரின் விறுவிறுப்பு மாத்திரம் மேலே போகப்போக அதிகரித்துக் கொண்டே போகிறது. குப்தகாசி வரை அக்

குளிர்ச்சியான கங்கைத் தண்ணீரில் குளித்தோம். அதற்கு அருகில் வந்ததும், தொண்டைக் கரகரப்புக் கொஞ்சம் ஆரம்பிக்கவே, ஞான் மகராஜ் இனிமேல் குளிர்ந்த ஜலத்தில் குளிக்கக்கூடாதென உத்திரவிட்டார். யாத்திரையின் போது இந்த விஷயங்களில் பிடிவாதமா யிருக்காமல் உடம்பை அனுசரித்துச் சௌகரியங்கள் செய்து கொள்வதே உசிதமானது.

குப்தகாசி, சமுத்திரமட்டத்திற்குச் சுமார் 5000 அடி உயரத்திலிருக்கிறது. இது கேதார்நாத் சாலையில் மிக்க முக்கியமான க்ஷேத்திரங்களில் ஒன்று. அன்றியும் இது வேறு விதங்களிலும் முக்கியமானதாக இருக்கிறது. குப்த காசி ஒரு பெரிய ஊர். அங்கு ஒரு பெரிய கடைவீதியும் உண்டு. அதில் சுமார் 4, 5 கடைகளிருக்கும். பல ஊர்களில் கிடைக்காத மேஜோடு, ஜோடு, புட்டிப்பால்போன்ற சாமான்கள் இங்குக் கிடைக்கும். கேதார்நாத் மார்க்கத்தில் மக்கள் வருஷ முழுதும் வாழும் ஊர்களில் இதைத்தான் கடைசிப் பெரிய ஊர் என்று சொல்லலாம். இங்கு ஒரு தபாலாபீசும் உண்டு. கேதார்நாத் மார்க்கத்தில் பன்னிரண்டு மாதங்களும் திறந்திருக்கும் தபாலாபீஸ்களில் இதுவே கடைசி. இதற்கு அடுத்தபடி, கேதார்நாத்தில் தான் தபாலாபீஸ் இருக்கிறது. ஆனல் அது, வருஷத்தில் ஆறு மாதங்கள், அதாவது கோயில் திறந்திருக்கும்வரை தான் திறந்திருக்கும். பனிக் காலத்தில் குப்தகாசியில் குளிர் கடுமையாக இருக்கும். அது சமயம் சுமார் 3, 4 அடிவரைகூட உறைபனி அங்கே பெய்யு மென்று சொல்லுகிருர்கள். இவ்வூர் அருமையான க்ஷேத்திரமாகக் கருதப்படுகிறது. ஹிமாலயத்துள் மறைந்திருப்பதால் அதற்கு இப்பெயர்* வந்ததுபோலும். அங்கு ஓர் அழகான கோவிலிருக்கிறது. அதில் எழுந்

---

* குப்த என்ருல் மறைந்த அல்லது இரகசியமான என்பது பொருள்.

தருளியிருக்கும் மூர்த்தியின் பெயர் விசுவநாதர். இக் கோயிலிலும், இன்னும் வழியில் காணப்படும் வேறு பல கோயில்களிலும், இவை ஒரு காலத்தில் பௌத்தர் ஆளுகைக்குள்ளிருந்தன வென்பதற்கு அறிகுறிகள் தென் படுகின்றன. விசுவநாதர் கோயிலில் பூஜை செய்பவர் தென்னிந்தியாவிலிருந்து வந்த தமிழ்ப் பிராமணர் என்ப தைக் கேட்க நண்பர்கள் ஆச்சரியப்படுவார்கள். ரயில், மோட்டார் முதலிய தற்கால வாகன வசதிகள் ஏற்படு வதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னுலிருந்து இந்த ஏற்பாடு நடந்துவருகிறது. அங்கு நடக்கும் பூஜை முறை யும், தென்னுட்டுச் சிவன் கோயில்களில் இன்றும் நடந்து வரும் விதிகளை முற்றிலும் ஒத்ததாயிருக்கிறது. இந்தியா வின் சமய ஒற்றுமைக்கு இவையே போதுமான சான்றுக ளாக இருக்கின்றன.

குப்தகாசி ஒரு குன்றின் உச்சியிலிருக்கிறது. மந்தா கினி கங்கா வெகு ஆழத்தில் ஒரு பள்ளத்தாக்கில் சிறு ஓடைபோல் ஓடுகிறுள். அதற்கப்புறத்தில் உகிமடம் அழகாகத் தென்படுகிறது. அதைவிட அழகான காட்சி வடபுறத்தில் தோன்றுகிறது. அதுதான் கேதார்நாத் சிகரம். காலை இளஞ் சூரியனுடைய பொற்கிரணங்கள் அதன் மேல் விழும்போது, கொழுந்துவிட்டெரியும் சுடர் போல அது அழகாகத் தென்பட்டு நம் மனதைக் கவருகிறது. அக்காட்சி நம் மனதில் ஒரு புதிய ஊக்கத்தை யும் சிரத்தையையும் அளிக்கிறது. 'இதோ நான் இங்கு இருக்கிறேன், வாருங்கள்!' என்று கனிவுடன் கூவி யழைப்பது போலிருக்கிறது. எனவே, விசுவநாதரைத் தரிசனம் செய்துகொண்டு அங்கிருந்து புறப்பட் டோம்.

கொஞ்சதூரம் மேலே சென்றதும் உகிமடத்திற்கு வழி பிரிகிறது. கேதார்நாத் செல்ல விரும்புகிறவர்கள்

நேராகச் செல்லவேண்டும். வழியில் நளச்சட்டி* பேதுச் சட்டி பேட்டாசட்டி முதலிய சிறு தங்குமிடங்கள் பல பார்க்கிறோம். அவை சிலவற்றுள் மிகப் புராதனமான கோயில்களையும் பார்க்கிறோம். இவை அனைத்தும் இப்போது சரியாகக் கவனிக்கப்படாமல் கிலமாக இருப்பது வருந்தத் தக்கது. பதினொரு மைல் சென்று ராம்பூர் போய்ச் சேருகிறோம். அங்கிருந்து திரியுக நாராயணத்திற்கு வழி பிரிகிறது.

---

* சட்டி (Chatty) என்பது அங்கிருக்கும் தங்குமிடங் களுக்குப் பெயர்.

௬. திரியுக நாராயணம், கௌரிகுண்டம்

வேள்வித் தீயொன்று திரியுக நாராயணத்தில் வளர்க்கப்பட்டு வருகிறது. ஆயிரக்கணக்கான வருஷங்களாக அத்தீ வளர்க்கப் படுவதாகச் சொல்லுகிறார்கள். திரியுக நாராயணம் சமுத்திர மட்டத்திற்குச் சுமார் ஏழாயிரம் அடி உயரத்திலிருக்கும். எனவே, குளிர்காலத்தில் குளிர் மிகக் கடுமையாகவே யிருக்கும். அச்சமயத்தில் மூன்று நான்கு அடி வரை உறைபனியும் பெய்யும். எனினும், அந் நெருப்பை அணையாமல் விறகிட்டு வளர்த்து வருவதற்காகவே ஒன்றிரண்டு குடும்பங்கள் அக் கொடுங் குளிரிலும் அங்கே குடியிருப்பார்கள். அவ்வேள்விக் குண்டத்தில் விறகுக் கட்டைகள் எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கின்றன. அதிலிருக்கும் சாம்பலே அந்த க்ஷேத்திரத்திற்குரிய பிரசாதம். ஸ்தலத்தின் பெயரிலிருந்தே மூர்த்தியின் பெயரையும் தெரிந்துகொள்ளலாம். ஊர் மிகச் சிறியது. கோயிலை அனுசரித்து வாழ்க்கையை நடத்தும் சில குடும்பத்தினர் மாத்திரம் அங்கு வசிக்கின்றனர். யாத்திரா மார்க்கத்தில் இல்லாததால், யாத்திரிகர்களும் அதிகம் இங்கு வருவதில்லை. ராம்பூரிலிருந்து சுமார் ஒன்றரை மைல்தானிருப்பினும், வழி பெரிய மேடு ஆதலால் செல்வது கடினமாகவே இருந்தது. வழியில் விவசாயமும் அதிகம் காணப்படுவதில்லை. காடுகளின் மத்தியில் பாதை செல்லுகிறது. கோயில் குப்தகாசியிலிருக்கும் விசுவநாதர் ஆலயத்தை ஒத்திருக்கிறது. இதுவும் ஒரு காலத்தில் பௌத்தர் வசப்பட்டிருந்தது போலும். தீர்த்தத்தில் முழுகி, திரியுக நாராயணனைத் தரிசனம் செய்து கொண்டு; உண்வருந்தி அங்கிருந்து புறப்பட்டோம்.

திரியுக நாராயணத்திலிருந்து கொஞ்சம் இறக்கம் இறங்கிச் சுமார் மூன்று மைல் நடந்து கௌரிகுண்டம்* வந்து சேருகிறோம். வழியில் சில அழகான மலைக் காட்சிகளைப் பார்க்கிறோம். வழி, மலையோரத்தில் செதுக்கி விடப் பட்டிருக்கிறது. ஒரு பக்கத்தில் ஆழ்ந்த பள்ளத்தாக்குக்கள் பல தென்படுகின்றன. சில சமயங்களில் பைன் மரம் தேவதாரு முதலிய மரங்கள் நிறைந்த காட்டின் வழியாகச் செல்லுகிறோம். ராம்பூருக்கு அருகில் திரியுக நாராயணத்திற்குச் செல்லும்போது விட்ட மந்தாகினி கங்கையை மறுபடியும் கௌரிகுண்டத்தில் சந்திக்கிறோம். ஆனால் அவ்வூரின் பெருமை, அது கங்கை ஓரத்தில் அமைந்திருப்பதன்று. அங்கு ஓர் அழகான வெந்நீர் ஊற்றிருக்கிறது. ஒரு குளம் மாதிரி வெட்டி அதில் அந்த வெந்நீர் ஊற்றின் ஜலம் வந்துவிழும்படி செய்திருக்கிறார்கள். அந்த இடத்தில் அதைப் பார்க்க மிக்க ஆச்சரியமாயும் சந்தோஷமாயும் இருக்கிறது. அருகாமையிலேயே சில அடி தூரத்தில் மந்தாகினி கங்கா ஓடிக்கொண்டிருக்கிறாள். அந்தத் தண்ணீரைத் தொடுவதும் கடினம். பனிக்கட்டி கரைந்து வருவதாதலால் சில்லென்றிருக்கிறது. அதில் குளிப்பது கடினம். குடித்தால் வியாதி வரும். அதற்குப் பக்கத்தில் இவ்வூற்றுநீர் கொதிக்கிறது. குளத்தில் இறங்கிக் குளிக்க முயன்றோம். நீரின் உஷ்ணம் அதற்கு இடந்தரவில்லை. குளிர்ந்த நீருடன் கலந்துதான் குளிக்கவேண்டியிருந்தது. பல தினங்களுக்குப் பிறகு வெந்நீரில் தாராளமாய்க் குளிக்க மனதிற்கு மிகவும் சந்தோஷமாயிருந்தது.

இம்மாதிரி வெந்நீர் ஊற்றுக்கள் பல ஹிமாலயத்தில் ஆங்காங்குக் காணப்படுகின்றன. பத்ரிநாத்தில் இத்தகைய ஊற்றொன்றிருக்கிறது. அதைப்பற்றி விவரமாய்ப் பின்னால் அறிவோம். கயிலாயகிரி போகும் மார்க்கத்தில் மான

* குண்டம் என்றால் குளம் என்பது பொருள்.

சரோவா குளத்திற்கருகில் வெந்நீர் ஊற்றொன்றிருக்கிறது. கங்கோத்ரி யமுனோத்ரியிலும் இவை காணப்படுகின்றன.

கௌரிகுண்டம் ஒரு சாதாரண கிராமம். நாங்கள் செல்லும் சமயம் குளிர்காலம் சமீபித்து விட்டதால், அங்கே பலர் காணப்படவில்லை. அங்கிருந்த கடைகள் பெரும்பாலும் மூடப்பட்டிருந்தன. மக்களில் பலர் கீழ்த் தேசம் நோக்கிச் சென்று விட்டபடியால் கிராமம் காலி யாகவே தென்பட்டது. அடுத்த தினம் ஏறவேண்டிய மேடு சிரமமானதெனச் சொன்னார்கள். எனவே, அன்றிரவுக் குள் இரண்டு மைல் சேர்த்து நடந்து அடுத்த நாள் சிரமத் தைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானம் செய்தோம். கௌரிகுண்டத்திலிருந்து ஜங்கல்* சட்டி இரண்டு மைல். அன்றிரவை ஜங்கல் சட்டியில் கழித் தோம். அங்கு நல்ல பால் கிடைத்தது. சுற்றிலும் மரங்கள் அடர்ந்த காடுகள். காடுகளின் மத்தியிலிருந்ததால் தான் அதற்கு அந்தப் பெயர் வந்தது போலும்.

ஜங்கல் சட்டியிலிருந்து கேதார்நாத் ஏழு மைல் தானிருக்கும். கடைசியில் அப்புனித க்ஷேத்திரத்துக்கு அன்று போய்ச்சேருவோம் என்ற எண்ணம் எங்கள் மன தில் ஒரு விதமான ஆனந்தத்தையும் உற்சாகத்தையும் உண்டாக்கிற்று. நடை கடினமாதலால் அதிகாலையில் எழுந்து, காலை உணவைத் தயார்செய்து உண்டோம். அதிக உயரமும், குளிர் மிகுதியுமான இடத்திற்குப் போவ தால், மேஜோடும் பூட்சும் அணிந்து, இன்னும் மற்றுமுள்ள கம்பளிச் சட்டைகளையும் அணிந்து கொண்டோம். காலை யில் வழக்கம்போல் புறப்படுமுன் பஜனை செய்தோம். ஆனால் அன்றைய பஜனையில் என்றுமில்லாத கனிவும், கிளர்ச்சியுமிருந்தன. நாம் கோரிப் புறப்பட்டுவந்த மூர்த்தி யின் தரிசனம் அன்று பெறுவோம் என்ற நினைவு மனதில்

* ஜங்கல் என்றால் காடு என்பது பொருள்

ஒருவிதமான ஆர்வத்தையும் சந்தோஷத்தையும் பிறப்பித்தது. புறப்படுவதற்கு யாவும் தயாரானதும் 'கேதார்நாத் சுவாமிக்கு ஜே!' என்று ஜெய கோஷம் கிளப்பிப் புறப்பட்டோம்.

கௌரிகுண்டம் சுமார் 8000 அடி உயர மிருக்கும். கேதார்நாத் கோயிலிருக்குமிடம் சுமார் 12000 அடி உயர மிருக்கும். கௌரி குண்டத்திலிருந்து ஜங்கல்சட்டிவரை ஏற்றம் அவ்வளவு கடுமையன்று. ஆனால், ஜங்கல்சட்டியிலிருந்து கேதார்நாத்திற்கு ஒன்றரை மைல் வரை, இந்த யாத்திரையிலேயே மிக்க கடினமான பகுதிகளில் ஒன்றெனச் சொல்லவேண்டும்; அவ்வளவு பெரிய ஏற்றம். மேடு செங்குத்தா யிருக்கின்றது. பாதை, மெத்தைப்படி மாதிரி வளைந்து வளைந்து வெட்டப்பட்டிருக்கிறது.

ஆனால், வழிநெடுக அருமையான எழில்மிக்க காட்சிகள் அவ்வழியை அழகு செய்கின்றன. மந்தாகினிகங்கை இரைச்சலிட்டுக் கொண்டும், பெரிய கற்களை உடைத்துக் கொண்டும், மலைகளைத் துளைத்துக்கொண்டும், குதித்தும், வளைந்தும் நம் பாதத்தினருகில் ஓட்டமாய் ஓடுகிறாள். இரு பக்கங்களிலும் அடர்ந்த காடுகள் தென்படுகின்றன. ஊற்று நீரும் அருவிகளும் இருபக்கத்திலும் மலைச்சாரல்களிலிருந்து வந்து நதியில் விழுகின்றன. சில இடங்களில் வரிசையாக நீர்வீழ்ச்சிகள் விழுந்து கொண்டிருப்பதைப் பார்க்கச் சந்தோஷமா யிருக்கிறது. புஷ்பங்கள் பலவிதமான வர்ணங்களுடன், குலப் பெண்டிர் சாளரங்களின் வழியே எட்டிப்பார்ப்பதுபோல், காட்டுச் செடிகளின் மத்தியில் நிமிர்ந்து தங்கள் அழகைக் காட்டுகின்றன. தண்ணீர் சதா விழுந்துகொண்டிருப்பதால் பலவிதப் பாசிகள் படர்ந்திருக்கின்றன. அவற்றிற்கு மத்தியில் காளான்கள் பல நிறங்களில் முளைத்திருக்கின்றன.

ஆறு குமுறிக் கொண்டும் தூள் கிளப்பிக் கொண்டும் செல்லுகிறது. அதன் இருபுறத்திலும் மலையின் உச்சிகளி

லும் ஓரங்களிலும் நீர் உறைந்து பனிக்கட்டியாகி அப்படியே நிற்கிறது. அவற்றின் அடியில் வங்குகள்போல் துவாரமாகி அவற்றின் மூலம் பனிக்கட்டி கரைந்து நீர் வந்துகொண்டிருந்தது. உறைபனி மூடிய சிகரங்களும் தூரத்தில் தெரிகின்றன. அவற்றின் உச்சியில் மேகங்களும் தென்படுகின்றன. அவ்வுறை பனி மூடிய சிகரங்கள் சூரிய வெளிச்சத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்தன. இதோ, தண்ணீர், பனிக்கட்டி, மேகங்கள்—அனைத்தும் அடிப்படையிலே நீர் என்ற ஒரு பொருளாக இருப்பவை—வேறு வேறு ரூபத்துடனும் நாமத்துடனும் ஒரே இடத்தில் தோன்றுகின்றன. இவ் வேற்றுமையுணர்ச்சி யன்றோ மாயை என்பது? இவ்வேற்றுமை உணர்ச்சியை யொழித்து, உலகில் அனைத்திற்கும் அடிப்படையான ஐக்கியத்தை உணருவதே உயர்ந்த ஞானம்; இந்த ஞானம் ஆண்டவனுடைய ஒளியினலும், அருளினலுந்தான் பெற முடியுமென்று அக் காட்சி எங்கள் மனதில் உணர்த்தியது மாதிரி யிருந்தது.

நாங்கள் சென்றது, இரண்டாம் பருவத்தின் பிற்பாகத்தில். குளிர்காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. எனவே, யாத்திரிகர் கூட்டம் குறைவா யிருந்தது. கேதார்நாத்தை நோக்கிச் செல்லுபவர்கள் பலர் காணப்படவில்லை. அங்கிருந்து பலர் திரும்பி வந்துகொண்டிருப்பதைப் பார்த்தோம். இங்கே ஒருவருக் கொருவர் அறிமுகம் செய்து கொள்ள வேண்டியதில்லை. ஒருவர் மற்றவர்களுடைய பெயர், ஊர், விலாசம் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பமும் இல்லை. எல்லோரும் கேதார நாதனுடைய பக்தர்கள். அதுவே யாத்திரிகர் அனைவரையும் அன்புடன் பிணைக்கும் அருட் சக்தி. எங்களைப் பார்த்ததும் அவர்கள், 'கேதார்நாத் சுவாமிக்கு ஜே' என்று உரக்கச் சொல்லி எங்களை வரவேற்கிறார்கள். நாங்களும் அவ்வார்த்தைகளையே சொல்லி அவர்களுக்கு வந்தனம்

சொல்லுகிறோம். வழி முழுதும் இப்படித்தான். இவ் வார்த்தைகள் நம் மனதில் ஈசுவர பக்தியையும், சகோதர உணர்ச்சியையும் உண்டு பண்ணுகின்றன. யாத்திரிகர்களில் பல மாகாணங்களி லிருந்து வந்தவர்களும், பல மொழி பேசுபவர்களும் இருக்கின்றனர். ஆண், பெண், முதியவர்கள், இளைஞர்கள்—எல்லாத் திறத்தாரு மிருக்கின்றனர். எனினும், பகவத் பக்தியின் காரணமாய் அவர்கள் அனைவர் மனதிலும் உண்டாகும் சகோதர வாஞ்சையும், பணிவும், சேவையும் வியக்கத் தக்கவை. இந்த யாத்திரிகர் மனதில் ஆண்டவனைத் தவிர வேறு நினைப்புக் கிடையாது. பேச்செல்லாம் யாத்திரையைப்பற்றியும் அதன் மகத்துவத்தைப் பற்றியுமே. மற்ற நேரங்களில் பஜனையும், பாட்டும், ஈசுவரத் தியானமுந்தான். எப்பொழுது கேதார்நாத் போய்ச் சேருவோம், எப்பொழுது கேதார் நாதனைத் தரிசிப்போம் என்பதே எண்ணம். வழியில் நேரும் சிரமங்களை இந்த நினைவுகள் மறக்கச் செய்கின்றன.

ரு. கேதார்நாத்தில் உறைபனி மழை

வயது முதிர்ந்த கிழவர் ஒருவர், உஜ்ஜயினியிலிருந்து வந்தவர், குளிரில் நடுங்கிக் கொண்டு எங்களுக்கு முன்னால் நடந்து போய்க் கொண்டிருந்தார். ஆண்டவன்பாலுள்ள பக்திதான் அவருக்கு அந்தக் குளிரைத் தாங்கவும், மலையேறவும் போதுமான சக்தி கொடுத்திருக்க வேண்டும். இம்மாதிரி வயோதிகர் பலர், ஆண்களும் பெண்களும், இந்த யாத்திரையில் வருகின்றனர். குளிரின் கொடுமையால் இறக்க நேரிடலாம் என்ற எண்ணமும் அவர்களை இம் முயற்சியி லிருந்து தடுப்பதில்லை. ஹிமாலயத்தில் இறப்பவர்கள் நற்கதி யடைவார்கள் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு உண்டு. எனவே, இயன்ருல் கேதார்நாதனைத் தரிசித்து உய்யலாம், இயலாவிட்டால் இமயத்தில் இறந்து நற்கதி பெறலாம் என்று நினைத்து, சித்தத்தைத் திடம் செய்து கொண்டு வயோதிகர் பலர் இந்த யாத்திரையில் கலந்து கொள்ளுகின்றனர்.

தவிர, பகவத் பக்தியும் உணர்ச்சியும், அவர்கள் மனதில் ஒரு வேகத்தையும் விடா முயற்சியையும் உண்டாக்குகின்றன. இது சம்பந்தமாய் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்து சுவாமிகள் ஒருவர் அனுபவத்தை இங்குக் குறிப்பிடலாம். அவர் நண்பரொருவருடன் கேதார்நாத் நோக்கிச் சென்று கொண்டிருந்தார். ஒரு நாள் மாலை இருட்டுகிற சமயம். இருவரும் ஒரு பெரிய ஏற்றத்தில் அகப்பட்டுக் கொண்டார்கள். தாங்கள் விட்ட கிராமம் பக்கத்திலிருந்தது. அடுத்த தங்குமிடம் கொஞ்சம் தூரத்திலிருந்தது. அது சமயம், பக்கத்தில் எங்கிருந்தோ தாழ்ந்த சுரத்தில் அழு குரல் ஒன்று காதில்பட்டது. அதைக் கவனித்துக் கேட்டார்கள். பக்கத்தில் ஒரு மேட்டிலிருந்து வருவதாகத்

தெரிந்தது. அங்குச் சென்று பார்க்கவே ஒரு வயோதிகத் தாய் அங்கு இருந்தாள். அம் மாதை விசாரித்ததில், வழியில் நோய்வாய்ப் பட்டதால் பின்தங்கி விட்டதாகவும், தன்னுடன் வந்தவர்கள் முன்சென்றுவிட்டதாகவும், சொன்னாள். இருள் வேகமாய்ச் சூழ்ந்து வருவதைக் கவனித்த சுவாமி, 'தாயே, அடுத்த தங்கு மிடம் நெடுந்தூரமிருக்கிறது. வழியும் கடினம். கீழே சென்றால் பக்கத்திலேயே கிராமம் இருக்கிறது. அங்கு 'இன்றிரவைக் கழித்து நாளை மேலே நடக்கலாமே' என்று சொன்னார். அதற்கு அத்தாய் தந்த பதில் வியக்கத் தக்கதா யிருந்தது. 'ஐயனே! தியாக சின்னத்தை அணிந்த தாங்கள் கூட இவ்விதம் சொல்லலாமா? கேதார் நாதனை நோக்கிச் செல்லும் நான் முன் சென்று, அவசியமானால் அம் முயற்சியில் உடலை உகுப்பேனே யொழியப் பின் செல்லமாட்டேன்' என்று உரைத்தாளாம்! இம்மாதிரி உயிருக்குத் துணிந்தும் இந்த யாத்திரையில் ஈடுபடுவோர் பலர். அவர்கள் பக்தியும், உணர்ச்சியும் ஆச்சரியமானவை.

ஜங்கல் சட்டியிலிருந்து ராம்பாரா நான்கு மைல். அங்கு நிற்காமல் தொடர்ந்து சென்றோம். வழி முழுதும் அழகான காட்சிகள். ஆனால் ஏறவெண்டிய மேடும் மிக்க கடுமையாக விருக்கிறது. போகப்போகக் குளிர் அதிகரித்து நடையும் கடினமாகிறது. அதிக உயரத்திற்கு வந்துவிட்டதால் உயரத்தில் வியாபித்துள்ள காற்றின் கனம் குறையக் குறைய மூச்சுத் திணறுகிறது. இந் நிலையில் சுவாசப்பைகளுக்கு வேலையதிகம். ஆதலால் பெருமூச்சு விட்டுக் கொண்டும் மிக்க சிரமத்தோடேதான் ஏறுகிறோம். காலும் கையும் அதிகக் கனமாகி, உடம்பைச் சுமந்து செல்வதே கஷ்டமாய்த் தோன்றுகிறது. ஆனால் இன்னும் கொஞ்ச தூரம்தானே யிருக்கிறது புனித கேதார் போய்ச் சேர என்ற எண்ணம் மனதில் உற்சாகத்தை யுண்டாக்க, மேற்கொண்டு நடந்து போகிறோம்.

அன்று வெயில் இல்லை. மேகங்கள் கவிந்துகொண்டிருந்தன. எனவே, குளிரின் கொடுமை அதிகரித்தது. கையின் விரல்கள் மரத்துப்போயின. குடையையும் தடியையும் பிடிப்பதே கஷ்டமாய்ப் போய்விட்டது. எனினும், இன்னும் கொஞ்ச தூரம்தானே என்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு முன் செல்லுகிறோம். ராம்பாராவிலிருந்து மூன்றரை மைல் ஒரே ஏற்றம். அதற்குமேல் ஒன்றரை மைல் சமம் என்று சொல்லலாம். குளிரில் திணறிக்கொண்டும், பெருமூச்சு விட்டுக்கொண்டும் மெல்ல அந்த மேட்டில் ஏறினேம். அங்கிருந்து கேதார்நாத் கோயிலும், நிமிர்ந்து நிற்கும் கேதார்நாத் சிகரமும் எங்கள் கண்களுக்குத் தென்பட்டன. மனதில் ஆனந்தம் பொங்க, 'இதோ கேதார்நாத்! கேதார்நாத் சுவாமிக்கு ஜே!' என்று ஞான் மகராஜ் கோஷமிட்டார். நானும் ஜே சொல்ல முயன்றேன். ஆனல் குளிரால் நாக்குக் குழறவே, சரியாகச் சொல்ல முடியவில்லை. ஞான் மகராஜ் உடனே நின்று தாம் வைத்திருந்த தெர்மாஸ்பிளாஸ்கைத் திறந்து கொஞ்சம் காப்பி சுடச்சுடத் தந்தார். அதிலிருந்து கொஞ்சம் உஷ்ணமும் உற்சாகமும் பிறந்தன. கேதார்நாதனுடைய முதல் தரிசனம் மனதில் அளவிலா ஆனந்தத்தையும் சாந்தத்தையும் அளித்தது. இன்னும் ஒன்றரை மைல் நடக்கவேண்டும். எனவே, தொடர்ந்து நடந்தோம்.

நடக்க நடக்க வானம் இருண்டுவந்தது. மழைத் துளிகளும் விழ ஆரம்பித்தன. ஓடோடியும் வந்து கேதார்நாத் சேர்ந்து எங்கள் பண்டாவின் இல்லத்தில் நுழைந்தோம். அங்கு நெருப்புப் போடப்பட்டிருந்தது. நெருப்பில் கை கால்களைக் காய்ச்சிக் கொண்டதும், உடம்பில் உஷ்ணம் தோன்றிற்று. எங்களிடமிருந்த கம்பளிச் சட்டைகளையெல்லாம் அணிந்து கொண்டோம். கம்பளிப் போர்வைகளையும் சுருட்டி மேலே போர்த்துக் கொண்டோம். இதற்குள் சுமார் அரைமணி நேரமாகியிருக்கும். மழைத் தூற

லின் சப்தம் அடங்கி நிசப்தமா யிருந்தது. ஜன்னல் வழி யாக மெதுவாய் எட்டிப் பார்த்தோம். அங்கு நாங்கள் பார்த்த காட்சி ஆச்சரியமா யிருந்தது. மழை பெய்வது நின்று உறைபனி பெய்து கொண்டிருந்தது.

உறைபனி விழுவதை முன்னால் பார்த்திராத எங் களுக்கு, அது மனதில் ஒரு புதிய உணர்ச்சியை உண்டாக் கிற்று. மழை பெய்வதால் தண்ணீர் விழும் சப்தம் உண் டாகிறது. கல்மழை பெய்தால் சொல்ல வேண்டியதில்லை. ஆனால், உறைபனி பெய்யும் போது நிசப்தமாயிருக்கிறது. வெள்ளைப் பூக்கள் வானத்திலிருந்து வந்து குவிகிறமாதிரி யிருக்கிறது. கையில் கொஞ்சம் பிடித்துப் பார்த்தோம். வெண்ணெய் மாதிரி மிருதுவாயிருந்தது; பார்க்கப் பார்க்க ஆனந்தமாயிருந்தது. கேதார்நாத்துக்குத் தேவர்கள் தூய வெள்ளைப் பூமாரி பொழிவது போலத் தோன்றிற்று. இது தான் வானவர் பூஜையோ என்றும் மனது ஐயுற்றது. புள்ளினங்களின் சப்தமும் கேட்கவில்லை. மற்றெந்த ஒலியும் கிடையாது. எங்கும் ஒரே நிசப்தம் குடிகொண் டிருந்தது. அந்த நிசப்தத்தில் நம் மனதும் நம்மையும் அறியாமல் அந்தர்முகம் நோக்கிற்று. ஒரு விதமான அமானுஷ்யமான சாந்தியும் இன்பமும் அந்த நிசப்தத்தில் நிலவியிருந்தன.

காலையில் ஒன்பது மணிக்கு ஆரம்பித்த உறைபனி சுமார் மூன்று நான்கு மணிநேரம் இடைவிடாமல் பெய்து கொண்டிருந்தது. அது ஒன்றன்பின் ஒன்றாக எல்லாவற் றையும் மூடிக்கொண்டு வந்தது. கல் தரைகள், வீட்டுக் கூரைகள், சுவர்கள், வெளியே விடப்பட்டிருந்த பெஞ்சு கள், செடி கொடிகள், அக்கம்பக்கத்து மலைச் சரிவுகள்— எல்லாம் உறைபனியால் மெல்ல மெல்ல மூடப்பட்டு, எல்லாம் உறைபனி மயமாயிற்று. எங்கும் வெள்ளை வெளே ரென்றிருந்தது. என்றும் மறக்கமுடியாத ஒரு காட்சி! பனி பெய்வது நின்றதும் வானம் கொஞ்சம் கொஞ்சமாய்

நிர்மலமாயிற்று. சூரியனும் தரிசனம் கொடுக்க ஆரம்பித்தான். சூரிய வெளிச்சத்தில் அவ்வுறைபனியின் வெண்மையைப் பார்க்கவும் கண் கூசிற்று. அன்று சுமார் இரண்டடி உறைபனி பெய்திருக்கும்.

நாங்கள் நான்கு நாள் கேதார்நாத்தில் தங்கினோம். அந்த நான்கு நாட்களும் வெயில் காய்ந்த போதிலும், அவ்வுறைபனி முற்றிலும் கரையவேயில்லை. விழும்போது வெண்ணெய் போல் மிருதுவாயிருக்கும் உறைபனியானது தரையில் விழுந்த கொஞ்ச நேரத்திற் கெல்லாம் பருபரு வென்று அஸ்கா சர்க்கரை மாதிரியாகி விடுகிறது. அதன்மேல் கால் வைத்தால் சரக், சரக்கென்று உள்ளே யிறங்குகிறது. வீட்டுக் கூரைமேல் விழுந்த பனி பாரம் தாங்காமற் போனல், கூரைச் சரிவுகளில் வந்து கீழே விழுந்து கீழிருப்பவற்றுடன் சேரும். இன்னும் எஞ்சி யிருப்பவை சூரிய வெப்பத்தில் உருகித் தண்ணீராய்க் கொட்டிக் கொண்டே யிருக்கின்றன. பெஞ்சுகள் முதலியவற்றில் விழுந்திருப்பதை மக்கள் சுத்தம்செய்து துடைத்து விடுகிறார்கள். குறைந்த அளவில் விழுந்த இடங்களிற் கிடப்பவை சீக்கிரத்திலே உருகித் தண்ணீராக ஓடிவிடுகின்றன. ஆனல் அதிகக் கனமாய் விழுபவை அவ்வளவு சீக்கிரத்தில் கரைவதில்லை. முற்றிலும் கரைவதற்குள் மறுபடியும் விழ நேரிட்டால், அவை அடுக்கடுக்காகச் சேர்ந்துகொண்டே போகும். அவை உருகாமலே யிருந்தால், பாறைகள் மாதிரிக் கெட்டியாகி விடும். குளிர்காலத்தில் கேதார்நாத்தில் பத்துப் பதினைந்தடி வரை உறைபனி பெய்யுமாம். குளிர்காலம் கடந்து வெயில் காலத்தில் கோயிலைத் திறக்க வருபவர்கள் பல சமயங்களில் பனிப் பாறைகளின்மேல் நடந்துவந்து கோயிலைத் திறக்கவேண்டியிருக்கும். சில சமயங்களில் கோயில் வாயிலை அவை அடைத்துக் கொண்டிருப்பதும் உண்டு. அது சமயம் உளி கொண்டு அவற்றை வெட்டி அப்புறப் படுத்துவார்களாம்.

குளிரின் கடுமையை என்றும் அனுபவித்திராத தென்னிந்தியர்களாகிய எங்களுக்கு இவ்விருத்தாந்தம் பேராச்சரியத்தையுண்டாக்கிற்று.

௯. கேதார்நாத்

மகாபாரத யுத்தத்திற்குப் பிறகு பாண்டவர்கள் ராஜ்ய பாரம் வகித்தார்கள். யுதிஷ்டிரர் முப்பத்தாறு வருஷங்கள் அரசாண்டார். அதற்கு மேல், ஸ்ரீ கிருஷ்ண பகவான் இவ்வுலகை நீத்த செய்தி அவர்களுக்கு எட்டியதும், அவர்கள் ஆற்றொணுத் துயரில் மூழ்கினார்கள். தாங்களும் தேகத் தியாகம் செய்து பரமபதத்தையடைய விரும்பினார்கள். ஹிமாலயத்திற்கு அப்பால் மகாமேரு இருக்கிறது. அதன் உச்சியில் சொர்க்கமிருப்பதாக அக்காலத்தைய நம்பிக்கை. அர்ஜுனனுடைய பேரனை பரீக்ஷித்திற்குப் பட்டாபிஷேகம் செய்துவிட்டு, பஞ்ச பாண்டவர்கள் திரௌபதியுடன் இந்தக் கடைசி யாத்திரையில் புறப்பட்டதாக மகாபாரதத்தில் சொல்லப்படுகிறது. இதற்குத்தான் மகாப் பிரஸ்தான யாத்திரை யென்று பெயர்.

கேதார்நாத் மூலந் தான் பாண்டவர்கள் சென்றார்களாம். அக்காலத்தில் இவையெல்லாம் பெருங்காடுகள். காட்டு மிருகங்கள் பல இப் பிரதேசங்களில் சஞ்சரித்துக் கொண்டிருக்க வேண்டும். இவ்வழியே சென்ற பாண்டவர்களைச் சிவபெருமான் பலவாறுகச் சோதனை செய்தாராம். அங்குமிங்கும் தோன்றித் தோன்றி மறைந்தார்; கடைசியாகத் தோன்றி ஒரு கல்லாக அமைந்தாராம். பீமன் இதைக் கண்டு கோபமுற்று அக்கல்லைப் பிளந்தெறியத் தன் கதாயுதத்தை ஓங்கினான். சிவபெருமான் உடனே அவர்கள்முன் தோன்றி, அவர்களுக்குக் காட்சி கொடுத்துச் சமாதானப்படுத்தி, அக்கல்லை மூர்த்தியாக வணங்கும்படி உபதேசித்தாராம். பாண்டவர்களே அதற்கு முதல் பூஜை செய்தவர்கள் என்று சொல்லப்படுகிறது. அதுவே

இப்பொழுது கேதார்நாத் மூர்த்தியாக விளங்குகிறது என்பது அங்கு வழங்கும் கர்ண பரம்பரைக் கதை.

புத்தர் தோன்றிய பிறகு நாடுமுழுதும் பௌத்த மயமாயிற்று. வேறு பல க்ஷேத்திரங்கள் போல் கேதார்நாத்தும் பௌத்தர் கைக்கு வந்திருக்கவேண்டும். பௌத்தர்கள் தோன்றுவதற்குமுன் கோயில்கள் இப்பொழுதிருப்பவை போல் கட்டப்படவில்லை. அவர்கள் தோன்றிய பின்னர்த்தான் ஆலயங்கள் விமரிசையாகக் கட்டப்பட்டன வென்று நினைப்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. கேதார்நாத், புத்தர் ஆளுகைக்கு உட்பட்டிருந்த தென்பதற்குப் பல அறிகுறிகள் தென்படுகின்றன. ஆதிசங்கரர் வரும் வரை அது அப்படியே யிருந்தது. அவர் அதை ஹிந்துதர்மத்திற்கு எற்றவாறு மறுபடியும் பிரதிஷ்டை செய்தார் என்பது சரித்திர பூர்வமாகத் தெரியவருகிறது.

கேதார்நாத்தைப் பற்றிய கர்ண பரம்பரைக் கதை என் மனதைக் கவரவில்லை. ஆனால், அதன் சரித்திரம் என் உள்ளத்தைக் கவர்ந்தது. சுமார் ஆயிரத்து நூறு வருஷங்களுக்குமுன் என் மனம் சென்றது. அப்பொழுது இம்மலைகள் எல்லாம் பெரிய வனங்களாலும், பல கொடிய மிருகங்களாலும் நிறைந்திருக்கவேண்டும். வனங்கள் காரணமாகவே குளிரும் இன்னும் கடுமையாக இருந்திருக்கும். அந்தச் சமயத்தில், பதினறு வயதான இளைஞர் ஒருவர் இந்தியாவின் தென்கோடியிலுள்ள தம் வீட்டிலிருந்து புறப்படுகிறார். அக்காலத்தில் வாகன வசதிகள் இல்லை; ராஜீயப் பாதுகாப்பில்லை. எனினும், அவர் பல ராஜ்யங்களைக் கடக்கிறார். பல்வேறு பாஷைகள் பேசும் பிரதேசங்களைக் கடந்து செல்லுகிறார். இந்தியாவின் கலை ஞான ஒற்றுமையை நிலைநாட்டுகிறார். இந்தியாவின் வடகோடியான - அதற்குமேல் போகமுடியாது - கேதார்நாத்தில் வந்து ஒரு கோயிலைப் பிரதிஷ்டை செய்கிறார். அதற்கருகில் ஒரு மடத்தையும் ஸ்தாபித்து, இன்னும் நாட்டின்

மூன்று திக்குகளிலும் மூன்று ஆசிரமங்களையும் நிறுவுகிருர். இவ்வளவும் எத்தனை வருஷங்களில்? ஆதிசங்கரர் காலமாகும்போது அவருக்கு வயது முப்பத்திரண்டுதான்! அதை நினைக்க நினைக்க ஆச்சரியமாயிருக்கிறது. அவர் எவ்வளவு சக்தி வாய்ந்த புருஷராயிருந்திருக்க வேண்டும்!

நாங்கள் சென்றபோது குளிர்காலம் ஆரம்பித்து விட்டது. எனவே பலர் கீழே இறங்கி விட்டார்கள். அச்சமயம், கோயில் சிப்பந்திகளைத் தவிர, சுமார் பத்துப் பேர்தான் கேதார்நாத் முழுதிலும் இருந்திருப்பார்கள். எங்களைத் தவிர யாத்திரிகர்களும் இல்லையென்று சொல்லலாம். கோயிலுக்குச் சென்று ஆனந்தமாய்த் தரிசனம் செய்தோம். மூர்த்தி பாறை வடிவமாய்ச் சுயம்புலிங்கமாக அமைந்திருக்கிறது. கேதார்நாதன் சன்னிதியில் சாதி பேதம் கிடையாது. எவரும் போய்த் தம் கையினலேயே தொட்டு, அருச்சித்து ஆலிங்கனம் செய்து, வாழ்த்திப் பாடிப் பேரின்பம் அனுபவிக்கலாம். ஆண்டவன் வழிபாடும், நம் ஊரிலிருக்கும் வழிபாட்டு முறைகளையே முற்றிலும் ஒத்திருப்பது மனதிற்குச் சந்தோஷத்தை யுண்டு பண்ணுகிறது. அர்ச்சனை, ஆராதனை, பிரார்த்தனை அனைத்தும் அங்ஙனமே. எங்கும் ஒரே அமைதி. ஆற்றின் இரைச்சலும் ஒருவாறு அடங்கி, சிவசிவ என்று மெதுவாகச் சொல்லிக்கொண்டிருப்பதுபோ லிருந்தது. இந்த நிசப்தத்தில் அந்தக்கரணங்களின் சேஷ்டைகள் தாமே அடங்குகின்றன. மனது உள்முகமாகத் திரும்புகிறது. மக்கள் நினைவுகள் சுபாவமாகவே ஆண்டவனை நாடி, தியானம், ஜெபம் செய்து இறைஞ்சுகின்றன.

மாலைப் பூஜைக்குப் பின் தியானம் செய்ய உட்கார்ந்தோம். காலையில் விழுந்த உறைபனி சுற்றிலு மெங்குமிருந்தது. அந்த நள்ளிருட்டிலும் அதன் வெண்மை தோன்றியது. எங்கும் சாந்த மயம். மனதில் ஒருவிதமான எழுச்சி யிருந்தது. தெற்கு நோக்கி உட்கார்ந்திருந்

தேன். பல்வேறு எண்ணங்கள் என் மனதில் ஓடியவண்ண மிருந்தன. இந்தியா முழுதும் என் முன்னால் நிற்பதுபோல் தோன்றிற்று. ஹிமாலயத்திலிருந்து கன்னியாகுமரி வரை, கைபர் கணவாயிலிருந்து அஸ்ஸாம் வரையிலும், புத்தர் பிறந்தது, அசோகர் ஆண்டது, கோரி, கஜினி, பேபர் முதலியோர் படையெடுத்தது, சங்கரர் நிலைநாட்டியது, கடைசியில் ஆங்கிலேயர் ஆக்ரமிப்பு எல்லாம் என் மனக் கண்முன் வந்தன. 'ஒரு காலத்தில் நம் நாடு உலகிலே உன்னதமாயிருந்தது. சரித்திரமே அறியாத ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன்பே உயர்ந்த நாக ரிகத்தை உடையதா யிருந்தது. சகல கலைகளுக்கும் நாக ரிகங்களுக்கும் பிறப்பிடமாயிருந்தது, உலகிற்கு அவற்றை அளித்திருக்கிறது. ஆனால் நம் தற்கால நிலைமையை நினைத்தால்......? மனது சிலிர்த்தது. அளவற்ற வருத்த முண்டாயிற்று......வருந்திப் பயன் என்ன? நம் விடுதலை, நம் முன்னேற்றம், நம் எதிர்கால நிலைமை நம் கையில்தா னிருக்கிறது. நம் உழைப்பாலும் பெரு முயற்சியாலும் செய்ய முடியாத காரியம் ஒன்றில்லை. ஆண்டவன் அருள் நம்பால் எப்பொழுதுமுண்டு. அக்காலத்தில் தோன்றிய பெரியார்களைப்போலவே, இக்காலத்திலும் ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், காந்தி யடிகள் முதலியவர்கள் தோன்றியிருக்கிறார்கள். அவர் களுடைய உயர்ந்த லட்சியத்தைப் பின்பற்றி, இக்காலத் தும் முன்னேறுவோமாக! நம் பாரதத் தாயை மறுபடியும் உலகில் ஒப்பற்ற பெயரும் புகழும் உடையவளாகச் செய் வதற்கு ஏற்ற கருவிகளாக நாம் ஆவோமாக.......!' என்ற எண்ணங்கள் அன்றைய தியானத்தின்போது என் மனக் கண்முன் வந்து தோன்றின.

தியானம் முடித்துத்திரும்பியபோது வடக்குத் திக்கை நோக்கினேன். அன்று அமாவாசைக்கு ஒன்றிரண்டு தினங்கள் முந்திய தினமாகையால் எங்கும் இருள் சூழ்ந்

திருக்க வேண்டும். ஆனால், வடக்கே சோதி போல் ஒரு தோற்றம் தோன்றிப் பேராச்சரியமளித்தது. எங்கும் நிலவி யிருந்த அமைதியில் அத்தோற்றம் கம்பீரமா யிருந்தது. கேதார்நாத் ஆலயத்திற்குப் பின்புறத்தில், கேதார்நாத் சிகரம் கம்பீரமாய் நிமிர்ந்து சுமார் 24,000 அடி உயரம் நிற்கிறது; (அதாவது கோயிலுக்கு மேல் சுமார் 12,000 அடி உயரம்). உறைபனியால் மூடியிருப்பதனால், வெள்ளியால் உருக்கி வார்த்தது போல், அவ்விருட்டிலும் இளம் பிறை வெளிச்சத்தில் தோன்றும் சோதிபோ லிருந்தது. அதன் சிகரத்தில் மேகங்கள் எப்பொழுதும் சஞ்சரித்துக் கொண்டிருந்தமை நரைமுடி சுருட்டை சுருட்டையாக இருந்த மாதிரி யிருந்தது. அந்த அமைதியில் யாரோ ஒருவர் ஆழ்ந்த சமாதியில் ஆழ்ந்திருக்கும் கம்பீரமான தோற்றம்! அதை ஆனந்தமாய்ப் பார்த்துக் கொண்டிருக்க, இருக்க, சிவபெருமானின் எண்ணம் வந்தது. இதோ இருக்கிறது அவர் திருவுருவம் என்று தோன்றிற்று. சடையைத் தாங்கி, இளம்பிறை ஒளியுடன், திருநீறு பூசிய வெண்மையுடல் தாங்கி, தம்மையும் உலகையும் மறந்து, எதனாலும் பாதிக்க முடியாத ஆழ்ந்த சமாதியில் இதோ வீற்றிருக்கிறார் சிவபெருமான்! அவர் திருமுடியி லிருந்து பிறந்த கங்கை இதோ எங்களருகில் ஓடிக்கொண் டிருக்கிறது! சிவபெருமானின் தோற்றத்தை நம் பெரியோர்கள் இதிலிருந்துதான் கற்பனை செய்தார்கள் போலும்! அக்காட்சியைப் பார்க்கப் பார்க்க ஆனந்தமாயும், மனதிற்கு ஒப்பற்ற சாந்தியும், எழுச்சியும் தரத்தக்கதாயும் இருந்தது. தூய அத்தோற்றத்தை நெடுநேரம் என் கண்களாலும் மனதாலும் பருகிக் கொண்டே நின்று கொண்டிருந்தேன்.

அங்கு நாங்கள் கண்ட இயற்கை எழில் வருணிக்கற்பாலதன்று. அது நிமிர்ந்து கம்பீரமாய் வீற்றிருந்த தோற்றம் 'ஓங்கி நிமிர்ந்த அழல்' போலிருந்தது. அதன் உச்சியில் சதா 'நீராகியான நிழலையும்' 'காராகியான

முகிலை'யும் காணலாம். அங்கே தோன்றும் சிவபெருமான் ஆகாயம் வரை அளாவி 'நெடிய விசும்பொடு நிற்' கும் தோற்றமாய், 'உண்ணாது உறங்காது இருப்பவனாயினும், இமையாது உயிராய்' இருக்கிறான். அங்குக் காட்சி கொடுக்கும் பரமசிவன் 'மூவாய், பிறவாய், இறவாய்' என்ற அருள் வாக்கிற்கு இலக்கியமாய், தேவாதி தேவ ராலும் தொழ'ப் பெற்றவன். அவன் 'திங்கள் முடி'யைக் கொண்டவனாய், 'மாலை எழுந்த மதியே' போலும், 'காலை முளைத்த கதிரே' போலும், 'சுடரில் திகழ்கின்ற சோதி யாய்,' 'நீறேறு மேனி யுடையவனாய்,' 'பால் வெண்ணீ ருடி' 'அடியார்க்கு அமுதமாய்' வீற்றிருக்கிறான். 'அவன், எரியாத் தெய்வச் சுடர்'. 'எத்திசைக்கும் வான்மே லிருப்பவன்'. 'எண்ணறிய' நூறு பெயர் உடை யவனாய், 'நாற்றிசைக்கும் விளக்காய்' நாதனாய், 'அருள் மிளிர்கின்ற பொன்னாய' திருமேனி தாங்கி அவன் வீற்றி ருக்கும் திருக்காட்சி, அதைப் பார்க்கும் பாக்கியம் பெற் றோர் அனைவரையும் பரவசப்படுத்துகிறது. *

---

* வாகீசரான திருநாவுக்கரசு சுவாமிகள் திருக் கைலாயத்தைப் பற்றி முப்பது பாக்கள் பாடி யருளி யிருக்கின்றார். அவை கேதார் நாத்தில் நாங்கள் கண்ட காட்சிக்கு முற்றிலும் பொருத்தமானவை யாக இருக்கின்றன. இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் சொற்றொடர் கள் அவர் பாக்களிலிருந்து எடுக்கப் பட்டவை.

எ. கேதார்நாத் பிரம்மச்சாரி

இளம் வயது—சுமார் 23, 24 இருக்கும். மாநிறம் சதாரண உயரம். சாந்தமான முகம். சிரிக்கும் போது கொல்லென்று குழந்தை மாதிரி சிரிப்பு. அவர் பெயர் நாராயண தத்தர். அவர் தான் பிரசித்தி பெற்ற கேதார்நாத் பிரம்மச்சாரி. சாதுக்கள் உலகிலே சமீபத்தில் கேதார்நாத் சென்றவர்களில் அவரைப் பற்றிக் கேள்விப் படாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். நாங்கள் யாத்திரைக்குப் புறப்படுவதற்கு முன்னமேயே சிலர் அவரைப் பற்றிச் சொன்னார்கள். வழியில் பலர் அவரைப் பற்றி மிக்க பெருமையுடனும், அன்புடனும் பேசுவதைப் பார்த்தோம். கேதார்நாத்திலிருந்து வருபவர்களை, பிரம்மச்சாரி எப்படி யிருக்கிறார் என்று விசாரிப்பது அந்தப் பக்கத்தில் வழக்கமாயிருந்தது. ஹிமாலயத்திலே சாதனையில் உயர்ந்த சாதுக்கள் பலரைக்காணலா மென்று கேள்விப்பட்டிருக்கிறோம். அத்தகையோருள் இவர் ஒருவர் என்று பலர் கூறவே, இவரைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் எங்கள் மனதிலு மிருந்தது. எனவே, நாங்கள் கேதார்நாத் சென்ற மறு தினமே இவரைப் பார்க்கச் சென்றோம். அவருடைய இளம் வயதும், சாந்தமும் தூய்மையும் ததும்பிய முகமும் எங்கள் மனதைக் கவர்ந்தன.

அவருக்கு அங்கு, 'பாராமாசி' என்று பெயர்—அதாவது பன்னிரண்டு மாதங்களும் (கேதார்நாத்தில்) வசிப்பவர் என்பது பொருள். கேதார்நாத் கோயில் வருஷத்தில் ஆறு மாதங்கள் தான் திறந்திருக்கும். மற்ற ஆறு மாதங்களில் உறை பனி பெய்து அனைத்தையும் மூடி விடும். அது சமயம் கோயில் மூடப்பட்டு, அங்கிருக்கும் மக்கள் அனைவரும் கீழ்ப் பிரதேசங்களுக்கு வந்து விடுவார்கள். உறை

யனி 10, 20 அடி கூடப் பெய்து அங்கிருக்கும் கட்டிடங்கள், குடிசைகள், மரங்கள், செடிகள்—அனைத்தையும் மூடி விடும். அது சமயம்யாவும் உறைபனி மயமாயிருக்கும். சுற்றிலும்பத்துப் பதினைந்து மைல்களுக்கு மக்கள் வசிக்க முடியாது. எவரும் இருப்பதும் இல்லை. ஆனால், இப் பிரம்மச்சாரி மாத்திரம் பன்னிரண்டு மாதங்களும் அங்கு வசிக்கிறார். எனவே, அவருக்குப் 'பாராமாசி' என்ற பெயர் கொடுக்கப் பட்டது.

எப்படி அவர் அங்கு வசிக்கிறார் என்பது யாவருக்கும் வியப்பு. குளிர்காலத்தில் அவர் அங்கேயே தங்க முதலில் நினைத்தபோது 'இவருக்குப் பயித்தியம் பிடித்து விட்டது இறக்க விரும்புகிறார்போலும். சாவது நிச்சயம்!' என்று எல்லோரும் சொல்லிக் கொண்டார்கள். வேனிற் காலம் வந்தது. கோயில் திறக்க வந்தவர்கள் அவருடைய உயிர் போன உடலைப் பார்க்க நினைத்தார்கள். ஆனால் ஆச்சரியத்தினும் ஆச்சரியம்! அவர் இறக்க வில்லை. அவரை உயிருடனிருக்கக் கண்டார்கள். அது மாத்திரமன்று; குளிர் அதிகமானபோது நெருப்புப் போட்டுக்கொள்ளுவதற்கு விறகும் சாப்பிடுவதற்குக் கோதுமை மாவும், நெய்யும், சக்கரையும் சில நண்பர்கள் வைத்துப் போயிருந்தாகள். விட்டுப்போன சாமான்கள் யாவும் அப்படியேயிருந்தன. இந்த ஆறு மாத காலமும் எப்படி அக் கடுமையான குளிரைத் தாங்கினர், எப்படி உண்வருந்தாமல் பிழைத்திருந்தார் என்பது இன்றும் பலருக்கு விளங்காத பேராச்சரியமாக இருக்கிறது.

பிரம்மச்சாரியின் தூய்மையும், தியாகமும், எளிய தன்மையும், புனித வாழ்க்கையும் அவரைச் சந்திக்கும் எல்லோர் மனதையும் கவர்ந்தன. அவர் பெயர் யாத்திரை உலகமெங்கும் பரவிற்று. கேதார்நாதனைத் தரிசிக்க வருபவர்கள் அவரையும் தரிசிக்க விரும்பினர்கள். பல செல்வந்தர்கள் அவருக்குப் பல சௌகரியங்கள் செய்து

கொடுக்க முன்வந்தார்கள். ஆனல் அவர், அவையனைத்தை யும் வேண்டாமெனத் தள்ளிவிட்டார். 'ஆண்டவன் அரு ளிருக்கும்போது மற்றவை எதற்கு ?' என்கிருர்.

எங்களுடன் வந்த ஞானனந்த ஸ்வாமிகளுக்கு அவரை நன்ருகத் தெரியும். அவர்மூலம் எங்களுக்கும் அவ ருடன் நெருங்கிப்பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. கேதார் நாத்திற்கு வடக்கிலிருக்கும் பனிக்குன்றுகளின்மேலும், கீழ்ப்புறத்தில் ஒரு குன்றின் மேலிருக்கும் கேதார்நாத் பைரவன் கோயிலுக்கும் எங்களை அவர் அழைத்துச் சென் ருர். அக்கடுங் குளிரைத் தாங்கப் பல கம்பளிச் சட்டை களும், பூட்சும், கம்பளிமேஜோடுகளும் நாங்கள் அணிந்து கொள்ளவேண்டியிருந்தது. ஆனல் அவர் உடம்பின்மேல் ஒரு தனிப் போர்வையைத் தவிர வேன்ருென்றில்லை ; காலி லும் ஒன்றுமில்லை. தலைக்கும் ஒரு பாதுகாப்புமில்லை அக் கடுங் குளிரிலும் எந்தவிதமான பாதுகாப்புமின்றி எப்படி அவர் இருக்கிருர்என்பது எங்களுக்கு வியப்பாக இருந்தது.

ஹிமாலயத்தில் 'பிரம்ம கமலம்' என்ற ஒரு விதமான தாமரையுண்டு. அது வெண்ணிறமானது ; அழகான சுகந்த வாசனையையுடையது. அது உறைபனி பெய்யுமிடங்களில் தான் உண்டாகுமாம். கஸ்தூரி மான் இம்மலரின் மத்தியி லுள்ள தண்டை உண்கின்றதெனச் சொல்லுகிருர்கள். செல்வதற்கரிதான உறைபனி விழும் மலைச்சிகரங்களில் தான் அம்மலர்கள் கிடைக்குமென்று சொன்னுர்கள். ஆனல், அம்மலர் கொண்டு கேதார்நாதனை அர்ச்சிப்பது மிக விசேடமென உரைத்தார்கள். இவ்விதம் அர்ச்சனை செய்ய வேணடுமென்ற விருப்பம் எங்களுக்கு உண்டா யிற்று. பிரம்மச்சாரி இதையறிந்தார். அடுத்த நாள் காலை யில் நாங்கள் விழித்து வெளியே வருவதற்குமுன் ஒரு துணி நிறைய அப் பிரம்ம கமலங்கள் கொண்டுவந்து தந் தார். அதிகாலையில் சுமார் மூன்று நான்கு மணிக்கே எழுந்து அக்கடுங் குளிரில் அவர் சென்றிருக்கவேண்டும்.

அவர் பேருதவியால்தான் அவ்வரும் பிரம்ம கமலங்களைக் கொண்டு நாங்கள் ஆனந்தமாய்க் கேதார்நாதனைப் பூஜிக்க முடிந்தது.

எங்களுடன் அவர் தாராளமாகவே பழகினர். அவர் வாழ்க்கையைப் பற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற விருப்பம் எங்களுக்கிருந்தது. 'எப்படி இக்குளிர் காலத்தில் ஒன்றும் சாப்பிடாமல் உயிருடன் இருக்கிறீர்கள்?' என்று கேட்டோம். 'கொஞ்சம் உலர்ந்த பழங்கள்—பேரீச்சைபோன்றன—சாப்பிட்டுத் தண்ணீர் அருந்துகிறேன். அதே போதுமானதாக இருக்கிறது' என்றார்.

'தங்கள் சாதனை என்ன?' என்றோம்.

'யோகசாதனை' என்றார்.

'தங்கள் உபாசனை என்ன?' என்று கேட்டோம்.

'நிராகாரம்' என்றார்.

அவருடைய அறையில் அவர் படுக்கை தவிர, சில சமஸ்கிருதப் புஸ்தகங்களும் சிறு ஸ்ரீ கிருஷ்ண பகவான் படம் ஒன்றும் இருந்தன. ஒரு பெட்டியில் உலர்ந்த பழங்கள் இருந்தன. அவற்றிற் சில எடுத்து எங்களுக்குக் கொடுத்தார். அவற்றை அவர் பிரசாதமெனக் கருதி வாங்கிக்கொண்டோம்.

பேசும்போது சில சமயங்களில் அவர் சிரித்த சிரிப்பின் சப்தம் இன்னும் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. அந்தக் காட்சி இப்பொழுதும் என் கண்முன் வருகிறது. ஆ! அதில் என்ன குழந்தைபோன்ற கவலையற்ற தன்மை! என்ன ஆனந்தமாக இருக்கிறார்! ஈசுவரன் ஆனந்தமயனல்லனோ? அவனை உபாசிப்பவர்களும் ஆனந்தமயமாயிருப்பார்கள் என்பதற்கு இதுவே சான்று என்று தோன்றுகிறது. கேதார்நாத்திற்கு யாத்திரை வருபவர்கள் பலர், காவி போட்ட சாதுக்களும், கிரஹஸ்தர்களும், அவரை வந்து காணுகிறார்கள். அவரைப் போற்றி வணங்கு

கிறார்கள். ஆனால் அவர் இவற்றால் பாதிக்கப்படாமல் குழந்தைமாதிரி யிருந்துவருகிறார்.

டிசம்பர் மாதத்தில் நான் இதை எழுதிக்கொண்டிருக்கிறேன். இப்பொழுது கேதார்நாத் முழுதும் உறைபனியால் மூடப்பட்டு, மரங்கள், செடிகள், காடுகள் மலைகள் கோயில், கட்டிடங்கள் அனைத்தும் உறைபனி மயமாயிருக்கும். மனிதவாசனையே அதற்குப் பக்கத்தில் இராது. மிருகங்களும் அக்கொடிய குளிரில் அங்குவர அஞ்சும். இந்த இளம் பிரம்மச்சாரி மாத்திரம் அங்கே தனியாயிருந்து தவஞ் செய்துகொண்டிருக்கிறார். இல்லை, இல்லை: தனியே அன்று. கேதார்நாதன் அவருக்குத் துணையாக இருக்கின்றான்!

அ. விடை பெறுதல்

கேதார்நாத்திற்கு வரும் யாத்திரிகர்கள் சாதாரணமாய்க் காலையில் வந்து, ஆண்டவனை ஆராதித்தபின்பு, மாலையிலேயே திரும்புவது வழக்கம். கேதார்நாத்தின் கொடிய குளிரே அதற்கு முதல் காரணம். தவிர, தங்குவதற்கு அங்கு வசதிகளும் குறைவு. கேதார்நாத் முழுதும் சேர்ந்து சுமார் முப்பது முப்பத்தைந்து வீடுகளுக்கு அதிகமா யிராவென்று எண்ணுகிறேன். உணவு வசதிகளும் குறைவு. பால் முதலியன அதிகம் கிடைப்பதில்லை. வழியிலிருப்பனபோல் பலவிதமான சாமான்கள் விற்கும் கடைகளும் அங்கே கிடையா. ஒரு கடை மாத்திரம் உண்டு. அதில் பூரியும், உருளைக்கிழங்கும்தான் கிடைக்கும். யாத்திரிகர்களில் பெரும்பாலோர் வந்து அன்று மாலையே திரும்பி ராம்பாரா அல்லது ஜங்கல் சட்டிக்குச் சென்று இரவைக் கழிப்பார்கள்.

நாங்கள் கேதார்நாத்தில் நான்கு தினங்கள் தங்கினோம். அது சமயம் யாத்திரிகர்கள் மிகக் குறைவா யிருந்தமையால் தங்குவதற்கு இடம் வசதியாகக் கிடைத்தது. சில தினங்கள் தங்கியது கேதார்நாத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கும், கேதார்நாத்தின் புனிதமான வாயுமண்டலத்தை அனுபவிப்பதற்கும் உதவியாக இருந்தது; கேதார்நாத் பிரம்மச்சாரியுடன் நெருங்கிப் பழகவும் சந்தர்ப்பம் கிடைத்தது.

நான்கு தினங்களும் கோயிலுக்குச் சென்று கேதார்நாதனை வணங்கி வந்தோம். இங்கு நமக்கும் ஆண்டவனுக்கும் மத்தியில் பிறரொருவர் கிடையாது. காசி விசுவநாதர் ஆலயத்திற் போலவே இங்கும் நாமே அருகிற் சென்று, நம்கையால் தொட்டு, அபிஷேகாதிகள் செய்து

கைந்துருகிப் பாடி, ஆடித் துதித்து வணங்கலாம். பிரம்மச் சாரியின் அருஞ்சேவையால், பிரம்ம கமலங்களால் கேதார் நாதனை அருச்சிக்கும் பாக்கியமும் பெற்றோம். ஆலயத்தில் நடைபெறும் ஆராதனை முற்றிலும் தென்னாட்டில் நடக்கும் முறையையே ஒத்திருந்தது. பூஜை செய்பவரும் தென்னாட்டிலிருந்து வந்தவர்தான்; பம்பாய் மாகாணத்தில், கன்னடப் பிரதேசமாகிய தார்வார் ஜில்லாவிலிருந்து வந்தவர். லிங்காயத் (லிங்கம் கட்டிகள் என்று சில இடங்களில் அவர்கள் வழங்கப்படுகிறார்கள்) வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவ்வேற்பாடு பல நூற்றுக்கணக்கான வருஷங்களாக நடந்து வருகிறது.

பகலைவிட இராப்பொழுது அங்கு விசேடமாகத் தோன்றிற்று. இரவின் பூரண அழகை இமயத்தில்தான் அனுபவிக்கமுடியும். கீழ்ப்பிரதேசங்களில் பகலிலும் காணப்படாத ஒரு சாந்தி அங்கு நிலவுகிறது. மனித வாழ்க்கையில் போட்டியால் நேரும் கோர அனுபவங்கள் அங்கே கிடையா. இரவில், இச் சாந்தியும் அமைதியும் பன்மடங்கு அதிகமாயிருக்கின்றன. இச் சாந்தியில் நம் மனது நம்மையும் அறியாமல் லயிக்கின்றது. மனதை ஒரு குரங்குக்கு ஒப்பிடுவார்கள். அதுவும் கள்குடித்த குரங்காம். அதைத் தேளும் கொட்டிவிட்டதாம். அதைப் பிசாசும் பிடித்துவிட்டதாம். அதன் ஆட்டத்தையும் ஓட்டத்தையும் சொல்லவும் வேண்டுமா? இம்மாதிரி நம் மனதும் சதா ஓய்வின்றிச் சுழன்றுகொண்டே யிருக்கிறது. இமயத்து இரவில், இயற்கையே சாந்தமயமா யிருக்கும் நிலையில், நம் மனதும் இச் சாந்தத்தில் வயப்படுகிறது. பொறிகளின் ஆட்டம் சற்றே அடங்குகிறது. நம் நினைவுகள் நம்மையும் அறியாமல் நம்மைப் படைத்த இறைவனை நாடுகின்றன. இக் காரணத்திற்காகவே இமயம் யோக சாதனைகளுக்கேற்ற இடம் என்று பெரியோர் உரைக்கின்றார்கள் போலும்.

கோயில்தான் வடகோடியி லிருக்கிறது. அதற்குமேல் கட்டிடங்கள் ஒன்றுமில்லை. அங்கே குவிந்திருக்கும் கற்குன்று தூரத்திலிருந்துபார்ப்பதற்கு வெட்டிப்போட்ட கிணற்று மண்மாதிரித் தோன்றுகிறது. அக் குன்றின்மேல் ஏறிப் பார்க்க விரும்பினேம். கேதார்நாத் பிரம்மச்சாரி எங்களுக்கு வழிகாட்டியாக இருந்து எங்களை அழைத்துச் சென்றார். பெரிய உறைபனிப் பாறைகள் அங்குத் தென் பட்டன. அவை உருகிவந்த நீர்தான் ஆருக ஓடிக்கொண் டிருந்தது. இந்த உறைபனிப் பாறைகளின்மீது மத்தியா னத்தில், சூரியவெப்பம் அதிகமாயிருக்கும்போது நடந்து செல்வது ஆபத்தான விஷயம். காலையிலும் மாலையிலும், அவ்விடங்களில் சூரிய கிரணங்கள் படாதபோது அவை உருகா. ஆதலால் ஆபத்தின்றி அவற்றின்மேல் நடந்து செல்லலாம். மத்தியானவேளைகளில் உஷ்ணம் அதிகமா யிருக்கும்போது அவை உருக ஆரம்பிக்கும். உருகினல் எந்த க்ஷணமும் வெடித்துக் கீழே விழக்கூடும். எனவே, உறைபனிப் பாறைகளின்மேல் செல்லும்போது அதிவேக மாகவும் ஜாக்கிரதையாகவும் செல்லவேண்டி யிருந்தது.

இக் குன்றிற்குப் பின்னல் வெகு சமீபத்தில் செங்குத் தான சுவர்போல், வானைத் தாங்கும் கம்பம்போல், மிளிர் கின்ற சுடராயக் கேதார்நாத் சிகரம் நின்று கொண்டிருந் தது. பகலில் கதிரவன் ஒளியிலாகட்டும், இரவில் நக்ஷத் திரங்களின் குளிர்ச்சியான பிரகாசத்திலாகட்டும், அல்லது இவ்விரு ஒளிகளும் இல்லாதபோது, சுயமான தனது சோதியிலாகட்டும், அதன் அழகும், கம்பீரமும் ஒப்பற்ற னவாயிருந்தன. கடக்கமுடியாத இப் பனிமலைச் சுவருக் குப்பின் ஸ்வர்க்காரோகணம் இருக்கின்றது. இவ்வழி தான் பாண்டவர்கள் சென்ற மகாபிரஸ்தான மார்க்கம் என்று சொல்லப்படுகிறது.

கேதார்நாத்தில் நாங்கள் இருந்த தினங்கள் மிக்க இன்பமாய்க் கழிந்தன. மனித வாழ்க்கையின் லட்சியம்

அங்குத் தென்பட்டதுபோலிருந்தது. சாதாரணமாக நம் வாழ்வனைத்தும் உடலைச் சார்ந்தது. இவ் *'வாழ் வாவது மாயம், இது மண்ணாவது திண்ணம்', ஆதலால் 'தாழாது அறம் செய்மின்!' என்று ஒரு சக்தி அங்கு நமக்கு உணர்த்தியது. 'இப்புலன்களுக்கு மேற்பட்ட வாழ்க்கையொன்றுண்டு. அஃது இவ்வுலகப் பொருள்கள் அனைத்தும் அளிக்க முடியாததொரு பேரின்பத்தை அளிக்கவல்லது. அதை நாடுமின்!' என்று அவ்விடத் தைய வாயுமண்டலமே நமக்கு அசரீரியாயிருந்து உபதே சித்தது. இப்பேரின்பம் பெறுவதில் போட்டியில்லை; சண்டையில்லை. நாடுவோர் அனைவருக்கும் அஃது உண்டு. நாடாதார்க்கும் அது காத்துக் கொண்டிருக்கிறது, நாடும் போது கிடைக்க. பனி உருகி ஆறுகச் சதா ஓடி ஒலித் துக்கொண்டிருக்கும் கங்கை, 'பேரின்ப வெள்ளம் பொங் கித் ததும்பிப் பூரணமாய் ஓடுகிறது......சேரவாரும் ஜகத்தீரே!' என்று அனைவரையும் கூவியழைப்பது போலிருந்தது.

கடைசியில் கேதார்நாத்திலிருந்து விடைபெறும் நாள் வந்தது. காலையில் ஆலயம் சென்று கேதார்நாதன் அடி பணிந்து தொழுதோம். வழிபாடு முடிந்து எங்கள் ஜாகைக் குத் திரும்பி, உணவருந்திக் கொஞ்சம் இளைப்பாறிப் புறப் பட்டோம். ஒன்றரை மைல் சமமெனச் சொல்லியிருக் கிறேன் அல்லவா? அங்கேதான் கேதார்நாத்தின் கடைசிக் காட்சி தென்படுகிறது அங்கேதான் நாம் கேதார்நாத னிடம் விடைபெற்றுக் கொள்ளவேண்டும். மனதில் ஒரு விதமான கனிவும், உணர்ச்சியும் நிறைந்திருந்தன. சில க்ஷணங்கள் கண்மூடிப் பிரார்த்தனை செய்தோம். 'ஹே தேவ தேவ, எங்கள் மனதில் போதுமான பக்தியில்லை,

* இது சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கேதாரப் பதிகத்திலுள் ளது. அவர் குறிப்பிட்டிருக்கும் திருக்கேதாரம் இந்த ஸ்தலம் என்று நிச்சயமாய்ச் சொல்ல இயலவில்லை.

உன்னை உறைவிடமாகக் கொள்ளத்தக்க உயர்ந்த தூய்மையில்லை. எனினும், சகலத்திற்கும் உயிருக்குயிராய் இலங்கும் நீ எங்கள் உள்ளத்தையும் கோயிலாகக் கொள்வாயாக!' என்ற எண்ணம் தானகவே மனதில் தோன்றிற்று. கண்களில் நீர் துளித்தது. கடைசியாக ஒருமுறை கேதார் நாதனை நோக்கித் தரிசனம் செய்து விட்டுத் திரும்பிக் கீழே இறங்க ஆரம்பித்தோம்.

௯. துங்கநாத்

கேதார்நாத்தை விட்டுப் புறப்பட்ட அன்றிரவே கௌரி குண்டம் வந்து சேர்ந்தோம். வழி முழுவதும் இறக்க மாதலால் அதிகச் சிரமம் தோன்றவில்லை. அடுத்த நாள் வெந்நீர் ஊற்றில் குளித்து இளைப்பாறிவிட்டுப் புறப்பட்டோம். குப்தகாசி போய்ச் சேருவதற்கு முன், அதனருகில் பத்ரிநாத் போகும் பாதை பிரிகிறது. பத்ரிநாத் செல்ல விரும்புகிறவர்கள் குப்தகாசிக்குச் செல்லவேண்டியதில்லை. பிரிகிற தடத்திலிருந்து ஒரே இறக்கம். அடியில் வெகு தூரத்தில் மந்தாகினிகங்கா ஓடுகிறாள். மந்தாகினியைக் கடந்து ஒரு பெரிய மேடு ஏறினால் உகிமடம் வந்து சேருகிறோம்.

உகிமடம், முக்கியமான ஊர்களில் ஒன்று. அங்கே தான் கேதார்நாத், குப்தகாசி முதலிய கோயில்களுக்கு அதிபதியாயிருக்கும் ராவல் (மடாதிபதி) இருந்து வருகிறார். மேற்கண்ட இரு ஸ்தலங்களும், இன்னும் பாண்டுகேசுவரம் போன்ற மற்ற சிவஸ்தலங்களும் இவர் ஆளுகைக்கு உட்பட்டு நடந்து வருகின்றன. இம்மடத்து அதிபதியும், தென்னிந்தியாவில் கன்னடப் பிரதேசமாகிய தார்வார் ஜில்லாவிலிருந்து வந்தவர்; லிங்காயத் வகுப்பைச் சேர்ந்தவர். அந்த மடத்திற்குச் சென்றிருந்தோம். இப்பொழுது கிலமாகத் தோன்றினாலும், கட்டிடம் மிக அழகாகத் தென்பட்டது. நாங்கள் சென்ற போது இருந்தவர் நூற்றிருபத்தாறுவது ராவல் என்று சொன்னார்கள். இந்த மடமும் ஆதிசங்கரர் காலந்தொட்டு நடந்து வருவதாகச் சொல்லப்படுகிறது. உகிமடத்தில் கவர்ன்மெண்டாரால் பராமரிக்கப்படும் ஒரு நல்ல ஆஸ்பத்திரி இருக்கிறது.

உகிமடத்திலிருந்து குவாலியகாட் வரை ஏகதேசம் சமம். குவாலியகாட்டிலிருந்து ஒன்பது மைல் பெரிய ஏற்றம். இந்த யாத்திரை முழுவதிலும் கஷ்டமான இடங்களில் இதுவும் ஒன்று. பாதை அடர்ந்த காடுகளின் மத்தியிலே செல்லுகிறது. காடுகளில் கொடிய மிருகங்கள் நிறைய இருக்கின்றனவெனச் சொல்லுகிறார்கள். இருபக்கங்களிலும் ஒக் மரங்கள் நிறைந்திருந்தன. ஒக் கொட்டைகள் கரடிகளுக்கு மிகவும் பிரியமாம். ஆதலால், கரடிகள் தான் இப்பக்கம் அதிகம் நடமாடுகின்றனவாம். சிற்சில சமயங்களில் புலிகளும், சிறுத்தைகளும் கூட வருவதுண்டெனச் சொன்னார்கள். பெரியபுலியைச்சுடுவது சுலபம். அது தைரியமாக வெளியே வரும்; ஆதலால் சுட முடியும். ஆனால் சிறுத்தைகள் ரகசியமாக வந்து மனிதரை அடித்து இழுத்துச் செல்லும். ஆதலால் இவற்றைக் கொல்வது கடினமாம். இப்பாதையில் சூரிய வெளிச்சமிருக்கும் போதே யாத்திரையை முடித்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள்.

அடுத்த நாள் மத்தியானம் பனியாகுண்டு போய்ச் சேர்ந்தோம். உகிமடத்திலிருந்து இது சுமார் பத்து மைலிருக்கும். வழி நெடுக ஏற்றந்தான். வானம் கறுத்து வந்தது. அன்று மாலையில் நல்ல மழை. கல்மாரியும் நிறையப் பெய்தது. மழை தூறும் போது ஹிமாலயத்தில் எச்சரிக்க வேண்டிய விஷயம் ஒன்றுண்டு. மழை பெய்யும் போது எந்தச் சமயத்திலும் கல்மாரியும் சேர்ந்து பெய்யலாம். ஆதலால் முதல் துளி விழும் போதே குடையை விரித்துப் பிடித்து விடுவது நல்லது. அப்படிச் செய்யாவிடில் கல்மாரியால் மண்டையில் காயமாக நேரிடலாம். சில சமயங்களில் கல்மாரி பெரிது பெரிதாகவும் பெய்வதுண்டு.

மழையின் காரணமாய் வேறு ஒரு தொந்தரவும் ஏற்பட்டது. குளிரும், ஈரமும் அதிகரித்தன. பாதையின் இரு

புறங்களிலும் செடி கொடிகள் நிறைய இருந்தன. இந்த மழை காரணமாகச் செடி கொடிகளிடையே அட்டைகள் ஏராளமாய் உண்டாகின்றன. ஓக் மரத்தழைகளில் அட்டைகள் விசேஷமாய் உண்டாகுமாம். எங்களுடன் சேர்ந்து வைஷ்ணவ சாது ஒருவரும் கேதார்நாத்திலிருந்து வந்து கொண்டிருந்தார். அவர் காலையில் வெளியேபோய் வந்தார். வரும் போது முழங்காலுக்குக் கீழ் இரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது. அது எதனுல் என்று விசாரித்ததில் அட்டை கடித்ததென்று சொன்னர். அட்டை வந்து உடம்பில் ஒட்டுவது தெரிவதில்லை. ஒட்டும் போது துரும்பு மாதிரியிருக்கும். இரத்தம் நிறைய உறிஞ்சிக் கொண்ட பின்னர்தான் கீழே விழும். அது விழுந்த பின்னும் இரத்தம் ஒழுகுவது சீக்கிரம் நிற்பதில்லை. கொஞ்ச நேரம் ஒழுகிக் கொண்டேயிருக்கும். அட்டைகள் நிறைய இருந்தமையால் நாங்கள் அங்கு சாலையின் மத்தியிலேயே ஜாக்கிரதையாக நடக்க வேண்டி யிருந்தது.

பனியாகுண்டிலிருந்து சோடா சோப்தா அரை மைல்தானிருக்கும். இங்கு துங்கநாத்திற்கு வழி பிரிகிறது. துங்கநாத், கேதார் நாத்திலிருந்து பத்ரி போகும் பாதையில் இல்லை; கொஞ்சம் விலகி யிருக்கிறது. அது அதிக தூரம் இல்லை எனினும், ஏறவேண்டிய மேடு மிகக் கடினம். எனவே பலர், துங்கநாத் செல்லாமல் நேராகச் சென்று விடுவதும் உண்டு. மேடு உண்மையாகவே கடினமானதுதான். பல இடங்களில் செங்குத்தாக இருக்கிறது. அந்த மேட்டில் ஏறுவதானுல் திணற வேண்டும். களைத்துப் போய்த் தாகமானுல் தொண்டையை நனைத்துக் கொள்ளவும் வழியெங்கும் தண்ணீர் அகப்படாது. மத்தியானத்தில் சூரியன் கொடுமையிலிருந்து தப்பி இளைப்பாற நினைத்தால் நிழல் கொடுக்கக்கூடிய மரம் ஒன்றையும் காண முடியாது. வழியில் கிராமங்கள், 'சட்டி'கள் ஒன்றும் கிடையா. ஒரே மொட்டை மலையும் மேடுந்தான்! ஆனுல், இக்கஷ்டத்திற்

குக் கூலிபோல் மேலே செல்லச் செல்ல இயற்கைக் காட்சிகள் பல, மிக்க வனப்புடன் காட்சி தருகின்றன. வழியில் எங்களைத் தவிர வேறு எவரையும் காணவில்லை. சில சமயங்களில் காட்டுக் கோழிகளும், மற்றப் பறவைகளும் கூவிக் கொண்டு இங்குமங்கும் பறப்பதைத் தவிர வேறு சப்தமேயில்லை. சோடா சோப்தாவிலிருந்து துங்கநாத் சுமார் மூன்று மைல்தானிருக்கும். அதைக் கடந்து செல்லச் சுமார் இரண்டு மணிநேரத்திற்கு மேலாகியிருக்கும். கடைசியில் கோயில் தென்பட்டது. நாங்களும் துங்கநாத் வந்து சேர்ந்தோம்.

கோயில் மலையுச்சியி லிருக்கிறது. இது கேதார்நாத்தைவிடச் சுமார் 600 அடி உயரம் அதிகம். கேதார்நாத்திற்குப் பின்னால், அதற்குச் சமீபத்திலேயே, கேதார்நாத் சிகரமும் அதன் தொடர்ச்சியும் ஒரு மதிற் சுவர் மாதிரி நிற்கின்றன. ஆதலால் அச் சிகரத்தைவிட வேறு பரந்த காட்சிகளை அங்கு காணமுடியாது. ஆனால் துங்கநாத் இப் பனிமலைத் தொடருக்கு எதிரில் தனிச் சிகரமாக விளங்குகிறது. துங்கநாத்திலிருந்து கேதார்நாத், பத்ரிநாத் சிகரங்களுடன் அகண்ட விசாலமான ஹிமாலயத்தின் பனிமலைத் தொடர் தருகின்ற ஒப்பற்ற காட்சியை நாம் பார்க்கிறோம். அங்கு நாம் காணும் காட்சி வருணித்தற்கு அரிது. ஒரு பக்கத்தில் எல்லையற்ற உறைபனி மூடிய மலைத்தொடர்கள் கதிரவனின் கிரணங்களால் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. மற்றொரு பக்கத்தில் அடர்ந்த காடுகள். அந்தப் பனிமலைத் தொடர்களைப் பார்க்கப் பார்க்க ஆனந்தமாயிருந்தது; அவ்வளவு சிரமப்பட்டு அங்கு சென்றது முற்றிலும் தகுமெனத் தோன்றிற்று.

துங்கநாத்தில் மூன்றே பேர் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் கோயிலில் பூஜை செய்பவர்கள். எங்களைப் பார்த்ததும் அவர்களுக்கு வெகு சந்தோஷம். குளிர் அதிகமாகி விட்டதால் அவர்களைத் தவிர மற்ற அனைவரும் கீழே

இறங்கிவிட்டார்கள். 'எங்களுக்கு ஒரு புதிய மனிதனைப் பார்ப்பதும், ஒரு புதிய குரலைக் கேட்பதும் அபூர்வமாய்ப் போய்விட்டன' என்று சொன்னார்கள். கோயிலுக்குள் சென்று துங்கநாதனை வணங்கினேம். வெளியே வந்து மீண்டும் இயற்கை வனப்பின் இன்பத்தைப் பருகினேம். இவ்வியற்கை வனப்பையும், இன்பத்தையும் அனுபவிப்பதற்காகவே நம் முன்னேர்கள் அவ்விடத்தை க்ஷேத்திரமாய்ச் செய்திருக்கிருர்கள் போலும்! அக் காட்சியை விட்டுவர மனமில்லை. ஆனல், உணவொன்றும் அங்கு அகப்படவில்லை. கொஞ்சம் கோதுமை மாவை வைத்துக் கொண்டு அங்கிருப்பவர்கள் ஜீவனம் நடத்திக் கொண்டிருந்தார்கள். எனவே, கொஞ்ச நேரம் தங்கிவிட்டுக் கீழே இறங்கினேம்.

௬௦. ஜோஷி மடம்

துங்கநாத்திலிருந்து பெரிய இறக்கம். சுமார் மூன்று மைல் நடந்து ஜங்கல்சட்டியில், (இந்த ஜங்கல்சட்டி வேறு; கேதாரநாத் போகும் வழியில் இருக்கும் ஜங்கல் சட்டி வேறு) கேதாரநாத்தி லிருந்து பத்ரி போகும் பாதையில் சேர்ந்து கொள்ளுகிறோம். இன்னும் சுமார் நான்கு மைல் நடந்தால் மண்டல்சட்டி வந்து சேருகிறோம். மண்டல்சட்டியிலிருந்து சாமோலி எட்டு மைல்தானிருக்கும். வழியில் கோபேசுவரம் என்ற க்ஷேத்திரம் இருக்கிறது. அங்கு, சுமார் ஆறடி உயரத்தில், ஒரு பெரிய இரும்புக் கோடாலி காணப்படுகிறது. அதைப் பரசுராமருடையதென்று சொல்லுகிறார்கள். சாமோலி வரை முற்றிலும் இறக்கம் என்று சொல்லலாம். பல இடங்களில் நிலம் சாகுபடியாவதைப் பார்க்கிறோம். சாமோலி சுமார் 3500 அடி உயரம்தானிருக்கும். ஆதலால் அங்கே பகலில் வெயில் கொளுத்துகிறது.

சாமோலிக்கு லால் சங்கம் என்ற வேறு ஒரு பெயரும் உண்டு. இது பத்ரி செல்லும் யாத்ரா மார்க்கத்தில் ஒரு பெரிய ஊர். அங்கு ஒரு சிவில் கோர்ட் உண்டு. அன்றியும் அது ஒரு டெபுடி கலெக்டர் கச்சேரி நடக்குமிடம். கோர்ட்டுகளை அனுசரித்து சில வக்கீல்களையும் அங்கு காணலாம். இவற்றை யெல்லாம் தவிர இன்னொன்றுக்கும் அது பெயர் பெற்றதாக இருக்கிறது. அங்கு பார்த்த மாதிரி மூட்டைப்பூச்சி நிறைந்த இடம் நான் வேறு எங்கும் பார்த்ததே யில்லை! பட்டப் பகலில் படுத்திருக்கும்போது, வெகு சாதாரணமாக அவை நம் மேல் ஏறி உலாவுகின்றன. யாத்திரையாக வருபவர்கள் அவற்றிடம் அஹிம்சா தர்மத்தை அனுசரிப்பார்கள் என்ற தைரியம் போலும்!

சாமோலியில் மறுபடியும் அலகநந்தாவைச் சந்திக்கிறோம். இனி அலகநந்தாவின் கரையோரமாகவே பத்ரி போகும் ரஸ்தா செல்லுகிறது. ஜில்லா அதிகாரிகள் இருக்கும் இடங்களுக்கருகி லிருப்பதால் கேதார்நாத் பாதையைவிட இது நன்ருய்ப் பராமரிக்கப் படுகிறது. ஆறுகளையும், ஓடைகளையும் கடப்பதற்குச் சில இடங்களில் இரும்புப் பாலங்களும், தொங்கு பாலங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. தவிர, அதுவே திபெத்திற்குப் போகும் ரஸ்தா. பத்ரிநாத் செல்லும் யாத்ரிகர்களும் அதிகம். எனவே, இவ்வழியில் கட்டிடங்களும், தங்குமிடங்களும், இதர வசதிகளும் அதிகமா யிருக்கின்றன.

குளிர் காலத்தில் திபெத் தேசத்திலிருந்து வியாபாரிகள் வருவார்கள்! இங்கு வியாபாரத்தை முடித்துக் கொண்டு வேனிற் காலத்தில் அவர்கள் திபெத்திற்குத் திரும்புவார்கள். நாங்கள் சென்ற சமயம், குளிர் காலம் ஆரம்பித்து விட்டபடியால், திபெத் வியாபாரிகள் தங்கள் ஆடுமாடுகளுடனும், மூட்டை மூடிச்சுகளுடனும் கீழே இறங்கி வந்துகொண் டிருப்பதைப் பார்த்தோம். ஆட்டு ரோமம், சிலவகைத் தானியங்கள், மருந்து மூலிகைகள், வேடிக்கைச் சாமான்கள் முதலியவற்றை அவர்கள் திபெத்திலிருந்து கொண்டு வந்து இந்தியாவில் விற்கிருர்கள்; இந்தியாவிலிருந்து திரும்பும்போது கம்பளிகள், துணிமணிகள், உப்பு முதலியவற்றை வாங்கிச் செல்லுவார்கள். இந்த வியாபாரிகள் ஆட்டு மந்தைகளுடன் வரும் காட்சி விநோதமா யிருக்கும். சுமார் 100, 200 ஆடுகள்! அவை ஒவ்வொன்றின் மீதும் சிறு! மூட்டைகளை, முதுகில் இரு பக்கங்களிலும் தொங்கிக்கொண்டிருக்கிற மாதிரி போட்டு ஓட்டிக் கொண்டு வருவார்கள். வழியில் சில ஆடுகள் குட்டிபோடும். அக்குட்டிகளால் நடக்க முடியாது. சொந்தக்காரன் அக்குட்டிகளை எடுத்துத் தன்னுடைய பெரிய சட்டைப் பையில் போட்டுக்கொள்ளுவான். சில சமயங்

களில் அதிக வேகமாக ஓடும் ஓடைகள் வழிமறிக்கும். ஆடு களால் அவற்றைக் கடக்க முடியாது. அப்போது சொந் தக்காரன் ஆடுகளை ஒவ்வொன்ருக முதுகைப் பிடித்து ஒரு கையால் தூக்கி அக்கரையை நோக்கி விட்டெறிவான். அவை அக்கரையில் தொப்பென்று நான்கு கால்களிலும் நிற்கிற மாதிரி போய்விழும். இங்ஙனம் தங்கள் ஆட்டு மந்தைகளுடன் அவர்கள் பல நூற்றுக்கணக்கான மைல் தூரம் சென்று வியாபாரம் செய்து வருகிருர்கள்.

திபெத் வியாபாரிக் கூட்டங்களைச் சந்திக்கும்போது அனுசரிக்க வேண்டிய விஷயம் ஒன்றுண்டு; அவை நமக்கு எதிரில் வரும்போது நாம் அவ்வாட்டு மந்தைகளுக் காக விலகி இடம் கொடுத்துக்கொண்டுதான் போகவேண் டும். விலகுவதில் ஒரு விஷயம் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஹிமாலயத்தில், சாதாரண மாகச் சாலையின் ஒருபுறம் மலையாகவும், மற்ருெருபுறம் பள்ளத்தாக்காகவும்தான் இருக்கும். விலகுவது எப் பொழுதும் மலையைச் சார்ந்துதான் விலக வேண்டும். காரணம், பள்ளத்தாக்குப் பக்கம் விலகினல் சில சமயங் களில், ஆடுகளினல் மோதுண்டு தள்ளப்பட்டுப் பள்ளத் தாக்கில் விழுந்து காயமாக நேரிடலாம்.

பத்திரிநாத் சாலையில் திபெத் வியாபாரிகள் பலரைக் காண்கிருேம். திபெத்தியரை அவர்கள் தோற்றத்தி லிருந்தே கண்டுபிடித்து விடலாம். சப்பை முகம், கட்டை உடல்; பார்வைக்கு அழகுமில்லை; சுத்தமும் இல்லை. உடலை யும் துணிமணிகளையும் சுத்தமாக வைத்திருப்பதில் அவர் களுக்கு நம்பிக்கை கிடையாது. தினசரி குளிப்பது என் பதை அவர்கள் என்றும் அறியார்கள். குளிர் காற்றுக்குப் பாதுகாப்பின்றி அவர்கள் முகமும், கைகளும் கறுத்துத் தோன்றும். ஆண் மக்கள் முகத்திலும் ரோமம் சரியாக வளர்வதில்லை. உடையிலும் அதிகம் வித்தியாசம் இல்லை. எனவே, ஆண் மக்களுக்கும், பெண் மக்களுக்கும் வித்தி

யாசம் கண்டுபிடிப்பது கடினம். தேத்தண்ணீர், பச்சை யிறைச்சி முதலியவை அவர்கள் முக்கியமான உணவு என்று கேள்விப்பட்டோம். அவர்களில் சிலரைச் சந்தித் துப் பேசிக்கொண்டிருந்தோம். யாத்திரை ஞாபகார்த்தத் திற்கென வேடிக்கைச் சாமான்கள் சிலவும் அவர்களிடம் வாங்கி வந்தோம்.

சாமோலியிலிருந்து பிபல்கோடி ஒன்பது மைல். அங் கிருந்து கருடகங்கா நான்கு மைல். அங்கு, அப் பெயர் கொண்ட நதி ஓடுகிறது. கருடகங்கா என்ற பெயருக் கேற்ப அந்நதியைப் பற்றி ஒரு கதையும் சொல்லப்படு கிறது. அந்த ஆற்றிலிருந்து ஒரு கல்லை எடுத்துக்கொண்டு போய்ப் பூஜை செய்தால் பாம்புகள் உபத்திரவம் இருக்கா தாம். நானும் வெகு பக்தியுடன் ஒரு கல் எடுத்து வந்து வித்தியாலயத்தில் வைத்திருக்கிறேன். கருடகங்காவி லிருந்து பாதாள கங்கா செல்லுகிறோம். இதற்குக் கொடுத்த பெயர் பொருத்தமானது தான். அந்த இடத்தில் மலை முழுதும் அப்பொழுது தான் வெட்டிப் போட்ட கிணற்று மண் மாதிரி நிரம்ப லேசாயிருக்கிறது. அடிக்கடி பாறைகள் பெரியனவும் சிறியனவுமாக மலைமேலிருந்து உருண்டு வருகின்றன; இப்படி வரும் கற்கள், சில சமயங் களில் யாத்திரிகர் பலரைப் பாதாளம் கொண்டு போய்ச் சேர்த்து விடுகின்றன! இக்காரணத்திற்காகத்தான் அதற்கு அப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது போலும்.

இதற்கடுத்தது குலாப் சட்டி. அலகநந்தாவின் கரை யோரமாகவே செல்லுகிறோம். சில சமயம் பாதை மிக மேடாக இருக்கிறது. ஆறு வெகு ஆழத்தில் போய்விடு கிறது. பலவிதமான காட்சிகள் தென்படுன்றன. பல இடங்களில் நிலம் சாகுபடி செய்யப்படுகிறது. கருடகங் காவில் பனி மூடிய சிகரங்களின் காட்சியை மறுபடியும் பார்க்கிறோம். பிபல் கோடியிலிருந்து குலாப் சட்டி ஒன் பது மைல். அங்கிருந்து மூன்று மைல் சென்றால் குமார்

சட்டி சேருகிறோம். அதற்குமேல் பதின்மூன்று மைல்களுக்கப்பால் ஜோஷி மடம் இருக்கிறது.

ஜோஷி மடம் பத்ரி போகும் சாலையில் மிக முக்கியமான ஓர் ஊர். கேதாரநாத் சாலையில் குப்த காசியைப் போல், பத்ரிநாத் பாதையில் இதுவே மக்கள் பன்னிரண்டு மாதங்களும் வசிப்பதற்கேற்ற கடைசியான பெரிய ஊர் என்று சொல்லலாம். பத்ரிநாத் ராவல் (பூசாரி) பத்ரிநாத் கோயில் மூடியிருக்கும் காலத்தில் வசிப்பதற்கு இங்கே தான் இடம் இருக்கிறது. ஒரு நல்ல ஆஸ்பத்திரி இருக்கிறது. ஒரு வாசகசாலையையும் அதில் சில ஆங்கிலப் பத்திரிகைகளையும் பார்க்க மிக்க மகிழ்ச்சி யுண்டாயுற்று. ஊரும் சற்றுப் பெரியதாகவே தோன்றிற்று. கைலாய கிரிக்கு நதிக் கணவாய் வழியாகச் செல்லும் மார்க்க மொன்று இங்கிருந்து பிரிந்து செல்லுகிறது.

இந்த இடத்தில்தான் ஆதிசங்கரர் ஜோதிர் மடத்தை ஸ்தாபிதம் செய்தார். அவர் இந்தியாவின் நான்கு திக்குகளிலும் தம்முடைய மடத்தை ஸ்தாபிதம் செய்தாரல்லவா? மேற்கே துவாரகை, கிழக்கே பூரி, தெற்கே சிருங்கேரி—இந்த இடங்களில் மடங்களைக் கட்டிய மாதிரி வடக்கே ஜோதிர் மடத்தை ஸ்தாபித்தார். அந்த மடத்தின் பெயரே ஊருக்குப் பெயராகி, அதுவே இப்பொழுது ஜோஷி மடம் என்று மாறி வழங்கி வருகிறதுபோலும். ஜோதிர் மடத்தில் சுமார் நூற்றைம்பது வருஷங்களுக்கு முன் கடைசிச் சங்கராச்சாரியார் இருந்தாரெனச் சொல்லுகிறார்கள். ஆதிசங்கரர் ஸ்தாபித்த மடத்தைப் பார்க்கச் சென்றோம். அந்த இடமெல்லாம் உடைந்தும், இடிந்தும் கிலமாகி யிருந்தது. ஒரு பெரிய மரம், அதனடியில் ஒரு சிறு குடிசையில் ஒரு சிவன் கோயில்—இவைகளும், சில இடிந்த கட்டிடங்களின் தளமுந்தான் அந்த இடத்தில் இப்பொழுது காணப்படுகின்றன.

ஜோஷி மடத்திலிருந்து பனி மலைத் தொடர்களின் காட்சி வெகு அழகாகக் கிடைக்கிறது. இந்தச் சாலையில் கேதார்நாத் பாதையிற் காண்பதைவிட அதிகமான யாத்திரிகர்களைக் காண்கிறோம். சாமோயி தாண்டியதுமே யாத்திரிகர் கூட்டம் அதிகரிக்கிறது. கேதார்நாத் சாலையில் "கேதார்நாத் சுவாமிக்கு ஜே!" என்ற ஒலியின் முழக்கத்தைக் கேட்கிறோம். பத்ரி சாலைக்கு வந்ததும், அது "பத்ரி விசால்கி ஜே!" என்று மாறுகிறது. இங்கு யாத்திரிகர் ஒருவருக்கொருவர் பத்ரிவிசால்கி ஜே! என்று சொல்லி வரவேற்கிறார்கள். ஜோஷி மடத்திலிருந்து பத்ரிநாத் பத்தொன்பது மைல்தான். ஜோஷி மடத்திற்கு அருகிலேயே அலகநந்தாவும், விஷ்ணு கங்காவும் சங்கமமாகும் விஷ்ணு கங்கா இருக்கிறது. இரண்டும் மோதித் தண்ணீர் ஆவியாகிக் கிளம்பும் காட்சி வெகு அழகாக இருக்கிறது.

ஜோஷி மடத்தை விட்டால் அடுத்த தங்குமிடம் பாண்டுகேசுவரம். இங்கிருந்து குளிர் அதிகரிக்கிறது. இன்னும் ஆறு மைல் நடந்து ஹனுமான் சட்டி வந்து சேருகிறோம். இங்கிருந்து பத்ரிநாத் ஏழு மைல்தான். அதில் ஐந்து மைல் தூரம் மிகக் கடுமையான ஏற்றம். பல இடங்களில் மண் சரிந்து விழுந்துகொண்டேயிருப்பதால் புது வழிகள் அமைத்த வண்ணமிருக்கிறார்கள். ஏற வேண்டிய மேடு மிகக் கடினம். மூச்சுத் திணறிக் கொண்டே ஏறுகிறோம். மேடு ஏறி முடிந்ததும், பத்ரிகாசிரமம் அலகநந்தாவின் கரையில் அழகாகக் காட்சி தருகிறது.

கக. திரு பத்ரி மகாத்மியம்

உலகைப் படைத்த பின் உலகத்தோரை உய்விக்க வேண்டிய பொறுப்பு மஹாவிஷ்ணுவுக்கு வந்தது. அதற்காக அவர் வேதங்களை உண்டாக்கினர். ஆனால், முதல் குருவாக இருந்து வேதங்களை அனுஷ்டித்துக் காட்ட ஒருவர் வேண்டியிருந்தது. எனவே, அவரே பூலோகத்தில் திருவவதாரமெடுத்து ஹிமாலயத்தில் தவம் செய்தார். அப்பொழுது லக்ஷ்மிதேவி ஒரு பதரி (இலந்தை) மரமாகத் தோன்றி அவருக்கு நிழல் கொடுத்தாராம். இதிலிருந்துதான் அவ்விடத்திற்கு பத்திரிகாசிரமம் என்ற பெயர் வந்தது போலும். மகாவிஷ்ணு தவம் செய்து முடிந்த பிறகு அங்கு நரனுக்கு எல்லா மந்திரங்களிலும் உயர்ந்ததெனக் கருதப்படும் நாராயண மந்திரத்தை உபதேசம் செய்தார். இன்றும் பத்திரிகாசிரமம் நரநாராயணர் தவம் செய்த இடம் என்று வழங்கப்படுகிறது. அதற்கேற்றபடியே அங்கு மூர்த்தியும், ஒருவர் பத்மாசனத்தமர்ந்து உபதேசம் செய்ய, மற்ெருருவர் அவ்வுபதேசத்தை ஏற்றுக் கொள்ளுகிறமாதிரி அமைந்திருப்பது கவனிக்கத் தக்கது. உலகத்தில் தோன்றிய ஆசிரியர்களில் இவரே முதல் ஆசாரியரென்றும், உலகில் தோன்றிய ஞானம் அனைத்திற்கும் ஆரம்பஸ்தானம் பத்ரிகாசிரமம் என்றும் வைஷ்ணவர்கள் கருதுகிறார்கள்.

மகாபாரதத்திலும் பத்ரிகாசிரமத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆரண்ய பர்வத்தில் 145-ஆம் சருக்கத்தில் இதைக் காணலாம். பாசுபதத்திற்காக அர்ஜுனன் தவம் செய்யச் சென்றான். அது சமயம் தருமர் முதலியோர் லோமச முனிவருடன் தீர்த்த யாத்திரை செய்தார்கள். அவர்கள் சென்ற க்ஷேத்திரங்களுள் பத்ரிகாசிரமமும்

ஒன்று. அது நாராயணர் தவம் செய்த இடம்; ஆக லால் மிகப்புனிதமாக அப்பொழுதும் கருதப்பட்டிருந்தது. அப்பொழுது பதரி மரச் சோலைகள் அங்கு நிறைந்திருந் தனவாம். பல முனி புங்கவர்களும், தவசிகளும் அவ் விடத்தை நாடி வந்து அங்குத் தவம் செய்து வந்தார் களாம். கங்கையோரத்திலிருந்த அந்த க்ஷேத்திரம், சூரிய வெளிச்சம் புகாதபடி அவ்வளவு நெருங்கி வளர்ந்த மரங் கள் நிறைந்த காடுகளால் சூழப்பட்டிருந்தது. பலவிதமான பூஞ்செடிகள் நிறைந்திருந்தன. அக்கினி குண்டங்கள் பல ஆங்காங்கு இருந்தன. ஹோமங்கள் தினசரி அங்கு நடந்து வந்தன. வேத கோஷங்கள் சதா ஒலித்துக் கொண்டிருந்தன. முனிவர்கள் பலர் பழம், கிழங்குகளை உண்டு, மரவுரி உடுத்து அங்குத் தவம் செய்து கொண் டிருந்தனர் என்று பலவாறுகப் பத்ரிகாசிரமத்தைப் பற்றி மகா பாரதத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றது.

பத்ரிகாசிரமம் வைஷ்ணவ பக்தர்களால் அன்புடன் போற்றப்படும் நூற்றெட்டுத் திருப்பதிகளில் ஒன்றுகத் திகழ்கிறது. பல ஆழ்வார்கள் இதைப்பற்றிப் பாடி யிருக் கின்றனர். பெரியாழ்வார் "கங்கையின் கரைமேற் கை தொழ நின்ற கண்டமென்னும் கடிநக"ரைப் பற்றிப் பாடிய பதிகத்தில், பத்ரியை "எம் புருடோத்தமன் இருக்கை" எனக் குறிப்பிட்டிருக்கிறுர். இப்பொழுது தேவப் பிரயாகை என்று வழங்கி வரும் க்ஷேத்திரந்தான் கண்டமென்னும் கடிநகர மென்று குறிப்பிட்டிருக்கிற தெனச் சொல்லுகிறுர்கள். திருமங்கையாழ்வார் பத்ரிக்கே வந்திருந்தாரெனத் தெரிகிறது. இப்போது நந்தப் பிர யாகை என்று வழங்கப்படும் ஊர் வழியாகத்தான் அவர் சென்றிருக்கிறுர். அப்போது அதற்குத் திருப்பிரிதி என்று பெயர்போலும். அப்பெயரால் ஒரு பதிகமும் பாடி யிருக் கிறுர். இப்போது நாம் கடந்து செல்லும் ஊர்களாகிய தேவப்பிரயாகை, ருத்ரப்பிரயாகை, நந்தப்பிரயாகை முத

வீய ஊர்களின் வழியாகத்தான் அப்போதும் பாதை இருந்திருப்பதாகத் தெரிகிறது. 'வதரி வணங்குதுமே' (முற்ற மூத்து என்ற தலைப்புடையது) என்ற ஒரு பதிகமும் அவர் பாடி யருளி யிருக்கிறார். இதில் குறிப்பிட்டிருக்கும் வதரி விஷ்ணுப் பிரயாகையென்று சிலர் சொல்லுகிறார்கள். சிலர் இதுவும் பத்ரிகாசிரமத்தைப் பற்றியது என்று அபிப்பிராயப் படுகின்றனர். "கங்கையின் கரைமேல் வதரி யாசிரமத்துள்ளானே" என்று ஒரு பதிகமும் "ஏன முனுகி' என்ற தலைப்பில், பத்ரிகாசிரமத்தைப் பற்றிப் பாடி யருளி யிருக்கிறார்.

பத்ரிகாசிரமம் சரித்திரத்திற்கு எட்டாத காலத்திலிருந்து மக்களின் மதிப்பிற்குரிய புனித் க்ஷேத்திரமாகப் போற்றப்பட்டு வந்திருக்கிறதென்பதை மேற்கண்ட வரலாற்றிலிருந்து தெரியலாம். மகாபாரத யுத்தத்தின் காலம் இப்பொழுது எளிதில் வரையறுக்கக் கூடியதன்று. சரித்திர காலத்திற்கு முற்பட்டது. அதாவது சுமார் மூவாயிரம் வருஷங்களுக்கு முற்பட்டதெனச் சொல்லலாம். அப்பொழுதே அஃது ஒரு பெரிய க்ஷேத்திரமாய்க் கருதப்பட்டிருந்த தென்பதற்கு யுதிஷ்டிரர் முதலிய பாண்டவர்கள் அங்கு சென்றதே சான்று. ஆனல், அந்தச் சமயத்தில் அங்கு ஆலயம் அமைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. நரநாராயணர் தவம் செய்த இடத்திற்கு அவர்கள் போனதாகத்தான் மகா பாரதம் சொல்லுகிறது.

புத்த பகவான் திருவவதாரத்திற்குப் பின் நாடு முழுதும் பௌத்தத்தைத் தழுவியதுபோல், பத்ரியும் பௌத்தர் ஆளுகைக்குள் வந்திருக்க வேண்டும். பத்ரியில் எழுந்தருளி யிருக்கும் மூர்த்தியை இன்றும் திபெத்தியர் புத்த பகவானுக வணங்குகிறார்கள். வருஷத்திற்கு ஒருமுறை மானுக் கணவாய்க்கு அப்புறத்தில் திபெத்தி லிருக்கும் பௌத்த மடாலயத்திலிருந்து இன்றும் காணிக்கைகள் பத்ரிக்கு வந்து கொண்டிருக்கின்றன. ஆதிசங்கரர்

வந்தபோது கேதாரநாத் போலவே, பத்ரியையும் ஹிந்து தர்மத்துக்கேற்ப மறுபடியும் பிரதிஷ்டை செய்து, பூஜை செய்ய வேண்டிய நியமங்களையும் நிர்மாணம் செய்து சென்றார்.

இந்தியாவின் வடகோடியிலிருக்கும் இக்கோயிலுக்கு இந்தியாவின் தென்கோடியான மலையாளத்திலிருந்து வருபவர்கள் பூஜை செய்ய வேண்டுமென்பது அவர் நியதி. அவர் தோன்றி மறைந்து இப்பொழுது பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாகிவிட்டன; இப்பன்னிரண்டு நூற்றாண்டுகளில் பல ராஜ்யங்கள் தோன்றி யழிந்திருக்கின்றன; பல ஏகாதிபத்யங்கள் தோன்றி மறைந்திருக்கின்றன; மக்களின் தன்மையும் பலவிதங்களில் மாறி யிருக்கிறது. ஆனல் ஆதிசங்கரர் பத்ரி கோயில் பூஜைக்குச் செய்த நியதி இன்றும் நடந்து வருகிறது. தற்காலத்தில் உள்ள போக்குவரத்து வசதிகள் யாதும் இல்லாத காலத்திலும் இது நடந்து வந்திருப்பது பேராச்சரியமா யிருக்கிறது. இப்பொழுதும் புதிதாக ஓர் அர்ச்சகர் வேண்டியிருந்தால், இக்கோயிலுக்குத் தர்மகர்த்தாவாக இருக்கும் கஹர்வால் ராஜா இப்பணிக்கு ஏற்ற நம்பூதிரிப் பிராமணரொருவரைப் பொறுக்கி அனுப்பும்படி திருவாங்கூர் சமஸ்தானத்தாருக்கு எழுதுகிறார். அவர்களும் ஒருவரை அனுப்புகிறார்கள். அந்நாளிலிருந்து இந்நாள் வரை அங்கே நம்பூதிரிப் பிராமணர்களாலேயே பூஜை நடந்து வருகிறது.

பல பாஷைகள், பலவிதப் பழக்க வழக்கங்கள், பலவித ராஜீய அமைப்புகளால் இந்தியா இந்தப் பல நூற்றாண்டுகளில் அவ்வப்போது பிரிவுற்றதாகக் காணப்படினும், இப்பிரிவுத் தோற்றங்கள் அனைத்தும் மேற்போக்கானவை. அடிப்படையாகக் கலைஞானத் துறையில் ஓர் ஆழ்ந்த ஒற்றுமை நம் நாட்டில் உண்டென நிரூபிப்பதற்காகவே ஆதிசங்கரர் இவ்விதம் செய்தார்போலும்.

கஉ. திரு பத்ரிகாசிரமம்

பத்ரிக்குச் செல்லும் யாத்திரிகர் அனேகர். கேதாரநாத்திற்குச் செல்லும் யாத்திரிகர் குறைவு. ஆனால், பத்ரி மாத்திரம் செல்லுபவர் ஆயிரக்கணக்கான பேர்களைக் காணலாம். பத்ரிநாத் யாத்திரை கேதார்நாத் யாத்திரையைவிடக் கஷ்டத்தில் குறைந்ததென்பது அதற்கு ஒரு காரணமா யிருக்கலாம். கேதார்நாத்தில் ரஸ்தாவின் கடினமும், குளிரின் கொடுமையும், அது தவசிகளுக்கேற்றது என்பதைத் தெரிவிக்கின்றன. பத்ரிகாசிரமம் பக்தர்களுக்கு உகந்தது. ஆடிப் பாடிக் குதித்து மகிழ்ந்து, " அப்பனே, ஆனந்த வடிவனே, உன் பொற்பாதத்தை அடையப் பெற்றால், இனிப் பெறத் தக்கதொன்றுமில்லை " எனப் பக்தியால் பூரித்துச் சொல்லும் பக்தர்களுக்கு ஏற்றது பத்ரி. எப்பொழுதுமே பத்ரியில் பக்தர் கூட்டம் அதிகமா யிருந்திருக்கின்றது. திருமங்கையாழ்வார் கூட அவர்பாடிய திருப்பதிகத்தில், " ஆயிரநாமம் சொல்லி வலங்கொள் தொண்டர் பாடி யாடும் வதரி வணங்குதுமே" என்று சொல்லி யருளியிருக்கின்றார்.

பத்ரியில் வசதிகளும் அதிகம். இங்கு யாத்திரிகர் கூட்டம் அதிகமா யிருப்பதைத் தவிர, இது திபெத் செல்லும் மார்க்கமாயு மிருக்கிறது. பத்ரிக்கு வடக்கே சுமார் இரண்டு மைலில் மானக் கணவாய் ஆரம்பிக்கிறது. இக்கணவாய் வழியாகத்தான் திபெத்திற்குச் சாலை செல்லுகிறது. இதன் வழியாகத்தான் திபெத் வியாபாரிகள் குளிர் கால ஆரம்பத்தில் இந்தியாவுக்குள் வந்து வேனிற் கால ஆரம்பத்தில் திபெத்திற்குத் திரும்பிச் செல்லுவார்கள். எனவே, பத்ரியில் சாதாரணமாக எல்லாச் சாமான்களும் கிடைக்கும். பல கடைகள் கொண்ட ஒரு கடை வீதியும் அங்கு உண்டு. இதைப்பற்றி நகைச் சுவையுள்ள நண்பர் ஒருவர் சொன்ன வார்த்தைகள் ஞாபகத்திற்கு

வருகின்றன. "கேதார்நாத் ஒன்றுமில்லாத ஆண்டியின் (சிவபெருமான்) இடம். அங்கு என்ன கிடைக்கும்? பத்ரி, லக்ஷ்மி வதியும் இடமன்றோ? இங்கு எல்லாம் கிடைக்கும்" என்றார். இது முற்றிலும் உண்மைதான். இங்கு ஒரு தபாலாபீசும், தந்தி ஆபீசும் கோயில் திறந்திருக்கும் மாதங்களில் வேலை செய்ய வருகின்றன. இவை யாத்திரிகர்களுக்கு மிகுந்த சௌகரியத்தை அளிக்கின்றன.

மனிதனால் உண்டாகக்கூடிய செயற்கை வசதிகள் பலவற்றைக் காட்டிலும் அரிய வசதியொன்றை இயற்கை பத்ரிக்கு அளித்திருக்கிறது. அதுதான் பத்ரியில் காணப்படும் வெந்நீர் ஊற்று. இதற்குச் சப்தகுண்டமென்று பெயர். இதைப் பத்ரிநாராயணன் தன் பக்தகோடிகளுக்குக் கருணை கூர்ந்து அளித்த வரப் பிரசாதமெனச் சொல்லலாம். அதில்லையானால் அங்கே கூடும் ஆயிரக் கணக்கான யாத்திரிகர்களுக்கு ஹிமாலயத்தின் குளிரைத் தாங்குவது மிகச் சிரமமா யிருக்கும். பத்ரி, சமுத்திர மட்டத்திற்குச் சுமார் 11,000 அடி உயரத்திலிருக்கிறது. எனவே, குளிர் கடுமையாகவே யிருக்கும். கோயிலுக்கருகில் அலகநந்தாவின் கரையோரத்திலேயே அஃது அமைந்திருக்கிறது. ஒரு தெப்பக்குளம் மாதிரி கட்டி அதில் அந்த வெந்நீர் வந்து விழும்படி அழகாகச் செய்திருக்கிறார்கள். புது நீர் வரவும், பழைய நீர் வெளியே போகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. காலையிலும், மாலையிலும், எந்தத் தருணத்திலும் அதில் இறங்கி ஆனந்தமாய்க் குளிக்கலாம். பகலிலும், இரவிலும், எச் சமயத்திலும் அங்கு வெந்நீர் அகப்படுவதே குளிரின் கொடுமையை அகற்ற உதவுகிறது.

பத்ரிநாத் ஊரும் கேதார்நாத்தைவிட மிகப் பெரியது. கேதாரநாத்திற்குப் பின் கேதார்நாத் சிகரம் அதனுடன் சேர்ந்த மலைத் தொடர்களோடு எவரும் கடக்க முடியாத சுவர்போல் வானை அளாவி நிற்கிறது. அதன் தோற்றம்

கம்பீரமாகவும், கண்ணைக் கவரத்தக்கதாயு மிருக்கிறது. பத்ரியின் முக்கிய சிகரத்திற்கு நீலகண்ட மென்று பெயர். இதுவும் அழகானதென்றாலும், கேதார் சிகரத்துடன் ஒப்பிடற்பாலதன்று. கேதார்நாத்தில் காணப்படும் உறை பனி மூடிய மலைத் தொடர்கள் பத்ரியிலிருந்து அதிகம் தென்படுவதில்லை. பத்ரியி லிருந்து திபெத்திற்குச் சாலை செல்வதால் இரு பக்கமும் அது திறந்து விட்டது போல் தோன்றுகிறது.

ஆலய வழிபாட்டிலும், பத்ரிக்கும் கேதாரத்திற்கும் வேறுபாடு உண்டு. கேதார்நாத்தில் நாமே தொட்டு, அர்ச்சித்து ஆண்டவனுக்குப் பூஜை செய்ய இயலும். பத்ரியில் கர்ப்பக் கிரகத்திற்குள் அதன் அர்ச்சகரைத் தவிர வேறெவரும் போகக் கூடாது. பூஜை முறை தென்னிந்தியாவில் வைஷ்ணவக் கோயில்களில் வழங்கி வருவதை முற்றிலும் ஒத்திருக்கிறது. ஸ்ரீரங்கம், திருப்பதி முதலிய இடங்களிற்போன்று இங்கும் பலவகைப் பிரசாதங்கள் நைவேத்தியம் செய்து வழங்கப்படுகின்றன. அங்கே பூஜை செய்து வரும் ராவல் நாங்கள் தமிழ் நாட்டிலிருந்து வந்தவர்கள் என்பதை அறிந்து, எங்களை மிக்க அன்புடன் வரவேற்று உபசரித்தார்; பத்ரி நாராயணன் தரிசனம் அழகாய்க் கிடைக்க ஏற்பாடு செய்தார்; அப்பளம் முதலியன நைவேத்தியம் செய்து எங்களுக்கு அன்புடன் அனுப்பிக் கொடுத்தார். தமிழ் நாட்டிலிருந்து வந்த எங்களைக் காண அவருக்கு மிகவும் சந்தோஷமா யிருந்தது.

பத்ரிகாசிரமத்தில் பிரம்ம கபாலம் என்ற ஓர் இடமுண்டு. அங்கே பிதிரர்களுக்குப் பிண்டம் போட்டால், அதன் மூலம் அவர்கள் சாந்தி பெறுவதாகச் சொல்லப்படுகிறது. அங்கே போய் ஒருதரம் பிண்டம் போட்டு வந்தால் மறுபடியும் பிண்டம் போடவேண்டிய அவசியம் இல்லையென்றும் சொல்லுகிறார்கள்.

நான்கு தினங்கள் நாங்கள் பத்ரிநாத்தில் தங்கினோம். அங்கு எங்களுக்கு நல்ல இருக்கையும், உணவு வசதிகளும் கிடைத்தன. நண்பர்களும் அன்புடன் உபசரித்தார்கள். தரிசனமும் பரம ஆனந்தமாய்க் கிடைத்தது. எனவே, நாங்கள் அங்கே தங்கிய நான்கு தினங்களையும் மிக்க சந்தோஷமாகக் கழித்தோம். பத்ரியிலிருக்கும் விசேஷங்களையும், பத்ரிக்கு அருகிலிருக்கும் விசேஷங்களையும் பார்க்க விரும்பி, அவற்றைப்பற்றி விசாரித்தோம். பத்ரிக்கு வடக்கே சுமார் முப்பத்தைந்து மைலில் சதபந்த் என்ற ஓர் இடமிருக்கிறது. சதபந்த் என்றால் நல்ல வழியென்று பொருள். ஆதிசங்கரர் ஜோதிர் மடத்தை ஸ்தாபிதம் செய்த பிறகு, இவ்வுறைபனி மலைகளுக்குள் சென்று தேகத்தை உகுத்திச் சமாதி யடைந்து, சாயுச்சிய பதவி அடைந்தார் என்று சொல்லப்படுகிறது. அவர் இவ்வழிதான் சென்றாராம். எனவே, இது மிகப் புனிதமான இடம், பார்க்கத் தகுந்தது என்று பத்ரியிலிருந்தவர்கள் சொன்னார்கள்.

ஆனால், அங்கே செல்வது மிகக் கடினமும், ஆபத்துமானது என்றும் அவர்கள் உரைத்தார்கள். சரியான பாதைகள் இல்லை. அது சுமார் பதினேழு, பதினெட்டாயிரம் அடி உயரத்திலிருக்கிறது. அவ்விடத்திய குளிரைத் தாங்க முடியாது. குளிருக்கு ஒதுங்க வீடுகளும் அங்கில்லை. மனித வாசனையே அங்கு கிடையாது. பல மைல்கள் உறைபனி பாறை பாறையாக மாறிய குன்றுகளின் மேல்தான் நடக்க வேண்டும். உயிருக்குத் துணிந்தவர்கள்தான் அங்கே செல்ல வேண்டும் என்றெல்லாம் எங்களை எச்சரித்தார்கள். ஞான் மகராஜ் பலதடவைகள் கேதார்நாத் சென்றிருந்தபோதிலும், சதபந்த் போனதில்லை. அவருக்கும் எங்களுக்கும் அங்கே போகவேண்டுமென்ற விருப்பம் உண்டாயிற்று. எனவே, அங்கே புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தோம்.

௧௩. ஹிமாலயத்தின் உட்புறத்தில்

பத்ரிகாசிரமத்திற்கு வருஷந்தோறும் ஆயிரக்கணக்கான பேர் போய் வருகிறார்கள். ஆனால் அதற்கு மேல் பனி மலைகளுக்குள் போய் வந்தவர்கள் மிகச் சிலர். ஹிமாலயத்திலேயே பிறந்து வளர்ந்தவர்களுங்கூட அக் கொடுங் குளிருக்குள் போக அஞ்சுகின்றனர். காரணம்: அப் பனிப் பாறைகளுக்குள் யாதொன்றும் விளைவதில்லை. அங்கு வசிப்பவர் எவரும் இல்லை. அக்கடும் பனியில் மிருகங்களும் வசிப்பதில்லை. குளிர் தாங்க முடியாமல் போய்விட்டால் அங்கிருந்து தப்பி வர இயலாது. அல்லது அங்கிருக்கும்போது உறைபனி விழுந்து விட்டால் திரும்பி வரவும் முடியாது. உயிர் விடுவதைத் தவிரச் செய்யக் கூடியது வேறொன்றுமில்லை. ஆதலால்தான் நாங்கள் அப் பனி மலைக்குள் செல்லவேண்டு மென்று ஆலோசித்த போது, அங்கிருந்த நண்பர்கள் அங்கே போக வேண்டா மென்று பலவாறாகச் சொல்லத் தலைப்பட்டனர்.

பனி மலையின் முழு அனுபவத்தையும் நாங்கள் பெற விரும்பினோம். தென்னிந்தியாவிலிருக்கும் நமக்கு ஹிமாலயத்தின் அனுபவமும், உறைபனியின் அனுபவமும் அடிக்கடி கிடைக்கக் கூடியனவல்ல. எனவே இவ்வளவு தூரம் வந்தபிறகு இதையும் பார்க்காது திரும்புவது தவறெனத் தோன்றியது. தவிர, பல்லாயிரக் கணக்கான பேர்கள், பெண்களும், குழந்தைகளும், வயோதிகர்களும் வருஷந்தோறும் பத்ரி வரை சென்று வருகிறார்கள்! ஆதலால் அது பெரிதன்று. சதபந்துக்குப் போவதில் ஆபத்துக்களும், கஷ்டங்களும் இருக்கின்றனவென்று அவர்கள் எடுத்துரைத்ததே எங்களை அங்கே போய் வரும்படி

தூண்டிற்று. எனவே, அங்கே செல்லப் புறப்படுவ தெனத் தீர்மானம் செய்தோம்.

முதலில் சாமான்களை எடுத்துச் செல்ல ஆட்கள் தயார் செய்ய வேண்டி யிருந்தது. அல்மோராவிலிருந்து எங்களுடன் வந்த கூலியாட்கள் அங்கு வர அஞ்சி மறுத்தனர். பத்ரிக்கு வடக்கிலிருக்கும் மாணுக் கிராமத்து ஆட்களில், முன் சதபந்த் போயிருந்தவர்கள் சிலர் அகப்பட்டனர். அவர்களில் நால்வரை அழைத்துக் கொண்டோம். நாங்கள் போகவிருந்த பிரதேசத்தில் மனித வாசனையே இல்லையாதலால் கம்பளிகள், மண்ணெண்ணெய். ஸ்டவ் முதலியவற்றுடன், உணவுப் பொருட்களையும், இன்னும் உயிர் வாழ்வதற்கு அவசியமான உணவுகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். சதபந்த் போய்த் திரும்பச் சுமார் நான்கு தினங்களாகுமெனச் சொன்னார்கள். வழியில் எங்கும் யாதும் கிடைக்காதாகையால் ஐந்து ஆறு தினங்களுக்கு வேண்டிய அனைத்தையும் கையில் கொண்டு போக வேண்டி யிருந்தது. நாங்கள் அல்மோராவிலிருந்து கொண்டு போன கம்பளிகள் அக் குளிரைத் தாங்கா. எனவே, பத்ரி நண்பர்களிடமிருந்து துல்மா என்று சொல்லப்படும் கனமான கம்பளிகளையும் எடுத்துக்கொண்டோம். ஏற்பாடுகள் அனைத்தும் முடிந்த பிறகு "பத்ரி விசால்கி ஜே!" என்று ஜெயகோஷம் கிளப்பிப் புறப்பட்டோம்.

பத்ரிநாத் அலகநந்தாவின் மேல் கரையிலிருக்கிறது. பத்ரிநாத்திற்கு வடக்கே மேல் கரையிலே கொஞ்ச தூரத்திற்குக் காலடிப் பாதை செல்லுகிறது. சுமார் இரண்டு மைல் சென்றதும் ஒரு சிறு கோயில் தென்பட்டது. அதை மாதாஜி கோயில் என்று சொன்னார்கள். அது மிகச் சிறியது; தேவியினுடையது. அதுதான் இந்தியாவின் வடக்கே கடைசிக் கோயில். அதற்கு எதிரே அக்கரையில் மாணுக் கிராமம் தென்பட்டது. அதுதான் இந்தி

யாவின் வட எல்லையில் கடைசிக் கிராமம். இக்கிராமத்தில் இருப்பவர்கள் பத்ரிவாசிகளைப் போல் ஆறு மாதம் தான் இங்கு வசிப்பவர்கள். குளிர் காலம் பிறந்ததும் ஜோஷி மடத்திற்கருகில் சென்று விடுவார்கள்; வேனிற் காலம் வரும்போது மறுபடியும் திரும்பி விடுவார்கள். மாணக் கிராமத்தைத் தாண்டி மலையின்மேல் சென்றால், பாதை மாணக் கணவாய்க்குக் கொண்டு போய் விடுகிறது. மாணக் கணவாயின் மத்தியில் திபெத்தின் எல்லை யாரம்பிக்கிறது.

அன்று முழுதும் மலையின்மேல் தொத்தித் தொத்தி நடந்து சென்றோம். கொஞ்ச தூரம் சென்றதும் ஒற்றையடிப் பாதையும் நின்று விடுகிறது. சில இடங்களில் மலைச் சரிவுகள் இடிந்து விழுந்துகொண்டே யிருக்கின்றன. அப்படி இடிந்து வரும்போது பாரமான கற்களையும் உருட்டிக்கொண்டு வருவதுண்டு. அச் சமயத்தில்நாம் அங்கிருக்க நேர்ந்தால் நம் பாடு சிரமந்தான். இம்மாதிரி இடங்கள் பலவற்றைத் தாண்டிச் சென்றோம். சுமார் ஐந்து ஆறு மைல் நடந்திருப்போம்; காலையில் நாங்கள் புறப்படும்போது களங்கமற்றிருந்த வானம் கறுக்கத் தொடங்கிற்று. ஹிமாலயத்தின் சீதோஷ்ண ஸ்திதி மனிதன் வயது போல் நிமிஷத்துக்கு நிமிஷம் மாறும் இயல்பினது. இந்த நிமிஷம் வானம் பரிசுத்தமாயிருக்கும். அடுத்த சில நிமிஷங்களில் வானம் முற்றிலும் கறுத்து மழை பெய்யும். இன்னும் சில நிமிஷங்களில்பகலை இரவு போலாக்கி முற்றிலும் மூடியிருந்த மேகங்கள் ஆண்டவன் அருளைப் பெற்றோருடைய அஞ்ஞானம் ஒழிவதுபோல மறைந்து சூரியனுடைய பிரகாசத்திற்குஇடங்கொடுக்கும்.

நாங்கள் செல்லச் செல்ல மேகங்கள் அதிகமாயின. காற்றும் ஒருவாறு அடிக்கத் தொடங்கிற்று. நாங்கள் ஒவ்வொருவரும் பனியன், ஷர்ட், கம்பளி ஸ்வெட்டர், கம்பளி வெயிஸ்ட் கோட் முதலிய பல சட்டைகள் அணிந்

திருந்தபோதிலும் குளிர் உடம்மைத் துளைத்துக் கொண் டிருந்த மாதிரி யிருந்தது. அப்பொழுது நாங்கள் சமுத் திர மட்டத்திற்குமேல் சுமார் பதின்மூன்று, பதினுலாயிரம் அடி உயரத்திலிருப்போம். அங்கு மழை பெய்தால், நிச்சயமாய் உறைபனியும் பெய்தே தீரும். உறை பனி பெய்தால், அதன் மேல் நடந்து பல மைல்கள் கடப் பது அசாத்தியம். கடந்து செல்லாவிடில் பனியிலகப் பட்டு மடிய வேண்டியதுதான். மனதில் அச்சம் ஒரு புறம்; ஆண்டவன் மேல் உள்ள நம்பிக்கைதான் நமக் குள்ள பலம் என்ற நினைவு ஒருபுறம். இங்ஙனம் ஈசுவரனை நினைத்துத் தைரியம் செய்துகொண்டு முன் நோக்கி நடந் தோம். கொஞ்ச நேரத்தில் வானம் மறுபடியும் தெளிவுற் றது. மனதிற்குத் தைரியம் கொடுத்தது.

கிராமங்கள் அங்கு இல்லை, மனித சஞ்சாரம் இல்லை யென்று முன்னமேயே சொல்லியிருக்கிறேன் அல்லவா? ஆகையால் அங்கே சத்திரங்களோ வீடுகளோ கிடையா. சில இடங்களில் பாறைகள் சில சேர்ந்து குகைகள் உண் டாகி யிருக்கும். அக்குகைகளில்தான் தங்கவேண்டும். அப்படி ஒரு குகையை மாலை சுமார் 5-0 மணிக்குக் கண் டோம். அந்த இடத்திற்குப் பெயர் ‘லக்ஷ்மி வனம்’ என்று சொன்னார்கள். நகைச்சுவை நிறைந்த ஒருவர்தான் அதற்கு அப்பெயர் கொடுத்திருக்க வேண்டும். ஏனெனில், இங்கு எவ்விதமான லக்ஷ்மிகரமும் இல்லை, எந்தவிதமான வனமும் இல்லை! சுற்றிலும் மொட்டை மலைகளும் பாறை களும்தான் உண்டு. பக்கத்தில் பயங்கரமான ஓர் ஆறு பெரும் பனி மலைகளிலிருந்து உருகிவந்து இரைச்சலிட்டுக் கொண்டு ஓடுகிறது. உலர்ந்த சிறு செத்தைகளைத் தவிர மரங்கள் யாதும் அங்கே காணப்படவில்லை. இதற்குக் காரணம், வேனிற்காலத்தில் தோன்றும் செடிகள் குளிர் காலம் பிறந்ததும் குளிரின் கொடுமையால் மடியும். அங்கு மனிதன் வசிப்பதற்குரிய பொருள்கள் எதையும் காண

முடியாது. இத்தகைய இடத்திற்கு லக்ஷ்மி வனம் என்ற பெயர் கொடுத்தால் அது வேடிக்கை யன்றோ?

குகையைச் சுற்றிப் பார்த்தோம். அங்கு ஒரு வேட்டி, ஒரு ஜபமாலை, இன்னும் சில சிறு சாமான்கள் காணப்பட்டன. இவை எப்படி அங்கு வந்தனவென்று ஆலோசித்தோம். யாரோ ஒரு மனிதர் சரியான பாது காப்பில்லாமல் அங்கு வந்திருக்க வேண்டும்: குளிர் தாங்க முடியாமல், மடிந்திருக்கவேண்டும். இம்மாதிரித் திக்கின்றி இறப்பவர் பிரேதத்தை அப் பிரதேசத்தில் காண்பவர்கள், அதைத் தூக்கிக் கொண்டுபோய்க் கங்கையில் போட்டு விடுவார்கள். கங்கா தேவியும் திக்கற்ற அனைவருக்கும் இடம் கொடுக்கும் அன்னைபோல் அவர்கள் உடலிற்கு அடைக்கலம் கொடுத்தருளுவாள். இப்பொருள்களுக்குச் சொந்தமான மனிதரும் அவ்வழியே சென்றார்போலும். இமயத்தில் இன்னுமொரு விசேஷம். இம்மாதிரி விட்டுப் போன சாமான்களை எவரும் தொடுவதேயில்லை. அச் சாமான்கள் ஒருவரும் தொடாமல் வெகுகாலமிருந்து, குளிரும் வெயிலும் அடித்துக் கரைய வேண்டுமே யொழிய, மனிதர் எவரும் அதைத் தொடமாட்டார்கள்.

குகைக்குள் நுழைந்து பார்த்தோம். மிகத் தாழ்ந்த தாகத் தென்பட்டது. அதற்குள் ஒருவாறு நீட்டிப் படுக் கலாம். ஆனல் நிமிர்ந்து உட்கார முடியாது. எங்கள் சாமான்களை அங்கு இறக்கி வைத்தோம். கொண்டு போயிருந்த தின்பண்டங்கள் சிலவற்றை எடுத்து உண் டோம். இரவு வரக் குளிரும் அதிகமாயிற்று. எவ்வளவு கம்பளிகள் போர்த்திக் கொண்டாலும் அக் குளிரைத் தாங்கமுடியாது. எனவே, சுற்றிலு மிருந்த செத்தைகளைப் பொறுக்கிக்கொண்டு வந்து குகைக்கு மத்தியில் நெருப்பு உண்டாக்கி, சுற்றிலும் படுத்துக்கொண்டோம். இரவு ஆக ஆக, எங்கும் நிசப்தம் குடிகொண்டது. எங்களைத் தவிர மனிதர் யாரும் அங்கில்லை. சாதாரணமாக எங்கும்

காணப்படும் பறவைகளும் அங்கே காணப்படவில்லை. ஆற்றின் இரைச்சல் மாத்திரம் ஓங்காரத்வனிபோல் சதா ஒலித்துக் கொண்டிருந்தது. அந்த இரைச்சலுங்கூட இரவு ஆக ஆகக் குறைந்தது. அங்கு நிலவிய அந்த நிசப்தமானது இயற்கை தன் பயங்கரத்தில் தானே பயந்து வாளாவிருந்தது போலிருந்தது.

காலையில எழுந்து ஸ்டவ்வில் உணவு தயார் செய்து அருந்தினோம். கதிரவனும் எங்கள் க்ஷேமத்தை விசாரிக்க வருபவன்போல் தோன்றினான். சுமார் ஒன்பது மணிக்குச் சாமான்களைக் கட்டி எடுத்துக்கொண்டு புறப்பட்டோம். பல சிறு ஓடைகளைத் தாண்டிச் செல்லவேண்டியிருந்தது. அங்கு நாங்கள் பார்த்த காட்சிகள் எங்கள் மனதைக் கவர்ந்தன. இரவில் ஆற்றின் சப்தம் குறைந்ததன் காரணம் தெளிவாயிற்று. ஓடைகள் ஓட்டம் நின்று போய், கண்ணாடிப் பலகைகள் போன்று அப்படி அப்படியே அசைவற்றிருந்தன. குளிரின் மிகுதியால் உறைந்து தண்ணீர் ஓட்டம் அப்படியே நின்றிருந்தது; மறுபடியும் வெயில் பட்டபிறகுதான் மெள்ளக் கரைந்து ஓடத் தலைப்பட்டது. சில இடங்களில் நான்கு, ஐந்து அங்குல ஆழங்கூட உறைந்திருந்தது. கையில் வைத்திருந்த தடிகளால் அவற்றை அடித்தோம். கண்ணாடி உடைவதுபோலச் சுக்கல் சுக்கலாக அவை உடைந்தன. சில இடங்களில், அவற்றின்மேல் நாங்கள் நடந்தாலும் உடையாதபடி அவ்வளவு கெட்டியா யிருந்தன. தண்ணீர் அதிகமா யிருந்த இடங்களில் மேல்பாகம் மாத்திரம் உறைந்து அடியில் தண்ணீர் அப்படியே யிருந்தது.

இவற்றைக் கடந்து மேலே சென்றோம். மக்கள் சஞ்சாரம் அதிகமில்லாததால் வழியொன்றுமில்லை. மலைகளைக் கடந்தும், ஏறியும் சென்றோம். சென்று இடப் பக்கம் திரும்பியதும், நாங்கள் கண்ட காட்சி அற்புதமா யிருந்தது. மலைகள் 'ப' வைப்போல் வளைந்திருந்தன.

அவை முழுதும் தூய வெள்ளை உறை பனியால் மூடப்பட்டிருந்தன. சில இடங்களில் சுமார் ஐம்பது அறுபது அடி கூடப் பனிக்கட்டி நின்றுகொண்டிருந்தது. கண்கள் பூத்துப்போகுமென்ற வார்த்தைகளை முன் கேட்டிருக்கிறேன். அதன் பொருளை அன்றுதான் உணர்ந்தேன். மத்தியானம் ஆகவே, சூரியன் முழுப் பிரகாசத்துடன் விளங்கினன். சூரிய கிரணங்கள் அத்தூய்மையான வெண்மையான உறைபனி அடுக்குக்களின்மேல் விழவே, அவற்றின் வெண்மை பன்மடங்கு பிரகாசித்தது. அவ் வெண்மையைக் கண்களால் பார்க்க இயலவில்லை. கொஞ்ச நேரம் பார்த்துக்கொண்டிருந்தால் கண்கள் உண்மையாகவே, பூத்துப் போகிறது. வெறும் கண்களால் அக்காட்சியை அதிக நேரம் பார்ப்பது நல்லதன்று. எங்கே பார்த்தாலும் ஒரே உறைபனி மயம். செடியில்லை, கொடியில்லை, மரமில்லை, நிழலில்லை ; சர்வமும் பனி மூடி வெண்மை மயமாயிருந்தது.

இக் காட்சியைப் பார்த்துக்கொண்டே தொடர்ந்து சென்றோம். மத்தியானம் சுமார் மூன்று மணிக்கு ஒரு குகையைக் கண்டுபிடித்து, அங்கே சாமான்களை வைத்து உட்கார்ந்தோம். அந்த இடத்திற்குப் பெயர் சக்ர தீர்த்தமாம். ஆனல் அங்கே சக்கரமும் இல்லை, தீர்த்தமும் இல்லை. பக்கத்தில் எங்கும் தண்ணீரே கிடைக்கவில்லை. 'சுற்றிலும் தண்ணீர், ஆனல் குடிக்க ஒரு சொட்டுக்கூட இல்லை' என்ற ஆங்கிலக் கவி யொன்றுண்டு, அதுபோல் எங்கும் உறைபனி மயமாயிருந்தது. ஆனல் எங்களுக்கு உபயோகத்திற்குத் தண்ணீர் அகப்படவில்லை. சுமார் அரை மைலுக்கப்பால் ஓர் இடத்தில் மலையின் மேலிருக்கும் பனி உருகித் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. அதுவும் மாலையில் கட்டியாகிவிட்டது. எங்களுடன் வந்த கூலியாட்கள் அதை உடைத்துக் கற்கள் மாதிரி வாளியில் வாரிக்கொண்டு வந்தார்கள். அதை நெருப்பில் வைத்து

உருக்கித் தண்ணீர் செய்யவேண்டி யிருந்தது. லக்ஷிமி வனத்திலிருந்த குகையில் நிமிர்ந்து படுக்க முடியாது. நீட்டிப்படுக்கலாம், ஆனால், சக்ர தீர்த்தத் குகையில் நிமிந்து உட்காரலாம். நீட்டிப் படுக்கமுடியும். முந்திய இரவு மாதிரி அன்றிரவும் நெருப்புப் போட்டுவிட்டுப் படுத்துக்கொண்டோம்.

லக்ஷ்மி வானத்திற்கருகில் அலகநந்தா ஓலமிட்டு ஓடிக் கொண்டிருக்கிறது. மற்றெல்லாச் சப்தங்களும் அடங்கிய பிறகும் ஆற்றின் சப்தம் மாத்திரம் சதா ஒலித்துக்கொண் டிருக்கும். சக்ர தீர்த்தத்திற்கருகில் நதிகள், ஓடைகள் ஒன்றுமில்லை. மிருகங்களும், பட்சிகளுங்கூட அங்கு வரு வதற்கஞ்சி வராமலொழிந்தன போல் தோன்றிற்று. சந்தியாகாலம் வந்தது. மாலைக் கிரணங்களில் உறைபனித் தொடர்கள் தம் வெண்மை மாறிப் பொன் மயமாய்க் காட்சி கொடுத்தன. அக்காட்சி வெகு அழகாக இருந்தது. அக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருக்க இருக்க, கதிர வனும் எங்களைத் தனியே விட்டகல விரும்புபவன்போல் மலைச் சிகரங்களுக்குப்பின் மறைந்தான். இரவு வர வர ஓர் அமானுஷ்யமான நிசப்தம் பிறந்தது. எங்கும் நள் ளிருள். எங்கும் நிசப்தம். இந்த நிசப்தத்தில் நம்மனதும் ஒருவாறு அடங்குகிறது. நம்மனது சாதாரணமாகச் சதா அலை அடித்துக்கொண் டிருக்கும் கடல்போன்று பல எண் ணங்களைக் கொண்டு கொந்தளித்துக் கொண்டிருக்கிற தன்றோ? இப்பொழுது கொந்தளிக்கும் கடலின் ஆழத்தில் அது சென்றது போலிருந்தது. கடலின் ஆழத்தில் அலை யேது? நுரையேது? அங்கு நீர் சலனமற்று அமைதியாக விருக்கும். அதுபோல் இந்த நிசப்தத்தில் நம் ஆசைகளும் எண்ணங்களும் ஒருவாறு அடங்கி, நம்மனதின் ஆழத் திற்குச் செல்லுகிறோம். அந்த ஆழத்தில் ஓர் அசாதாரண மான, அற்புதமான சமாதானத்தையும் இன்பத்தையும் அனுபவிக்கிறோம்.

கரு. சதபந்த்

தென்னிந்தியாவி லிருக்கும் நமக்குக் குளிரின் கொடு மையே தெரியாது. ஏனெனில், கடுமையான குளிரை நாம் என்றும் அனுபவித் தறியோம். அதிகக்குளிரின் அறி குறி உறைபனி. அதை எக்காலத்திலும் தென்னுட்டில் காண முடியாது. ஆதலால், உறைபனி சதா மூடியிருக்கும் அந்தப் பிரதேசங்களில் செல்லும்போது உண்டாகும் அனு பவங்களை நாம் தென்னுட்டில் என்றும் அனுபவிக்க முடி யாது. குளிர்மிகுமாயின், மனிதனின் அவயவங்கள் அவன் வயப்பட்டு நில்லா. அது முதலில் கால் கை விரல்களின் நுனியில் ஆரம்பித்து, கொஞ்ச நேரத்தில் முழுச்சரீரத்தை யும் மேற்கொள்ளும். முதலில் தூக்கம் வருவதுபோல் தோன்றும். உடனே உஷ்ணப்படுத்திக் கொள்ளுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தால் சரி; இல்லாவிடில் அவ் வுறக்கம் உயிர் நீக்கத்திற்கு உடந்தையாக முடியும். உறை பனியில் உயிர் நீத்தல் மற்றெல்லாவித மரணங்களிலும் சாந்தமானதென்றும், சிரமமற்றதென்றும் சொல்லப்படு கிறது. சாதாரணமாக உயிர் நீங்குவதிலுள்ள கோர அனு பவங்கள் இதில் இல்லையாம். ஆரம்பித்த உறக்கம் அப் படியே பேருறக்கமாக முடிந்துவிடுகிறது; அவ்வளவு தான். பலர் இவ்விதச் சாவு வேண்டுமென்றே, ஹிமாலயத் திற்கு யாத்திரை செய்கிருர்கள் என்றும் கூறுவார்கள்.

நாங்கள் காலையில் எழுந்ததும் வெந்நீர் வைத்துக் கை கால் கழுவி, சிற்றுண்டி அருந்திப் புறப்பட்டோம். சுமார் எட்டு மணியிருக்கும். அங்கிருந்து ஒரு பெரிய மலை ஏற வேண்டியிருந்தது. அதற்குமேல், பனிக்கட்டி மூடிய மலை களின்மேல், சுமார் இரண்டு மைல் நடந்து சென்று சதபந்த் போய்ச்சேரவேண்டும். நானும் ருத்ரானந்த

சுவாமியும் முன்னுல் புறப்பட்டோம். ஞான் மகராஜும் கூலியாட்களும் சாமான்களைத் தயார் செய்து புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். குளிரிலிருந்து காப்பாற்றிக்கொள்ள மூன்று கம்பளிச் சொக்காய் அணிந்திருந்தேன். காலில் நூல் மேஜோடு போட்டு, அதற்குமேல் கம்பளி மேஜோடும் பூட்சும், கைகளின் பாதுகாப்புக்காகக் கம்பளிக் கைவிரல் உறையும் அணிந்திருந்தேன்.

சூரியன் இன்னும் மலைக்குமேல் வராததால், நல்ல வெளிச்சமிருந்த போதிலும் நிழலாக விருந்தது. இவ்வளவு சட்டைகள் அணிந்திருக்கும்போது, 'காலைக் குளிர்தானே, இது என்ன செய்யும்?' என்று நினைத்து நடக்க ஆரம்பித்தோம். சுமார் இரண்டு பர்லாங்கு தான் நடந்திருப்போம். கால் விரல்களிலும், கை விரல்களிலும் குரு குரு வென்று விருவிருப்புத் தட்டிய மாதிரி ஓர் உணர்ச்சி உண்டாயிற்று. நடந்தால் உஷ்ணம் உண்டாகக்கூடு மென்று தொடர்ந்து நடந்தோம். இன்னும் ஒரு பர்லாங்கு நடந்திருப்போம். கைகளிலும் கால்களிலும் விரல் நுனி களில் ஒரு மாதிரி வலி ஏற்பட்டது. அவை மரத்துப்போய் விட்டன போலிருந்தன. கையில் பிரம்பைப் பிடிப்பதும் கஷ்டமாயிருந்தது. நடக்கச் சிரமம் ஏற்பட்டது. கால்கள் பின்னிக்கொள்ள ஆரம்பித்தன. ஒன்றிரண்டு நிமிஷங் களில் வலி அதிகமாயிற்று. கைகால்கள் சுவாதீனமற்றுப் போகிற மாதிரி தென்பட்டன. வலியுடன் சேர்ந்து குரு குரு வென்ற உணர்ச்சி! அழுவதா சிரிப்பதா வென்கிற சந்தேகம்! சிறிது நேரத்தில் என்னையும் அறியாது கண் ணீர் வரத் தலைப்பட்டது. இனிமேல் நடக்க இயலா தென்று அவ்விடத்திலேயே உட்கார்ந்து விட்டேன்.

என்னுடன் வந்த சுவாமி ருத்ரானந்தர் இதைப் பார்த்து மனம் கலங்கி, பின்னுல் வரும் சுவாமியையும், கூலியாட்களையும் கை தட்டியும் உரக்கக் கூவியும் அழைத் தார். அவர்களும் ஓடோடியும் வந்தார்கள். ஞான் மக

ராஜ் என்னைப் பார்த்ததும் விஷயத்தைத் தெரிந்துகொண்டார். அவர் முகத்தில் ஒரு க்ஷண நேரம் கவலைக்குறி தென்பட்டது. அவ்வளவுதான். அங்கிருந்த சருகுகளைச் சேர்த்தார்! கூலியின் முதுகிலிருந்த கூடையை இறக்கி மண் எண்ணெய் எடுத்து ஊற்றி நெருப்புப் பற்றவைத்தார். பின் அவரும் மற்றவர்களும் நான் காலில் அணிந்திருந்த பூட்சுகளையும் மேஜோடுகளையும், கையிலிருந்த கைச்சட்டைகளையும் கழற்றிக் கைகளையும் கால்களையும் நெருப்பில் காட்டினார்கள். எண்ணெயை எடுத்துக் கை கால்களில் தடவித் தேய்த்தார்கள். சுமார் அரைமணி நேரம் இப்படித் தேய்த்திருப்பார்கள். கொஞ்ச நேரத்தில் கை கால் விரல்களை மடக்க முடிந்தது, சூரியனும் மேல் வரத் தலைப்பட்டான். வெயில் உடம்பில் படவும் சந்தோஷமாயிருந்தது. கண்களில் நீர் வடிவது போய்ப் புன்சிரிப்பு உண்டாயிற்று. கூட வந்தவர்களும் பெரும் சுமை நீங்கினவர்கள்போல் தோன்றினார்கள்; இத்தகைய நிலையில் கொஞ்சநேரம் உதவியின்றி யிருந்தால், விபரீதமாக முடியக்கூடுமென்று சொன்னார்கள். குளிரின் தன்மையை உணர்த்தவே ஆண்டவன் அந்த அநுபவத்தைக் கொடுத்தான் போலும்.

சதபந்த் இன்னும் சுமார் இரண்டரை அல்லது மூன்று மைலிருக்கும். 'சதபந்த்' என்றால் நல்லவழி என்பது பொருள். ஆதி சங்கரர் இவ்வழியே சென்று தேகத்தியாகம் செய்ததாகக் கருதப்படுவதால் அதற்கு அப்பெயர் வந்தது போலும்! சதபந்திலிருந்து சுவர்க்காரோஹணம் மூன்று மைல். அங்கு சென்று அங்கிருந்துதான் யுதிஷ்டிரர் முதலியோர் சுவர்க்கத்திற்குச் சென்றதாகக் கருதப்படுகிறது கேதார்நாத்திற்கும், பத்ரிகாசிரமத்திற்கும் ரஸ்தாமூலம் சுமார் நூற்று மூன்று மைல் தூரம். ஆனால் நேராகப் பட்சி பறக்கிறமாதிரி பார்த்தால், சுமார் இருபது மைலுக்குள்ளாகத்தான் இருக்கும். கடக்கமுடியாத உறைபனி மூடிய

சிகரங்கள் குறுக்கேயிருக்கின்றமையால் ரஸ்தா சுற்றிக் கொண்டு வரவேண்டியிருக்கிறது. சதபந்தும், சுவர்க்கா ரோஹணமும் ஏகதேசம் கேதார்நாத் சிகரத்திற்குப் பின் னுலிருக்கின்றனவெனச் சொல்லலாம். பாண்டவர்கள் கேதார்நாத் வழியாகச் சென்று கேதார்நாத் சிகரத்தைத் தாண்டி சுவர்க்காரோஹணம் சென்றதாகச் சொல்லு கிறார்கள். சதபந்த் சுமார் பதினேழு அல்லது பதினெட்டு ஆயிரம் அடி உயரம் இருக்கும்.

குளிரின் இக்கொடிய அனுபவத்திற்குப் பிறகு மீண் டும் புறப்பட்டு முன் செல்வதா, அல்லது திரும்புவதா வென்று யோசித்தோம். வெயில் உடம்பில் படப்படத் தைரியமும் அதிகரித்தது. இவ்வளவு தூரம் வந்தபிறகு பாக்கியையும் முடிக்காமல் திரும்புவது நல்லதன்று என்று தோன்றிற்று. ஆனால் ஆபத்தும், கடினமானதுமான பிர யாணம் இனிமேல்தான் என்று சொன்னார்கள். முற்றி லும் முடிக்காமல் பாதி வழியே திரும்பினால் மற்றவர்கள் கேவலமாக நினைப்பார்களே என்ற எண்ணம் ஒருபுறமும், என்ன நேர்ந்தாலும் கோரிவந்த காரியத்தை முடித்தே தீரவேண்டுமென்ற நினைவு மற்றொரு புறமும் மனதில் தோன்றிப் போராடின. ஆண்டவனருளால் யாவும் இனிது முடியுமென்ற நம்பிக்கையுடன், போய்ப் பார்த்தே திரும்புவதென முடிவு செய்தோம்.

சூரியன் உச்சிக்கு வரவரக் குளிரின் கொடுமை குறைந்தது. அங்கிருந்து ஏறவேண்டிய ஏற்றம் செங்குத் தாக இருந்தது. திணறிக்கொண்டு அதன்மேல் ஏறினோம். அதன் உச்சியில் ஒரே மலைப்பரப்பு. மலையுச்சிகளில் உறை பனி அடுக்காக வெண்மையுடன் பிரகாசித்துக் கொண் டிருந்தது. நாங்கள் அந்த அழகை அனுபவித்துக்கொண் டிருக்கும்போது, திடீரென்று வான இடிபோன்ற பெருஞ் சப்தம் ஒன்று கேட்டது. சமீபத்தில் எங்கேயாவது இடி விழுந்திருக்க வேண்டுமென்று நினைத்து அண்ணாந்து பார்த்

தோம். ஆகாயம் மேகமின்றி வெட்ட வெளியா யிருந்தது. சுற்றிப் பார்த்ததும் உண்மை புலனாயிற்று, மலைகளின் உச்சியில் படிந்து கிடக்கும் உறைபனி தன் பாரத்தைத் தானே தாங்க மாட்டாமல் நழுவி விழுந்ததன் சப்தம் அது. விழுந்த இடத்தில் உறைபனித் தூள்கள் சுண்ணும்புப்புகை மாதிரி வெண்மையாய்ப் படர்ந்திருந்தன. சுமார் இருபது வண்டிப் பாரம் உறைபனி விழுந்திருக்கும். அது சமயம் அப்பக்கத்தில் யாராவது போய்க் கொண்டிருந்தால் அவர்கள் அப்படியே மூடப்பட்டிருப்பார்கள். ஹிமாலயத்தின் உட்புறத்தில் யாத்திரை செல்லுபவர்கள் இப்படி உறைபனியால் சில சமயங்களில் மூடப்படுவதும் உண்டு.

மலையுச்சியிலிருந்து சுமார் இரண்டு மைல் நடக்க வேண்டும். அங்குப் பாதைகள் ஒன்றும் கிடையா. அதற்குக் காரணம், அப்பிரதேசம் முழுவதும் உறைபனிப் பாறைகளால் மூடப்பட்டிருப்பதே. அவற்றின் மேல்தான் நடந்து செல்ல வேண்டும். பார்வைக்குச் சாதாரணத் தரை மாதிரி தோன்றும். ஆனால் கொஞ்சம் சறுக்கினாலும் மேலிருக்கும் மண் விலகி உறைபனிப் பாறைகள் இருக்கின்றமை தென்படும். சில இடங்களில் இப் பாறைகளின் ஒருபக்கத்துப் பார்வை நீலங் கலந்த கண்ணாடி மாதிரி அழகாகத் தென்படும். சில இடங்களில் இப்பாறைகளின் அடிப்பாகம் உருகித் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கும். அடியில் உருகிக் கொண்டே யிருப்பதால் மேற்பரப்புக்கும் மலைப்பரப்புக்கு மிடையே இடைவெளி ஏற்படுகின்றது. அப்பொழுது மேற்பரப்பின் பாரம் தாங்காமல் திடீரென்று இப்பாறைகள் இடிந்து காலிப்பாகத்தை நிரப்பும். அது சமயம் யாராவது அவ்விடத்திலிருந்தால் அவர்கள் இவ்வெடிப்புக்களால் விழுங்கப்படுவார்கள். அவர்களைத் தோண்டி மேலே எடுக்க முடியாது, உறைபனியின் ஸ்பரிசத்தால் சில விநாடிகளில் பிரக்ஞை இழந்து விடுவார்கள். இப்பிரதேசங்களில் செல்லும் யாத்திரிகர்களுக்கு நேரக்கூடிய

ஆபத்துக்களில் இதுவும் ஒன்று. வருஷந்தோறும் ஒருவர் இருவர் இப்படி விழுங்கப் படுகிறார்களாம்!

எங்களுடன் வந்த கூலியாட்களில் ஒருவன்தான் எங்களுக்கு வழிகாட்டி. அவன் ஒரு தடியால் குத்திக் குத்திப் பார்த்துச் சுற்றிச் சுற்றி அழைத்துச் செல்ல, நாங்கள் அவனைப் பின் தொடர்ந்து சென்றோம். அந்த உறைபனி மலைப் பரப்பில் ஏறியும் இறங்கியும் சுமார் ஒன்றரை மைல் சென்றிருப்போம். கடைசியில் ஓர் அழகான தடாகம் தென்பட்டது. அத்தடாகத்தின் நான்கு பக்கங்களிலும் உயர்ந்த மலைகள். மூன்று பக்கங்களில் தூய வெண்பனி அடுக்கடுக்காக மலையுச்சியில் நிறைந்திருந்தது. மற்றொரு பக்கம் அவ்வளவு உயரமில்லை. அதன் உச்சியில் சில குகைகள் தென்பட்டன. மலைச் சரிவுகளிலிருந்து உறைபனி உருகி வந்த நீர் தான் தடாகத்திற்கு வருவாய். தண்ணீர் பச்சை நிறமாய் மரகதம் போலிருந்தது; பாசி முதலிய அசுத்தங்கள் இல்லாமல் வெகு அழகாகத் தென்பட்டது. அதுதான் சதபந்த் என்று சொன்னார்கள்.

தடாகத்தினருகே சென்றோம். வழியில் மனிதனின் மண்டையோடு ஒன்று கிடந்தது. மனித சஞ்சாரமில்லாத அவ்விடத்தில் அது எப்படி வந்ததென்று விசாரித்தோம். சென்ற வருஷம் ஒரு சாது அங்கிருக்கும் குகைகள் ஒன்றில் வசிக்கப் பிரயத்தனம் செய்தாராம்; குளிர் தாங்கமுடியாமல் மடிந்தாராம். அவருடைய மண்டையோடு அது, என்று சொன்னார்கள். அதைக் கேட்க எங்கள் உடல் சிலிர்த்தது.

இவ்வருடம் மற்றொரு சாது வந்து அங்கு வசித்துக் கொண்டிருக்கிறார் என்று சொன்னார்கள். அவரைப் பார்க்க வேண்டுமென்ற அவா எங்கள் மனதிற் பிறந்தது. அவர் எப்படி யிருப்பார்? அவர் வயதென்ன? குளிரைத் தாங்க என்ன உபாயம் செய்கிறார்? இவ்வுறைபனி மூடிய மலையுச்சியில் அவருக்கென்ன உணவு கிடைக்கிறது?

எனப் பலவாருன எண்ணங்கள் எங்கள் மனதில் உண்டா யின. ஒரு பாறையின் மேல் உட்கார்ந்து கொஞ்ச நேரம் ஆண்டவனை நினைத்துத் தியானம் செய்தோம்; பிறகு பஜனை செய்தோம். நாங்கள் எடுத்துச் சென்ற சாமான் களைக் கொண்டு மண்ணெண்ணெய் அடுப்பில் சில பதார்த் தங்கள் செய்து அருந்திஞேம். சூரியன் அஸ்தமனமாகு முன் சக்ர தீர்த்தம் திரும்ப வேண்டும். எனவே, விரை வில் காரியங்களை முடித்துக் கொண்டு அந்த அபூர்வ சாது வைப் பார்க்கப் புறப்பட்டோம். அங்கு நாங்கள் கண்ட தும் கேட்டதும் எங்கள் மனதைக் கவர்ந்தன.

கரு. சதபந்த் சாது

அந்த சாது இருந்த குகைக்குச் செல்லும் வழி செங் குத்தாக இருந்தது. கைகளையும் உபயோகப் படுத்தித் தான் ஏறவேண்டியிருந்தது. கொஞ்ச தூரம் சென்றதும் குகை தென்பட்டது. அதில் ஆள் குனிந்து போகிற மாதிரி ஒரு துவாரம் தோன்றிற்று. நாங்கள் வந்த சப்தம் கேட்டு, வயோதிக சாது ஒருவர் அதிலிருந்து வெளியே வந்தார். சுமார் ஐந்தே முக்காலடி உயரமிருப்பார்; கம்பீரமான தோற்றம். ஒரு முரட்டுக் கம்பளியைச் சட்டையாகச் செய்து அணிந்திருந்தார். இடுப்பில் ஒரு துண்டு. கண்ணில் ஒரு கண்ணுக்குக் கண்ணடி. மற்றொன்றில் வெறும் துவா ரம் மட்டும். நெற்றியில் திருநீறு திகழ்ந்தது. எங்களைப் பார்த்ததும் ஆனந்தமாகப் புன்னகை செய்து, இரண்டு கைகளையும் தூக்கி 'ஆனந்த ஹோ!' (ஆனந்தம் உண்டா கட்டும்) என்று சொன்னர். அவரைப் பார்க்கவும், கேட்க வும் எங்கள் மனதில் சந்தோஷமும் சமாதானமும் உண் டாயின.

உடனே இன்னுமோர் எண்ணமும் எங்கள் மனதில் தோன்றிற்று: உறைபனிக் கட்டிகள் சதா மூடிக்கொண் டிருக்கும் இவ்விடத்திலே அவர் எப்படி இந்த ஒரு கம்ப ளிச் சட்டையும், இடுப்பில் ஒரு சிறு துண்டையும் மாத்திரம் அணிந்து உயிர் வாழ்கிறுர்? மனித சஞ்சார மில்லாத அம் மலைப்பரப்பில் அவருக்கு என்ன உணவு கிடைக்கும் என்ற எண்ணமும் எங்கள் மனதில் எழுந்தது. எங்களுடன் வந்த ஞான் மகாராஜ் அரைச் சராய் அணிந்து அதற்குமேல் வேட்டி கட்டி யிருந்தார். அந்த வேட்டியை யும், தான் அணிந்திருந்த கம்பளி ஸ்வெட்டரையும் கழற்றி மிகுந்த வணக்கத்துடன் பணிந்து, அவற்றை ஏற்றருள

வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அந்த சாது அதைப் பார்த்ததும் வருந்தியவர்போல், 'வேண்டாம் நாராயணு, வேண்டாம் நாராயணு!' என்று அவற்றை வாங்கிக்கொள்ள மறுத்தார். அவசியம் ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று இவர் மீண்டும் கெஞ்சவே, அவர் அவற்றை வாங்கி, அடுத்தபடி நிற்கும் எங்களுடன் வந்த மற்றெருவர் தோளின்மேல் அப்படியே வீசினர். அவர் இங்ஙனம் செய்தது, 'கடவுளேயே நம்பியிருக்கும் என்னே நீங்கள் ஏன் கெடுக்கப் பார்க்கிறீர்கள்?' என்று சொன்ன மாதிரி யிருந்தது.

குகைக்கு முன்னிருந்த சிறிய இடத்தில் அப்பெரியார் உட்கார்ந்தார். நாங்களும் அவர் அருகில் அமர்ந்து அவர் பாதங்களேத் தொட்டு நமஸ்கரித்தோம். அவர் ஒரு தண்டி சாது; நெருப்பைத் தொடுவதில்லே யென்று விரத மெடுத்துக் கொண்டிருப்பவர். அதாவது, நெருப்பால் சமைக்கப்படும் எந்தப் பொருளேயும் உட்கொள்ளுவதில்லே. கோதுமை மாவைச் சிலர் கொண்டுவந்து கொடுப்பார்கள். அதைத் தண்ணீரில் கலந்து அப்படியே குடித்து விடுவது. அவ்வளவுதான். அவ்வுறைபனி மத்தியில், சமுத்திர மட்டத்திற்குச் சுமார் பதினெட்டாயிரம் அடி உயரத்தில், நெருப்பின்றியும், நெருப்பால் சமைத்த உணவை அருந்தாமலும் எப்படித்தான் வசிக்கமுடியும் என்பது எங்களுக்கு வியப்பா யிருந்தது.

ஞான் மகராஜ் எங்களே ஹிந்தியில் அறிமுகம் செய்து வைத்தார். இவர்கள் இந்தியாவின் தென்கோடியிலிருந்து வந்தவர்கள் என்று சொன்னர். உடனே அப்பெரியார்,

'மூகம் கரோதி வாசாலம்
பங்கும் லங்கயதே கிரிம்
யத்கிருபா தமஹம் வந்தே
பரமானந்த மாதவம்'

(எவனுடைய கிருபையால் ஊமை பேச முடியுமோ, முடவன் மலையேற முடியுமோ அந்தப் பரமானந்த மாதவனை நான் வணங்குகிறேன்) என்று சொல்லி, 'அவனருளால் அன்றோ, தேசத்தின் தென்கோடியி லிருப்பவர்கள் ஹிமாலய உச்சிக்கு வந்திருக்கிறார்கள்! அவன் அருள் இருப்பின் எதுதான் செய்ய முடியாது!' என்று பதில் அளித்தார்.

இப் பதில் எங்கள் மனதில் பளிச்சென்று ஒரு வெளிச்சத்தை யுண்டாக்கியது போலிருந்தது. அவருடைய வாழ்க்கையின் இரகசியத்தைத் தெரிவிப்பது போலுமிருந்தது. அக் குளிரில், உறைபனியின் மத்தியில், நெருப்பின் உதவியின்றி எப்படி உயிர் வாழ்கிறார்; நெருப்பில் சமைக்காமல் கோதுமை மாவை மாத்திரம் சாப்பிட்டு எப்படிப் பிழைத்திருக்கிறார்; மனித சஞ்சாரமில்லாத அக் காட்டில் அவருக்கு எப்படி உணவு கிடைக்கிறது என்பனபோல எங்கள் மனதிலெழுந்த பல கேள்விகளுக்கு அவர் கூறிய இச் சுலோகம் பதிலளித்தது. ஆண்டவன் கருணையையே நம்பி யிருப்பவர்களை அவன் காப்பாற்றுகிறான். அவனருளால் எது செய்வதும் எளிதாகிறது.

சுமார் முக்கால் மணி நேரம் அவருடன் இருந்திருப்போம். அவர் அருகிலிருந்து அவர் கூறிய இன்மொழிகளைப் பருகிக் கொண்டிருந்தோம். எங்கள் மனதிலும் ஒருவிதமான சாந்தி நிலவி யிருந்தது. அவருடன் இருக்க ஆனந்தமா யிருந்தது. அங்கிருந்து வரப் பிரியமே யில்லை. எனினும், இருட்டுவதற்கு முன் சக்ர தீர்த்தக் குகைக்குப் போய்ச் சேரவேண்டுமென்ற எண்ணம் எங்களைப் புறப்படச் செய்தது. எனவே, அவரை வணங்கி, அவர் ஆசி பெற்றுப் புறப்பட்டோம்.

அவர் கம்பீரமான தோற்றமும், 'ஆனந்தஹோ!' என்று இரண்டு கைகளையும் உயரத் தூக்கி ஆனந்தமாக அவர் ஆசி கூறிய அழகும், அவர் சொன்ன வார்த்தைகளும், ஒரு கண்ணிலணிந்த கண்ணாடியும், கிழிந்த கம்ப

ளிச் சொக்காய் அணிந்திருந்த கோலமும் எங்கள் மன தைக் கவர்ந்தன. குளிர்காலத்தில் உறைபனி, பதினைந்து இருபது அடிவரையிற் கூட அங்குப் பெய்து அனைத்தையும் மூடி விடுவதுண்டு. அக்காலத்திலும் அவர் அங்கு வசிக் கத் தீர்மானம் செய்திருப்பது கேட்டு, எங்கள் மனதில் பயமும் கவலையும் உண்டாயின. இவருக்குமுன் சிலர் இங் ஙனம் இருக்க முயன்று மடிந்திருக்கின்றனர். சென்ற வருஷந்தான் வங்காள சாதுக்கள் மூவர் ஆறு மாதங் களுக்கு வேண்டிய விறகு, மண்ணெண்ணெய், உணவுப் பொருள்கள், கம்பளிகள் முதலியனவும், ஒரு பெரிய கூடா ரமும் எடுத்துச் சென்று அங்கிருக்க முயன்றார்களாம். பனிக்காலம் ஆரம்பித்த சில நாட்களில் உறைபனி பெய்ய ஆரம்பித்தது. பத்துப் பன்னிரண்டு அடி பெய்யவும் கூடா ரம் மூடப்பட்டு விட்டது. அங்கிருந்து மலை உச்சிகளிலிருக் கும் குகைகளுக்கு ஓடினார்கள். அக்குகைகளும் உறைபனி யால் மூடப்படவே, அவர்கள் அங்கேயே இறந்து பட் டார்கள். அடுத்த வேனிற்காலத்தில் அவர்கள் உடம்பு களும், அவர்கள் கொண்டுபோன சாமான்களும் அப் படியே இருந்தனவாம். இச் செய்தி எங்கள் மனதிலிருந்த பயத்தையும் கவலையையும் அதிகரிக்கச் செய்தது. ஆனால், அவர் எங்களுக்குச் சொன்ன வார்த்தைகளும் எங்கள் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தன. ஆண்டவன் அருளிருப்பின் அசாத்தியம் ஒன்றுமில்லை யன்றோ?

நாங்கள் அவரைப் பார்த்து இப்பொழுது சுமார் மூன்று வருஷங்களாகி விட்டன. கடும்பனிக் காலங்கள் இரண்டு வந்து போய்விட்டன. அடுத்தும் ஒன்று வரப் போகின்றது. தென்னாடு திரும்பிய பிறகும் அவர் எண் ணம் எங்களுக்கு அடிக்கடி வருவதுண்டு. அவர் கதி என்னவாயிற்று? இன்னும் பிழைத்திருக்கிறாரா? அல்லது, குளிரின் கொடுமையால் மாண்டாரா? என்ற கேள்விகள் பல தடவைகளில் எங்கள் மனதில் எழுகின்றன. நான்

மகராஜ் அவர்களிடமிருந்து கொஞ்ச காலத்திற்குமுன் ஒரு கடிதம் வந்திருந்தது. அவர் கொஞ்சகாலத்திற்கு முன் மறுபடியும் பத்ரி சென்றிருந்தார். அது சமயம் அந்தச் சாதுவைப்பற்றி அவர் விசாரித்தாராம். 'அவர் இன்னும் உயிருடன்தா னிருக்கிறுர், அதே இடத்தில் தவம் செய்து வருகிறுர்' என்று அதில் தெரிவித்திருந்தார். ஆம்; ஆண்டவன் அருளிருப்பின் அசாத்தியம் எது?

கசு. யாத்திரை முடிவு

அன்றிரவை மறுபடியும் சக்ரதீர்த்தக் குகையிலே கழித்தோம். முந்திய இரவு போல் நெருப்புப் போட்டு உடம்பைக் காய்ச்சிக் கொண்டு படுத்துறங்கினேம். அடுத்த நாள்காலை எழுந்து உணவருந்திப் புறப்பட்டோம். அளகநந்தா மாணக் கிராமத்தருகில் மேற்கே திரும்பு கிறது. நாங்கள் வந்தபோது அதன் தென்கரையிலேயே வந்தோம்; போகும்போது வடகரையில் சென்ருேம். வழி யில் அழகாபுரி என்ற ஓர் இடம் இருக்கிறது. அங்கு எந்த விதமான அழகுமில்லை, யாதொரு 'புரி'யுமில்லை! ஹாஸ்ய ரசம் ததும்பும் ஒருவரே இவ்வழி முழுதும் பெயர்கள் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. அழகாபுரி என்பது ஒரு மொட்டைமலை! எந்தவிதமான செடி கொடி மரங்களும் அதில் கிடையா. உறைபனி அடுக்காக மூடியிருக்கும் பாறைகள்! இவற்றிற்கு அழகாபுரி என்று பெயர் கொடுத் தால் அது வேடிக்கையன்ருே? உறைபனி உருகி ஓடை ஓடையாக வந்து கொண்டிருக்கிறது. தூரத்திலிருந்து பார்ப்பதற்கு அவ்வோடைகள் மிகச் சிறியனவாகத் தென் பட்டன. ஆனல், அருகில் வரவே அவற்றின் அளவும், வேகமும் பயங்கரமாக இருந்தன. இதைத்தான் அலகநந் தாவின் உற்பத்தி ஸ்தானம் என்று சொல்லுகிருர்கள்.

இதைத் தாண்டிக் கொஞ்சம் தூரம் சென்றதும் ஓர் அழகான நீர்வீழ்ச்சி தென்பட்டது. அதன் பெயர் வசோ தாரா என்று சொன்னர்கள். மாலை வெயில் அந்நீர் வீழ்ச் சியின் மேல் விழ, வானவில்கள் பலவெகு அழகாகத்தோன் றின. சந்தியா காலம் வரக் கொஞ்ச நேரந்தானிருந்தது. சூரியன் அஸ்தமிக்குமுன் பத்ரி போய்ச் சேரவேண்டும். எனவே, அங்கு நிற்காமல், வேகமாய்ச் சென்ருேம். மாலை

சுமார் ஆறு மணிக்கு மானுக் கிராமம் வந்து சேர்ந்தோம். மானுக் கிராமத்திற் கருகில் சரஸ்வதிகங்கா, அலகநந்தா வுடன் வந்து சேருகிறது; சரஸ்வதி மலையைக் குடைந்து கொண்டு வருவது போல் தென்படுகிறது. சரஸ்வதியின் தோற்றம் பார்க்க வெகு அழகு. ஆனல், அந்த அழகை அனுபவிக்க எங்களுக்கு நேரமில்லை. வானம் கறுத்தது; மழைத் துளிகளும் ஓரிரண்டு விழ ஆரம்பித்தன. எனவே, வேகமாகப் பத்ரியை நோக்கி நடந்தோம்.

மானு ஒரு சிறு கிராமம். அதன் மத்தியில் ஒரு சிறு கோயிலிருந்தது. அதில் தேசிய மூவர்ணக் கொடியைப் பார்க்க எங்களுக்கு அதிக ஆச்சரியமாயும், சந்தோஷமா யும் இருந்தது.

நாங்கள் பத்ரி போய்ச் சேர்ந்த போது இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. நாங்கள் திரும்பி வருவதைப் பார்த்த நண்பர்கள் பலரும் எங்களைக் குதூகலத்துடன் வரவேற் ருர்கள். எங்களுக்கும் இந்நடைக்குப்பின் நிரம்ப அலுப் பாக இருந்தது. எனவே, பத்ரி நாராயணனை வணங்கி உணவருந்தி உறங்கச் சென்ருேம்.

அடுத்த நாள் காலை எழுந்து வெந்நீர் ஊற்றில் ஆனந்த மாய்க் குளித்தோம். பத்ரியில் அவ் வெந்நீர் ஊற்று யாத்தி ரிகர்களுக்குக் கொடுக்கும் ஆனந்தம், அதை அனுபவித்த வர்கள் தாம் அறிய முடியும். அன்று மாலை நாங்கள் புறப் பட ஏற்பாடு செய்திருந்தபடியால், பத்ரி நாராயணனிடத் தில் விடை பெற்றுக் கொள்ள வேண்டி யிருந்தது. உல கிற்கு ஆதி குரு தோன்றிய இடம் அது. மாதவன் மானி டர் உய்தற்குரிய உயர் மார்க்கத்தைக் காட்டிய இடம் அது. அந்த ஜகத் குருவின் முன்னிலையில் நின்று பிரார்த் தனை செய்தோம். அத் தேவதேவன் முன்னிலையில் எதைக் கேட்பது? சேய்க்கு வேண்டியதை, அதைப் பெற்ற தாய் அறியாளா? அடியார்களுக்கு வேண்டியதை ஆண்டவன் அறியானே? நம் பேதைமையில் நமக்கு நல்லதெது, தீய

தெது என்றறியாமல் அதையும் இதையும் வேண்டுகிறோம். நமக்கு நல்லதெது என்பதை அவன் நன்கறிவான். ஆதலால், எதுவும் கேட்கவேண்டா. ஒன்றுமாத்திரம் கேட்போம்: 'புழுவாய்ப் பிறக்கினும், புண்ணியா! உன்னடி என் மனத்தே வழுவாதிருக்க வரந்தரல்வேண்டும்'. அவன் மேல் அளவற்ற பக்தியும், அன்பும் இருப்பின், அவற்றிற்குமேல் பெறுதற் குரியவை யாவுள ?

கேதார்நாத் சுவாமிக்கு ஜே!
பத்ரிகா விசால்கி ஜே!

அனுபந்தம்

யாத்ரா மார்க்கம்

அ. கேதார்நாத்திற்கு

இந்த யாத்திரை செல்லுபவர்கள் எளிதாக அறிந்து கொள்ளும் பொருட்டு, யாத்திரா மார்க்கத்திலுள்ள ஊர்களும், தூரமும் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. கீழே கொடுக்கப்பட்ட ஊர்களும் தங்குமிடங்களுந்தான் வழியில் இருக்கின்றன என்று நினைக்கலாகாது. இவற்றைத் தவிர, பல இடங்கள், தங்க வசதியுடனிருக்கின்றன. தூரத்தின் அளவுகள் உத்தேசமாகத்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஹரித்துவாரத்திலிருந்து :

ரிஷிகேசம் வரை	15 மைல்
அதற்குமேல் தேவப்பிரயாகை வரை	44 மைல்

(இதுவரை பஸ்கள் கிடைக்கின்றன.)

குலசு சட்டி (Kulasu Chatty)	5 மைல்
ராணி பாக் (Rani Bagh)	2½ ,,
ராம்பூர் (Rampur)	3½ ,,
வில்வ கேதார் (Vilvakedar)	5½ ,,
ஸ்ரீநகர் (Srinagar)	3 ,,

(இது பெரிய ஊர். தபால் தந்தி ஆபீஸ், ஆஸ்பத்திரி முதலியன இங்கு இருக்கின்றன.)

சுக்ரதா (Sukrata)	5 மைல்
பாட்டிசாரா (Phattisera)	3 ,,
நர்கோடா (Narkota)	6 ,,
ருத்ரப்பிரயாகை (Rudraprayag)	4 ,,

(இங்கு தபால் தந்தி ஆபீஸும், ஆஸ்பத்திரி முதலியனவும் இருக்கின்றன. கேதார் போகும் வழியில் இதுவே கடைசித் தந்தி ஆபீஸ்.)

அகஸ்திய முனி (Agastyamuni)	11 ,,
குப்தகாசி (Guptakashi)	13 ,,

பேட்டா சட்டி (Fatta Chatty)	6 மைல்
ராம்பூர் (Rampur)	8 ,,

(இங்குத் திரியுக நாராயணத்திற்கு வழி பிரிகிறது.)

கௌரி குண்டம் (Gowrikund)	10 ,,
ஜங்கல் சட்டி (Jungle Chatty)	2 ,,
ராம்பாரா (Rambarra)	4 ,,
கேதார்நாத் (Kedarnath)	5 ,,
(ஆக மொத்தம் ஹரித்துவாரத்திலிருந்து கேதார்நாத் வரை)	157½ ,,

ஆ. நேராக பத்திரிகாசிரமத்திற்கு

ஹரித்துவாரத்திலிருந்து ருத்ரப்பிரயாகை வரை வந்து, அங்கு பத்திரிநாத் போகும் வழி பிரிகிறது. ருத்ரப்பிரயாகை வரை 86½ மைல்.

ருத்ரப் பிரயாகையிலிருந்து :

சிவநந்தி (Sibanandi)	7½ மைல்
ஹரி ஆசிரமம் (Hari Ashram)	2½ ,,
கமேரா (Khamera)	2 ,,
செட்வா பீபல் (Chetwa peepal)	6 ,,
கர்ணப்பிரயாகை (Karnaprayag)	4 ,,
கமலகிரி (Kamalagiri)	2 ,,
நங்காசு (Nangasu)	2½ ,,
நந்தப்பிரயாகை (Nandaprayag)	5 ,,
மிட்டானு (Mittana)	2 ,,
சாமோலி (Chamoli)	7 ,,

(இங்கு தபால் தந்தி ஆபீஸ், ஆஸ்பத்திரி முதலியன உண்டு.)

பிபல்கொடி (Pipalkoti)	7 மைல்
கருடகங்கா (Garud Ganga)	4 ,,
குலாப் சட்டி (Gulap Chatti)	5 ,,
ஜோஷி மடம் (Joshi Math)	10 ,,

இங்கு தபால் தந்தி ஆபீஸ், ஆஸ்பத்ரி முதலியண உண்டு.

பாண்டுகேசுவரம் (Pandukeswar)	6 மைல்
ஹனுமான் சட்டி (Hanuman Chatty)	6 ,,
பத்ரிநாத்	7 ,,
ஆக ஹரித்துவாரத்திலிருந்து பத்ரி நாத் வரை நேர் வழி	183 மைல்கள்

இ. யாத்ரா மார்க்கம்

கேதார்நாத் சென்று, பத்ரி சென்று திரும்புவதற்கு:

குப்த காசிக்கு மேல் சுமார் ஒரு மைலில் வழி பிரிகிறது. கேதார்நாத் சென்று அப்படியே பத்ரி செல்லு கிறவர்கள் குப்தகாசிவரை, சென்ற வழியே திரும்பி, அங்கிருந்து சாமோலிக்குச் செல்லும் பிரிவு தடத்தைத் தொடருவார்கள்.

குப்த காசியிலிருந்து

உகிமடம் (Ukhimath)	3 மைல்
பனியாகுண்டு (Puneakund)	10 ,,
சோடா சோப்தா (Chota Chopda)	½ ,,

இங்கு துங்கநாத்திற்குச் சாலே [பிரிகிறது. துங்க நாத் சென்று, ஜங்கல் சட்டியில் நேராகப் போய்ச் சேரும் பாதையைப் பிடித்துக் கொள்ளலாம். துங்கநாத் மார்க்க மாக ஜங்கல்சட்டி சுமார் 6 மைல்களிருக்கும்.

ஜங்கல்சட்டி (நேராக)	4 மைல்
மண்டல் சட்டி (Mandal Chatty)	4 ,,
கோபேசுவரம் (Gopeswar)	5 ,,
சாமோலி (Chamoli)	2 ,,

இதிலிருந்து பத்ரி மார்க்கத்தைப் பின் பற்றவேண்டும். பத்ரியிலிருந்து திரும்பும் யாத்ரா மார்க்கம் (ஆ)வில் கண்டபடி.

பொருட் குறிப்பகராதி

Printed at Commercial Printing & Publishing House,
46, Armenian Street, Madras 1

